கனவுகளின் பலாபலன்கள்

புலியூர்க் கேசிகன்



தமிழ் வளர்ச்சித் துறை

கனவுகளின் பலாபலன்கள்

புலியூர்க் கேசிகன்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர், சென்னை - 600 008.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	**கனவுகளின் பலாபலன்கள்**
ஆசிரியர்	:	**புலியூர்க் கேசிகன்**
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை-600 008
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2017
விலை	:	70
பக்கம்	:	104
படிகள்	:	1500
தாள்	:	70 ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை - 600 113
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை-600 008.

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம். ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பி எச்.டி
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ் வளர்ச்சித்துறை
எழும்பூர், சென்னை-600 008

அணிந்துரை

தமிழக அரசு சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டு உடைமை ஆக்கி, அதன் மூலம் அந்நூல்கள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துப் பயன்பெறுமாறு அவற்றை மறு அச்சுச் செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் **'கனவுகளின் பலாபலன்கள்'** என்னும் நூலும் அடங்கும்.

..கனவுகள் என்பவை மனிதனின் மனத்தில் தோன்றி அசை போடச் செய்வது. கனவு காணாத மனிதர்கள் இல்லை. அதனை பகற்கனவு, இரவு அல்லது உறக்கக் கனவு என இருவகைப் படுத்துவர். இருவகைக் கனவுகளுக்கும் கற்பனையே அடிப் படையாகிறது. எந்த ஒரு சிந்தனை மீண்டும் மீண்டும் தோன்றி மனிதனை உறங்கவிடாமல் செய்கிறதோ அதை கனவு என்கின்றனர். உறக்கத்தின் போது தோன்றுவதைக் கனவு என்கின்றனர். எல்லோரும் கனவு கண்டாலும் சிலர்தாம் அலசி ஆராய்ந்து பயன்காண விளைகின்றனர் சில கனவுகளால் நன்மையும் சில கனவுகளால் தீமையும் விளையும் எனக் கனவுகளுக்குப் பயன்கள் கூறுகிறார்கள் நிறைவேறாத ஆசைகளே கனவுகளாகத் தோன்றும் என்றும் அவை செயல்படும்போது நனவுகளாகும் என்றும் உரைக்கின்றனர். இப்படிக் காண்கின்ற கனவுகளின் பலாபலன்களைத் தொகுத்து உரைப்பதாக இந்த நூல் அமைந்துள்ளது. 1990 இல் வெளிவந்த இந்த நூல் இப்போது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் வரிசையில் மீண்டும் வெளிவந்துள்ளது.

உரையாசிரியர் என அழைக்கப்படும் புலியூர்க் கேசிகன் என்பவர் இந்த நூலைப் படைத்துள்ளார். சங்க இலக்கியங்கள் உட்பட பல்வேறு இலக்கியங்களுக்கும் உரை எழுதியிருப்பவர். யோகம், ஞானம், தவம், சமையல், சோதிடம், சித்த மருத்துவம் எனப் பல துறைகளிலும் நூல்கள் படைத்திருப்பவர். இந்த நூலில் கனவுகள், அவற்றின் பலாபலன்கள் ஆகியவற்றைத்

தொகுத்து வழங்கியுள்ளார். கனவுகள் உறுதியானால் நனவுகளாகும் என்னும் உண்மை இதன் மூலம் வெளிப் படக் காணலாம். அதனால்தான் மறைந்த பாரத ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் அனைவரும் கனவு காணுங்கள் என்றார். மகாகவி பாரதியார், "கனவு மெய்ப்பட வேண்டும்" என்று உரைப்பார்.

இந்நூல் மறு அச்சாகி மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் இந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுத் துறை, அமைச்சர் **கே.பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் **இரா.வெங்கடேசன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

உள்ளே

1. கனவுகளும் நனவுகளும் 1
2. கனவிற் காணும் பலவகைப் பொருள்கள் 14
3. சந்திரனைக் கனவிற் கண்டால் 25
4. பணத்தைக் கனவிற் கண்டால் 27
5. கனவிற் காணும் நிகழ்ச்சிகளும் அவற்றின் பலன்களும் 28
6. கனவிற் காணும் மனிதர்கள் தெய்வங்கள் 48
7. கனவிற் காணும் உடைகள் நகைகள் 55
8. கனவிற் காணும் பழங்கள் தாவரங்கள் வேளாண்மை போன்றவை...... 58
9. கனவிற் காணும் விலங்குகள் பறவைகளும் மற்றும் ஜீவராசிகளும் 69
10. கனவில் காணும் உடலின் உறுப்புக்கள் 83
11. கனவும் காட்சிகளும் 87
12. பலவகைக் கனவுகளின் பலன்கள் 90

கனவுகளின் பலாபலன்கள்

(1001 கனவுகளும் அவற்றின் பயன்களும்)

1. கனவுகளும் நனவுகளும்

மனித மனமானது, அதியற்புதமான பலப்பல அபூர்வ சக்திகளைப் பெற்றதாக அமைந்திருக்கின்றது.

இதை உணர்ந்து, இந்தச் சக்திகளை வாழ்க்கைக்குப் பயன் படுத்துகின்றவர்கள், சிறப்பையும் மேன்மையான வாழ்வையும் அடைகின்றனர்.

இதை மறந்து, உடலுணர்ச்சிகளுக்கும் ஆசை வேகங்களுக்கும் அடிமைப்பட்டு வாழ்பவர்கள், தங்கள் உலக வாழ்க்கையில் பல துன்பங்களையும் தோல்விகளையும் சந்தித்து, மனம் நொந்து மெலிகின்றனர்.

'எப்படி வாழ்வது?' என்று முடிவு செய்யும் உரிமையானது ஒவ்வொருவருக்குமே உள்ளது. அவரவர்களின் முடிவுப்படி தான், அவர்களின் உலக வாழ்க்கையும் அமைகின்றது; நடக்கின்றது.

உடல், மனம், உயிர் என்னும் இம் மூன்றின் கூட்டு இயக்கமே மனித வாழ்வாக அமைந்திருக்கின்றது. இந்த மூன்றையும் தூய்மையாகவும் வலிமையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி வைத்துக்கொள்ளவே கல்வி கேள்விகளையும். ஒழுக்கங்களையும், பயிற்சிகளையும் நம் முன்னோர்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

உடல் செம்மையாக இல்லாவிட்டால் நோய்ப்பட்டுத் தளரும். இந்த உடலின் தளர்ச்சி மனத்தையும் உயிரையும் பாதிக்கவும் செய்யும். ஆகவே, கிடைத்த உடலை நலமாகவும் வலிமையாகவும் வைத்துக்கொள்வது மிகவும் முதன்மையாகின்றது. உடல் சிதைந்தால் உயிரும் உடலை விட்டுப் போய்விடும். நம் உலக வாழ்வும் அத்துடன் முடிந்துவிடும்.

மனம், அறிவைச் சேகரித்து ஆராய்ந்து நல்ல முடிவுகளை உருவாக்கி, உடலையும் முறையாகச் செயற்பட வைக்கின்றது.

இப்படிச் செயற்படுத்தும் மனச் சக்தி அமைந்தவர்கள்தான் சிறப்பாக வாழ முடியும்.

மனம் எப்போதும் கட்டுப்பாடான ஒரு வாழ்க்கை முறையை மேற்கொள்ள விரும்புவதில்லை. உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் எளிதாக இணங்கி மயங்கிவிடுகின்றது. இந்த மயக்கம் முறையற்ற செயல்களிலே மனிதரைத் தூண்டிவிட்டு அவர் வாழ்வைச் சீர்கெடுத்து விடுகின்றது. சீர்கெட்ட வாழ்வினர் அனைவரும் இவ்வாறு நடந்து தொல்லைப்படுகின்றவர்கள் தாம்.

கோபத்தைத் தாங்க முடியாமல் ஒருவன் இன்னொருவனைக் கத்தியாற் குத்திக் கொன்று விடுகின்றான். இந்தக் கொலைக் குற்றம் அவனைச் சமூக விரோதியாக்கிவிடு கின்றது. அவன் வாழ்வையே சீர்கெடுத்து அழித்துவிடுகின்றது. அவனைச் சார்ந்த அவன் குடும்பத்தாரும் அல்லல்களுக்கு உள்ளாகின்றனர்.

இப்படியே,பலவகைஉணர்ச்சிகளும்வெறிகொள்ளும்போது, மனிதனுக்குப் பலவகைத் தீமைகளைச் செய்து விடுகின்றன.

மனத்தை முறைப்படுத்தி நடத்திச் செல்ல உதவுவது 'உள்ளம்' எனப்படும் உள்மனச் சக்தியாகும். மிகவும் நுட்பமான இந்த உள்ளத்தின் உறுதியானது மனத்தையும் உடலையும் நெறிபடச் செல்லவைக்கும். இந்த உள்ள உறுதியை அனைவரும் பெறவேண்டும்.

இந்த உள்ள உறுதியைப் பெறுவதற்கு உதவுவது 'அறிவு' ஒன்றுதான். இந்த அறிவைத் தெளிவாகவும் வளமாகவும் அடைவதற்கு உதவுவன கல்வி கேள்விகள் ஆகும்.

கல்வி கேள்விகளால் மனத்தை நெறிப்படுத்தி வாழ்க்கை நடத்தும் சக்தியானது மனித குலத்துக்கு மட்டுமே சிறப்பாக அமைந்திருக்கின்றது. பிற உயிரினங்கள் எல்லாம் தத்தம் இன இயற்கையின்படி தூண்டப்பெற்று மாறாமல் வாழ்ந்து போகின்றன.

கல்வி கேள்விகள் நம் முன்னோருடைய அறிவையும் அநுபவங்களையும் நமக்குக் கிடைக்கச் செய்கின்றன. நம் அனுபவ அறிவோடு சேர்ந்து இவை நம்முடைய அறிவையும் சிந்தனையையும் முறைப்படுத்துகின்றன; வளப்படுத்துகின்றன. எல்லா அறிவுகளையும் மனத்தின் வழியாகவே நாம் பெற்று, நம் உள்ளத்திலே பதித்து, உள்ளத்தை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே 'மனம்' அறிவைச் சேகரிப்பதற்கும், உள்ளத்தின் தெளிவை உருவாக்குவதற்கும், உள்ளத்தின் வழி நின்று வாழ்வை நடத்துவதற்கும் உதவுகின்றது எனலாம்.

இந்த மனம் எப்படிச் செயற்பட்டு வருகின்றது? இந்த மனம் மனித உடலிலே அமைந்துள்ள அறிகருவிகள் ஐந்தின் மூலமும் பல செய்திகளைப் பெற்று, உலகத்தோடு தன்னைத் தொடர்பு படுத்திக்கொண்டு இயங்கும்போது, அதை 'நனவு' என்கின்றோம். இந்த நனவின் அனுபவமானது நிகழும்போது, உடல் விழிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கும். பல செய்திகளையும் மனத்திற்குத் தொடர்ந்து தந்து கொண்டிருக் கும். மனத்தின் ஆணைப்படிபல செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கும். நனவுலக வாழ்வு என்பது இதுதான்.

விழிப்பு நிலையில், இவ்வாறு தொடர்ந்து செயற்பட்டு வருகின்ற மனமானது, அயர்ந்து உறங்கும் நிலையிலும் இதைப்போலவே செயற்பட்டுப் பல அனுபவங்களைப் பெறுகின்றது. காணல், கேட்டல், உண்டல், முகர்தல், தொடுதல் போன்றவைகளை எல்லாம் உருவாக்குகின்றது. இவ்வாறு உடற்கருவிகள் செயலற்று உறக்கத்திலே மூழ்கியிருக்கும்போதும், மனத்திலே உண்மை நிகழ்ச்சிகளைப் போலவே நிகழுகின்ற பலவகையான அநுபவக் காட்சிகளைத்தான் 'கனவு' என்று கூறுகின்றோம்.

ஒரு பழத்தை நனவில் உண்ணும் போது நாம் மகிழ்ச்சி யடைகின்றோம். இப்படியே கனவில் உண்ணும் போதும் மகிழ்கின்றோம். ஆனால், பழத்தை நனவில் உண்பதால் உடலுக்குக் கிடைக்கும் சக்தி எதுவும், கனவில் உண்ணும் போது கிடைப்பதில்லை. இதுதான் நனவுக்கும் கனவுக்கும் உள்ள வேறுபாடு. நனவு, கனவு என்னும் இந்த இரண்டு நிலைகளும் இல்லாமல் 'நினைவு' எனவும், 'கற்பனை' எனவும், சிந்தனை எனவும் வேறுசில மனோ விகாரங்களும் ஏற்படுகின்றன.

'நினைவு' என்பது முன்னர் அறிந்து அனுபவித்தவற்றையும். ஒருவர் ஒரு அனுபவத்தைக் கூறி விளக்கும் போது அந்த அனுபவத்தையும் மனத்திலேயே காட்சிப் படுத்திக் காணுகின்ற, அனுபவிக்கின்ற, ஒருவகை மனோநிலையாகும்.

'கற்பனை' என்பது மனத்தால் மட்டும் தொடர்ந்து கற்பித்துக்கொண்டு பெறுகின்ற பல வகையான உணர்ச்சிகளும் ஆகும்.

'சிந்தனை' என்பது நன்மை தீமைகளைப் பற்றித் தொடர்ந்து எண்ணமிட்டு, அறிவளவிலே ஆராய்ந்து, தீமை களை விலக்கி, நன்மைகளில் மட்டுமே மனத்தைச் செலுத்தும் மனோ முயற்சியாகும்.

கனவு, நினைவு, கற்பனை, சிந்தனை போன்றவற்றிற் கெல்லாம், மேல்மனத்தையும் கடந்து நுட்பமாக விளங்கும் ஆழ்மனம், அல்லது உள்ளத்தின் தொடர்பு இயக்கமும் அவசியமாகும்.

இந்த ஆழ்மனந்தான், மேல்மனத்தால் அறியப்படும் செய்திகள் பலவற்றையும், தன்னுள்ளே சேகரித்து வகைப்படுத்தி வைத்துக்கொண்டு, அவ்வப்போது மேல்மனத்துக்குத் தேவையானவற்றைத் தந்து, மனத்தை வழி நடத்திச் செல்வதாகும். இந்த உள்ளத்தின் வலிமைதான் மனிதருக்குச் சிறந்த பெரும் செல்வமுமாகும். இந்த உள்ளம், எல்லாவற்றையும் எப்போதும் வெளியே திறந்து கொட்டிவிடுவதில்லை. எதையெதை எவ்வெப்போது வெளியிட்டு மனத்தைத் தூண்டவேண்டும் என்பதை அறிந்து அந்த அளவுக்கும் மட்டுமே செயற்படுவதாகும். பிறவற்றைத் தன்னுள்ளேயே தொகுத்துப்பேணி அடக்கிக்காப்பதும் ஆகும். வேண்டாதவற்றை நினைவிலிருந்து அறவே ஒதுக்கி விடுவதும் ஆகும்.

உறக்கத்தில், உடலின் உறுப்புக்களில் பலவும் ஒய்வெடுக்கின்றன. செரிமான உறுப்புக்கள், குருதியோட்ட உறுப்புக்கள், மூச்சு உறுப்புக்கள் போன்றவை மட்டும் தொடர்ந்து வேலை செய்து வருகின்றன. கண், காது, கால், கை போன்றவை எல்லாம் உறக்கத்தில் செயற்படுவதில்லை.

ஆனால், இப்படிப்பட்ட ஆழ்ந்த உறக்கத்திலும் உள்மனத்திலேயுள்ள சில ஆழமான எண்ணங்கள் மேல் மனத்திலே எழுந்து தோன்றிப் படர்ந்து விரிகின்றன. இப்படி எழுந்து விரியும்போது பல வியத்தகு சம்பவங்களின் அநுபவத்திலே மனம் ஈடுபட்டு அநுபவிக்கின்றது. சில சமயங்களில் இந்த அநுபவங்களில் உடலும் கலந்துகொள்ளு கின்றது.

கண் மூடியிருக்கும்போதே எண்ணற்ற காட்சிகளைக் காண்கின்றது. காதுத் தொடர்பின்றியே விசித்திரக் குரல்களைக் கேட்கின்றது. இப்படியே உடலின் அறி கருவிகளின் நேரான தொடர்பும், உதவியுமில்லாமல், இவைகளால் விழிப்பு நிலையில் அறியப்படும் உணர்வுகளை மனம் தான் மட்டும் படைத்துத்

தன்னுள் அனுபவிக்கின்றது. இப்படி மனத்தினுள் நேர்கின்ற அநுபவத்தைத்தான் 'கனவு' என்கின்றோம்.

இந்தக் கனவுகள் பெரும்பாலும் எல்லாருக்குமே ஏற்படுகின்றன, சில கனவுகள் நல்லவையாக இருக்கின்றன. சில கனவுகளோ பயங்கரமானவையாக அமைகின்றன. இப்படிக் கனவுகள் இருவிதமாக ஏற்படக் காரணம் என்ன? இதைப் பற்றி அறிஞர்கள் நன்றாக ஆராய்ந்தனர். அவர்களின் முடிவுகளையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

நேரடியாக வெளியிட முடியாமல், உள்ளத்தினுள்ளேயே அழுத்திவைத்திருக்கும் எண்ணங்கள் பல உள்ளன. இந்த எண்ணங்களை உள்ளம் உறக்கத்தின்போது மனத்தளவில் எழுப்பிச் சுகம் காணச் சில சமயங்களில் முயலுகின்றது. இந்த முயற்சிகளே கனவுக் காட்சிகளாகத் தோன்றி விரிகின்றன. ஆகவே, கனவுகள் என்பவை பெரும்பாலும் உள்ளத்திலே அழுத்திப் புறத்தே வெளிப்படாமல் இருக்கும் எண்ணங்களின் மாயத் தோற்றங்களால் ஏற்படுவனவே என்கின்றனர் சிலர்.

மனம் தன்னைப் பற்றியும், தன் வாழ்வைப் பற்றியும் சதா சிந்தித்துக்கொண்டே இருக்கின்றது. இந்தச் சிந்தனையின் விளைவாக மனத்தில் விரிகின்ற நன்மை தீமைகளைப் பற்றிய முன் எச்சரிக்கைகள் பலவுமே கனவுக் காட்சிகள் என்றும் நம்பு கின்றார்கள் பலர். தீவிரமான உள்ளத்து உணர்ச்சிகள் இவ்வாறு கனவில் மேலெழுந்து வெளிப்படுகின்றன என்பதும் ஒரு முடிவாகும். மனைவியைப் பிரிந்திருக்கும் கணவன் அவளைச் சந்தித்து மகிழும் காலத்தை ஆவலோடு சிந்தித்துக் கொண்டிருப்பான். இவன் அவளை அடைந்து மகிழ்வதுபோல அடிக்கடி கனவுகளையும் காண்பான். இந்தக் கனவுகளில் ஒரு சுகத்தையும் காண்பான்.

இப்படியே பாசத்தின் மிகுதியால் ஒருவரைப் பிரிந்திருக்கும் ஒருவர், அவரைக் கனவுகளில் அடிக்கடி சந்தித்து மகிழ்வார். இப்படியே, நிறைவேறாத பல தீவிரமான ஆசைகளும் கனவுகளில் நிறைவேறினாற் போல விரிந்து மனத்தை இன்புறுத்துகின்றன.

ஒவ்வொரு தீவிரமான உணர்ச்சியும் உள்ளத்தினுள்ளேயே அதை மூடிவைத்து அழுத்தப்படும் போது, அதன் தொடர்பான கனவுக் காட்சிகளாக மேல்மனத்திலே விரிகின்றன என்பவர்களே பலர். இவை உண்மையாகவும் பல சமயங்களில் விளங்குகின்றன.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் மிகவும் குழம்பித் தவித்துக் கொண்டிருக்கும் ஒருவரின் கனவிலே, அதற்கான தீர்வு வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. வெளிமனம் செயலற்றுப் புறம்போகாமல் இருக்கும்போது, உள்மனமானது இவ்வாறு எண்ணங்களைத் தானே தெளிவு படுத்துகின்றது என்பதும் இதனால் ஏற்கக்கூடியதாகவே தோன்றுகின்றது.

நமக்கு வேண்டியவர்களும், வேண்டாதவர்களும், நம்மைப் பற்றிப் பல எண்ணங்களைத் தீவிரமாகச் சில சமயங்களில் எண்ணுகின்றார்கள். அந்த எண்ணங்கள் வந்து நம்மைக் கனவில் தாக்குகின்றன. அவற்றின் காரணமாகத் தோன்றுவனவே சில கனவுக் காட்சிகள் என்பார்கள் வேறு சிலர்.

எண்ணங்களின் சக்தியைப் பற்றி அறிந்து கூறும் மன வியலாரிற் பலரும், இந்த எண்ணப் பாய்ச்சல் என்னும் கருத்தை ஆதரிக்கின்றனர். அஃதாவது, வேற்று மனிதர்களின் தீவிரமான எண்ணத் தாக்கங்களே கனவுகளை உருவாக்குகின்றன என்கின்றார்கள். இந்த உலகிலே நுட்பமான உடலோடு உலவிவரும் ஆவிகள் ஏராளமாக உள்ளன. இவற்றுள் நல்லவையும் உள்ளன; கெட்டவையும் உள்ளன. இவை நாம் உறங்கும் போது, நம் ஆவியுடன் (உயிருடன்) நேரடியாகத் தொடர்பு கொண்டு சிலவற்றைத் தெரிவிக்க நினைக்கின்றன. இவற்றின் தாக்கங்களே நல்ல கனவுகளாகவும் கெட்ட கனவுகளாகவும் விரிகின்றன என்றும் சிலர் வலியுறுத்துகின்றனர்.

மனம் பேதலித்தவர்களின் பேச்சையும் செயலையும் கவனியுங்கள். அவர்களளவில் அவை நனவு நிகழ்ச்சிகளே! அவர்களின் மன அனுபவங்களே! மனம் தன் கட்டுப்பாட்டை இழந்துவிடும்போது இந்த நிலை தோன்றுகின்றது. உறக்கத்திலும் மனம் தன் கட்டுப்பாட்டை இழந்துவிடுவதால், இப்படியே பல கனவுக் காட்சிகள் விரிகின்றன. இவ்வாறும் சிலர் கூறுவர்.

இந்த உடலிலே இருக்கும் நம் உயிரானது இதற்கு முன்பும் பல உடல்களை எடுத்துப் பிறந்து வாழ்ந்திருக்கின்றது. அந்த முற்பிறப்பின் அறிவுகள் அதனிடம் இப்பிறப்பிலும் தொடர்ந்து சிலபோது வெளிப்படக்கூடும். இப்படி வெளிப்படும் முற்பிறவி அனுபவங்களும் சில கனவுகளுக்குக் காரணமாகின்றன என்பார்கள் இன்னும் சிலர்.

கனவுகள் எதனால் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி இன்னும் எவ்வளவோ கருத்துக்கள் கூறப்படுகின்றன. கனவுகளைத்

தெளிவாக ஆராய்ந்தால், ஒருவருடைய மனோ நிலையையும், அவர் வாழ்வின் அமைப்பையும் போக்கையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் என்று உளவியல் அறிஞர்கள் பலரும் வலியுறுத்துகின்றனர்.

ஆகவே, நனவைப் போலவே கனவும் நம் வாழ்வை உருவாக்க ஒருவகையில் நுட்பமாக உதவுகின்றது என்று நாம் கருதலாம்.

கனவுகளை ஆராய்ந்து, ஒவ்வொரு கனவுக் காட்சியும் ஒருவருக்கு என்னென்ன பலன்களைத் தரக்கூடும் என்பதை நம் முன்னோர்கள் வரையறுத்து நம்பிக்கையோடு கூறியிருக்கின்றனர். கனவுகள் வெறுந் தோற்றம் அல்ல; அவை ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய நன்மை தீமைகளை முன்னதாகவே அறிவிக்கும் குறிப்புக்கள் என்பது நம் முன்னோர்களின் அழுத்தமான முடிவாகும்.

இந்த நம்பிக்கை, உலகெங்கும் உள்ளவர்களான பல்வேறு நாட்டினரிடமும் நிலவி வருகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த நம்பிக்கை உலகில் நிலவியும் வருகின்றது.

எதிர்பாராமல் கேட்கும் சொற்கள், ஒலிகள் போன்றவையும், எதிர்ப்படும் நிமித்தங்களும் அடுத்தபடியாக நிகழப்போகும் நன்மை தீமைகளை முன்னதாக நமக்கு அறிவிப்பனவே என்று உறுதியாக நம்புகின்றவர்கள் உலகில் மிகப் பலர். இவ்வாறாகக் கனவுகளும் நன்மையோ தீமையோ ஏதாவது ஒரு பலனைத் தெரிவிக்கும் முன்னறிவிப்புக்களே என்பதும் மிகப்பலரின் முடிவாகும்.

இந்த முடிவைத் தழுவிக் கனவுகளின் பலன்கள் முறையாக வரையறுத்துச் சொல்லப்பட்டுவருகின்றன. நம் நாட்டிலும் மற்றைய நாடுகளிலும் இப்படிப் பல நூல்கள் உள்ளன. அவற்றின் சாரமாகச் சிலவற்றைத் தொகுத்து தருவதற்கு முயற்சிக்கின்றேன்.

கனவுகளை அலட்சியப்படுத்தாதீர்கள். கனவு காண்பது மனத்தளர்ச்சியால் என்றும் ஒதுக்காதீர்கள். விழித்ததும் கண்ட கனவுகளை நினைவுபடுத்திக் குறித்துவையுங்கள். அவை குறிப்பிட்டுக் காட்டும் பலன்களை ஆராயுங்கள். அந்தப் பலன்கள் வாழ்வில் எப்படி நடைபெறுகின்றன என்றும் கவனியுங்கள். கனவுக்காட்சிகள் உங்கள் நடைமுறை உலகவாழ்வுக்கு வழிகாட்டி உதவுகின்ற ஞான வெளிச்சங்களாக விளங்கக் காண்பீர்கள்.

ஒவ்வொரு நாளும் உறக்கத்தில் நாம் பலவகையான கனவுகளைக் கண்டு வருகின்றோம். மனமும், ஒடுங்கிய ஆழ்ந்த உறக்கம் ஒரு குறிப்பிட்ட நேரம் வரையில்தான் ஏற்படும். அதனைத் தொடர்ந்து மனம் விழித்துக் கொள்ளும். கனவுகள் பல தோன்றும்.

இந்தக் கனவுகளில் பெரும்பாலானவை விழித்தவுடன் நினைவிலிருந்து மறைந்து விடலாம். சில கனவுகளை விழித்த பின்னும் மறக்கமாட்டோம். இவற்றை முதலில் ஆராய்ந்து பாருங்கள்.

கனவுகளை ஆராயும் பழக்கம் தொடரத் தொடரக் கனவுகளை கண்விழித்த பின்னும் நினைவு வைத்திருக்கும் பழக்கமும் வளர்ந்து விடும். கனவுகள் நினைவுகளைப் போலவே அப்போது அனுபவங்களாகவும் மாறிவிடும். இந்த அனுபவங் களிலே ஒருவகையான இன்பமும் ஏற்படத் தொடங்கிவிடும்.

ஆர்வமில்லாத எதிலும் மனம் தீவிரமாகப் பற்றுவதில்லை. எனவே ஆர்வத்தோடு கனவுகளை ஆராய்ந்து காண முயலுங்கள். உங்கள் வாழ்க்கைக்குக் கனவுகளையும் பயன்படுத்த முயலுங்கள். இந்த அனுபவம் உங்களுக்கு உறுதியாக நல்ல பல நன்மைகளைத் தரக் கூடும்.

கனவுப் பலன்கள் வெறும் மூடநம்பிக்கைகளின் விரிவு அல்ல. அவை முனனோர் அநுபவத்தில் கண்டறிந்த உண்மைகள். இந்த நம்பிக்கையுடன் கனவுகளை ஆராய்பவர்களே பலன் காண்பார்கள்.

கனவுகள் உறக்கத்தில் தோன்றும் மாயத் தோற்றங்கள் என்பவர்கள், இப்படிப்பட்ட மாயத் தோற்றங்களைக் காட்டி மயக்குவதும் மனந்தான் என்பதை மறக்கக்கூடாது.

கோடை வெயில் எரிக்கும் வெட்டவெளிப் பகுதியிலே, நல்ல வெயில் நேரத்தில் போகும்போது நீர்ப்பெருக்குப் போன்று கானலை நினைத்து மயங்குகின்றோம். நாம் மட்டுமல்ல விலங்குகளும் மயங்குகின்றன. கடுமையான நீர் வேட்கையின் தாக்கத்தால் உண்ணும் நீரைத் தேடித்திரிந்து அலையும்போது இந்த மாயத்தோற்றம் ஏற்படுகின்றது.

இருட்டு வேளையில் இப்படிப் பலவித மயககங்கள் ஏற்படக்கூடும். நிழலை மனிதரென்று மயங்குவதும், சலசலப்பைக் கேட்டுக் கொடிய மிருகங்கள் அல்லது எதிரிகளாக நினைத்து

நடுங்குவதும், காற்றால் அசையும் நிழலசைவுகளைக் கண்டு காற்றோ கருப்போ என்று நடுங்குவதம் மிகப்பலருக்கும் இயல்பாகின்றன. இவை அச்சவுணர்வால் ஏற்படுகின்ற மாயத் தோற்றங்களாகும்.

இனி பாவனா தோற்றங்கள் என்றும் ஒருவகையான காட்சிகள் மனத்தில் விரிகின்றன. சிந்தனைத் தோற்றங்கள் என்றும் இவற்றைக் கூறலாம். ஆழ்ந்த தெய்வ பக்தியுள்ளவர்கள் தங்கள் இஷ்ட தெய்வத்தை அடிக்கடி கனவில் காண்பார்கள். திட்டமிட்டு வடிவமைக்கும் உருவை ஓவியர்களும் சிற்பிகளும் மனக்காட்சிகளாகக் காண்பார்கள். கலைஞர்கள் பலருக்கும் இந்த அநுபவம் ஏற்படுவதுண்டு.

இவர்கள் மனத்திற் காட்சிகளைப் பாவனையாகத் தெளிவாக முதலில் உருவாக்கிக் கொள்ளுகின்றனர். இப்படி உருவாக்கிக்கொண்ட பின்னர் அவற்றை நனவாகப் படைத்துக் காட்டுகின்றனர். எண்ணத்தில் இப்படிச் செம்மையாக ஒன்றைப் படைத்துக்கொள்ளும் ஆற்றல் மிகுந்தவர்களே சிறந்த படைப் பாளிகளாகிப் புகழ் பெறுகின்றனர்.

இந்த மாயத் தோற்றங்களும் பாவனைக் காட்சிகளும் விழித்திருக்கும்போது மனத்தில் உருவாவது போலவே, உறக்கத்திலிருக்கும் போது கனவுக் காட்சிகளாகவும் தோன்றக் கூடும். இப்படிப்பட்ட தோற்றங்களை இவர்கள் தெய்வங்களின் அருளிச்செயலால் ஏற்படுவன என்றும் நினைக்கின்றனர்.

மனித மனத்திற்கு இன்னொரு ஈடுபாடும் இருப்பதைக் காணலாம். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் தான் அறிந்தது, தான் அறியாதது என்று பாகுபடுத்தியே மனம் நோக்குகின்றது. அறியாதவைகளைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை. ஆனால், அறிந்தவைகளைப் பற்றியோ விருப்பத்திற்குரியது வெறுப்பிற்குரியது என்று பேதப்படுத்தியே காணுகின்றது. இந்தப் பேதத்தின் அடிப்படையிலேயே எண்ணங்களும் உருவாகின்றன.

தனக்கு இனியதையும் நன்மையானதையும் விரும்புவதும், இன்னாததையும் தீமையானதையும் வெறுப்பதும் மனித இயல்புதான். இந்த உணர்வுகள் காரணமாகவும் பல கனவுகள் ஏற்படுகின்றன.

தனக்கு உரிமையானது என்ற எண்ணம் பலவகைச் சிந்தனை களை எழுப்புவது போலவே, பலவகைக் கனவுகளுக்கும்

காரணமாகின்றன. ஒரு பொருளையோ உயிரினத்தையோ நமக்கு உரியதென்று எண்ணும்போது அதன்மீது தீவிரமான அக்கறையும் பற்றுதலும் நமக்கு ஏற்படுகின்றன. இவை கனவுக் காட்சிகளாக விரிந்து தோன்றுகின்றன.

கடையில் ஒரு பொருள் இருக்கின்றது. அதை நாம் விலைக்கு வாங்கியதும், அது நமதாகி விடுகின்றது. இப்படி நமதானதும் அதன்மீது நமக்கு ஒருவகையான உரிமைப் பாசம் ஏற்பட்டு விடுகின்றது. அதன் நலனில் அக்கறை உண்டாகிவிடுகின்றது. இதுவும் பற்பல நினைவுகளுக்குக் காரணமாவது போலவே கனவுகளுக்கும் காரணமாகி விடுகின்றன. உரிமைப் பொருளைக் காக்கும் மனவேகம் அவை தொடர்பான கனவுகளை ஏற்படுத்துகின்றன. மனிதர்கள் எதையும் நன்றாகச் சிந்தித்துத்தெளிந்து தான் எதையும் செய்யத் தொடங்கவேண்டும். இதுதான் உறுதியான வெற்றிக்குக் காரணமாகும்.

இந்தத் தெளிவும் உறுதியான நம்பிக்கையும் பலருக்கு இருப்பதில்லை. இவர்களிடம் ‘எப்படி நடக்குமோ’ என்னும் கவலை ஏற்பட்டுவிடுகின்றது. இவர்கள் தங்கள் நம்பிக்கைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு ஏதாவது ஒரு வழியினைத் தேடு கின்றனர்.

சுபசகுனங்கள், நல்லதற்கான அறிகுறிகள், நற்சொற்கள், நல் வாழ்த்துக்கள் போன்றவைகள் இதற்கு உதவுகின்றன. இவை பலவும் எதிர்ப்படும் எதிர்பாராதவையும் ஆகும். இவை நல்லவையாகத் தோன்றும் போது வெற்றியில் நம்பிக்கையோடு செயற்படும் ஊக்கம் ஏற்படுகின்றது. இவை தீயவையாகத் தோன்றும்போது தளர்வும் சலிப்பும் ஏற்படுகின்றது. எண்ணங்களைச் செயற்படுத்துவதைத் தள்ளிப் போடவும் தோன்றுகின்றது.

இவை அவற்றின் தன்மைகளையும் அவற்றைப் பற்றி மனிதர்கள் கொண்டுள்ள அநுபவமுடிவுகளையும் பொறுத் தவைதாம். கன்றோடுவரும் பாற்பசுவைக் காணும் போது போகின்ற காரியம் பெரும்பயனைத் தருவதாக அமையும் என்று நினைக்கின்றோம். சீறிவரும் முரட்டுக் காளையை எதிரே வரக்கண்டால் ஆபத்தையோ பகையையோ எதிர்பார்க்கின் றோம். ஒருவர் ஏணியில் ஏறிச் செல்வதைக் கண்டால் வெற்றியை எதிர்பார்க்கின்றோம். ஒருவர் ஏணியிலிருந்து தவறி விழுவதைக் கண்டால் இடையூறுகளையும் தொல்லைகளையும்

அறிவிப்பதாக நம்புகின்றோம். ஏணியிலிருந்து இறங்குவதைக் கண்டால் நமக்கும் இறக்கமோ தோல்வியோ ஏற்படும் என்று நினைக்கின்றோம்.

நம்மைச் சுற்றி நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இவ்வாறு நம் வாழ்க்கைப் போக்குக்கும் செயல்களுக்கும் நன்மை தீமைகள் நிகழ்வதன் அறிகுறிகளைக் காணுகின்றோம். கனவுகளைப் பொறுத்தும் இப்படிப்பட்ட நம்பிக்கைகள் நமக்கு இயற்கையாக எழுகின்றன. இப்படிக் கனவுகளின் பலன்களை மதிப்பிட்டு வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் பழக்கமும் பரவலாக விளங்கிவருகின்றது.

பொதுவாக உயர்ந்த பொருள்கள், சிறந்த பொருள்கள், ஒளியுள்ள பொருள்கள், இன்பமும் மகிழ்ச்சியும் தரும் நிகழ்ச்சிகள் போன்றவை கனவில் தோன்றினால் நல்ல பலன்கள் ஏற்படுமென்று சொல்லலாம்.

இவற்றுக்கு மாறுபாடான பலவும் மாறுபாடான பலன்களையே தரும் என்றும் கூறலாம்.

மலைமேல் ஏறுவதாகக் கனவு காண்பவன் முன்னேற்றத்தை அடைவான்; உயர்ச்சியைப் பெறுவான். உயரத்திலிருந்து கீழே விழுபவன், தோல்வியையும் வீழ்ச்சியையும் அடைவான். பள்ளத்தில் வீழ்ந்ததாகக் கனவு காண்பவன் வீழ்ச்சியை அடைவான். பள்ளத்திலிருந்து ஏறித் தப்பி விடுவதாகக் காண்பவன் தொல்லைகளைத் தன் தீவிரமான முயற்சியால் கடந்துவிடுவான்.

இப்படிப் பலன்கள் கனவுகள் காட்சிகளின் நுட்பமான தன்மைகளையும் அவை ஏற்படுத்தும் உணர்ச்சிக் குறிகளையும் கருத்திற்கொண்டே கருதப்படுகின்றன. இவை பெரும்பாலும் சரியாகவும் விளங்குகின்றன.

இங்கே பலவகைக் கனவுகளின் பலன்கள் சொல்லப் பட்டுள்ளன. இதையெல்லாம் தோன்றும் கனவுகளையும் இங்கே சொன்ன உணர்வுக் குறிப்பின் அடிப்படையில் கருதிக் கொள்ளலாம். நல்ல உணர்வுகளைத் தருவன நன்மைகளைத் தரும் எனவும், மாறுபட்ட உணர்வுகளைத் தருவன மாறான உணர்வுகளைத் தரும் எனவும் அறிந்து கொள்ளவேண்டும். இனி, மேலே படியுங்கள். கனவுகளையும் பலனறிந்து உங்களுக்கு உதவும் துணையாக்கிக்கொள்ள முயலுங்கள்.

கனவுகளின் - சிலகுறிப்புகள்

பகலில் காணும் கனவுகள் பெரும்பாலும் பலன் தருவதில்லை. எனவே, அவைகட்குப் பலன்களும் ஏதும் சொல்லப்படுவதில்லை.

இரவின் முதற்சாமத்தில், அதாவது இரவு 9 மணிக்குள் காணும் சொப்பனங்களின் பலன்கள் ஓர் ஆண்டுக் காலத்திற்குள் நிகழும்.

இரவின் இரண்டாம் சாமத்தில், அதாவது இரவு 9 முதல் 12 மணிக்குள் காணும் சொப்பனங்களின் பலன்கள் மூன்று மாத காலத்திற்குள் பலன் தரும்.

இரவின் மூன்றாம் சாமத்தில், அதாவது இரவு 12 மணி முதல் பின்னிரவு 3 மணி வரை காணும் சொப்பனங்கள் ஒரு மாத காலத்தில் பலன் தரும்.

இரவின் நான்காம் சாமத்தில் அதாவது பின்னிரவு மூன்று முதல் அதிகாலை 6 மணி வரை காணும் சொப்பனங்கள் 10 நாட்களில் பலனளிக்கும்.

விடியல் வேளையில் காணும் சொப்பனங்கள் உடனேயே பலனளிக்கத் தொடங்கும்.

யோகமான கனவுகளைக் கண்டவர்கள் மீண்டும் உறங்கக் கூடாது என்பார்கள். இப்படி இருந்தால்தான் கனவுகள் நல்ல பலன்களை முழுமையாகத் தரும்.

மீண்டும் உறங்கி வேறு கனவுகள் வந்தால், அந்தக் கனவுகளே வலுவானவையாக விளங்கும். முன் கனவுகள் பலிக்காமற் போகலாம்.

கெட்ட கனவுகள் கண்டவர்கள், விழிப்பு வந்ததும் எழுந்து அமர்ந்து தெய்வத்தைத் தியானித்துப் பின்னர் உறக்கத்தை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து விழித்திருக்கக் கூடாது.

கெட்ட கனவுகளுக்குப் பின்னர் நல்ல கனவுகளைக் கண்டால், கெட்ட கனவுகள் பலன்தராமற் போய்விடும். பின்னர்க் கண்ட நல்ல கனவுகளே பலன் தரும். இதனால் தான், கெட்ட கனவு கண்டு விழித்தவர்கள், தெய்வங்களைச் சிந்தித்த படி மீண்டும் உறங்குவது நல்லது என்று கூறப்படுகின்றது.

நல்ல கனவுகளைக் கண்டதைத் தொடர்ந்து அதன் பின்னர் கெட்டகனவுகளைக் கண்டால், நல்ல கனவுகளின் பலன்கள் இல்லாமற்போய்க் கெட்ட கனவுகளின் பலன்களே நடைபெறத் தொடங்கும். இதனாலேதான் நல்ல கனவுகளைக் கண்டு விழித்தவர்கள் மீண்டும் படுத்து உறங்காமல் விழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இவர்கள் எழுந்து முகம் கழுவிக்கொண்டு பயனுள்ள நல்ல சிந்தனைகளில் ஈடுபடலாம்.

கனவுகள் வலுவானதாகும் போது மனத்திற் பதிந்து உணர்ச்சிகளைப் பாதிக்கின்றன. ஊக்கத்தையோ தளர்ச்சியை யோ, துணிவையோ, அச்சத்தையோ, நம்பிக்கையையோ, அவ நம்பிக்கையையோ ஏற்படுத்துகின்றன.

எண்ணங்களே, எண்ணங்களின் உணர்ச்சித் தூண்டல்களே வாழ்வைத் தூண்டி இயக்கி வருகின்றன. இதனால் கனவுகள் உறுதியாகப் பலனைத் தருகின்றன என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். கனவுகளைக் கவனித்து வாழ்க்கைக்குப் பயன்படுமாறு சிந்தனைகளை வடிவமைத்துக் கொள்ளவும் முயல வேண்டும்.

எல்லா நிமித்தங்களும் உணர்ச்சிப்பாதிப்பை ஏற்படுத்துவது உண்மையாகும். அநுபவத்தில் இது உண்மையாகி விடுவதை அனைவரும் கண்டிருக்கலாம்.

பகற் கனவுகள் பலன் தருவதில்லை என்பது, பகல் உறங்கு வதற்கும் கனவு காண்பதற்கும் உரிய காலம் அல்ல; உழைப்பதற்கு உரிய காலம் என்பதனால்தான். பகலில் உறங்குவது என்பது நோய்ப்பாதிப்பையும் சோம்பலையும் ஏற்படுத்தும். நோயாளி களும் முதிர்ந்தவர்களும் சிறு குழந்தைகளுமே பகலில் தூங்கலாம். பிறர் தூங்குவதைத் தவிர்ப்பதே நல்லது. தூங்காமலிருந்தால் கனவும் தோன்றாது.

★★★

2. கனவிற் காணும் பலவகைப் பொருள்கள்

1. அம்பைக் கனவில் காண்பது, மனம் வருந்தச் செய்யும் கடிதமோ அல்லது தகவலோ வரப்போவதைக் காட்டும்.

2. ஒரு கோடரியைக் கனவில் காண்பது, செய்யும் முயற்சி களுக்கு ஆதரவாக, ஒரு வலுவான துணையோ, அல்லது சிறந்த உதவியோ கிடைக்கப் போவதைக் காட்டும்.

3. நங்கூரத்தைக் கனவிற் காண்பது, கடல் கடந்து வெளிநாடு களுக்குப் போகின்ற பயணம் விரைவில் ஏற்படப் போகின் றதைக் காட்டும். அல்லது, வெளிநாட்டுத் தொடர்புகளால் வரக்கூடிய நன்மைகளையோ, நல்ல தகவல்களையோ உணர்த்தும்.

4. பந்து விளையாடுவது போலக் காணும் கனவானது பணவரவைக் காட்டுவதாகும்.

5. பந்து உருண்டு போவதுபோலப் பார்ப்பது, எதிர் பாராமல் நிறையப் பணம் வந்து, அந்தப் பணமானது விரைவிற் செலவழிந்து கையைவிட்டுப் போவதைக் காட்டும்.

6. இனிதான இசை முழக்கத்தைக் கேட்பது, செய்யும் முயற்சியில் அதிர்ஷ்டமான ஒரு முன்னேற்றம் ஏற்படப் போவதைக் காட்டும்.

7. இசைக் கருவிகளைக் காண்பதும், இதேபோல் அதிர்ஷ்ட மானதுதான். அது நல்ல தொழில் வளர்ச்சியைக் காட்டும்.

8. பெரும் பானை அல்லது ஒரு மிடாவில் தண்ணீர் நிரம்பி இருப்பதைக் காண்பது, சீக்கிரமாகவே நிறையப் பணம் வந்து சேர்வதை உணர்த்துவதாகும்.

9. ஒரு படகைக் கனவிலே கண்டால், விரைவில் மிகவும் நெருக்கமான ஒரு நண்பரின் வரவை எதிர்பார்க்கலாம்.

10. ஒரு பெரிய கட்டிடத்தைக் கனவிற் கண்டால், காதலில் அல்லது தொழிலில் நன்மையான முன்னேற்றம் ஏற்படும். காணும் கட்டிடத்தின் உயர்வுக்குத் தக்கபடி பெறுகின்ற உயர்ச்சியும் அமையும்.

11. கேக்குகள் மற்றும் இனிய உணவுகளைக் கனவிற் கண்டால், இளைஞர்கள் திருமண யோகத்தை விரைவில் எதிர்பார்க்கலாம்.மற்றவர்களும் ஏதாவது சிறந்த நன்மைகளை எதிர்நோக்கலாம்.

12. சீட்டு விளையாடி மகிழ்வது போலக் கனவு கண்டால் சீக்கிரமாகத் திருமணம் ஏற்படுவதை அது அறிவிக்கும். திருமணமானவர்களுக்கு வரப்போகும் உற்சாகப் பெருக்கத்தை உணர்த்தும். சீட்டில் பணத்தை இழப்பது தோல்விக்கு அறிகுறியாகும்.

13. தேவாலயங்களைக் கனவிற் காண்பது, அதிர்ஷ்டப் பெருக்கத்தையும் செல்வ வளமையையும் அதிகரிக்கும் கனவாகும்.

14. ஒரு புதைகுழியைக் கனவில் காண்பது, செல்வப் பெருக்கம் விரைவில் ஏற்படப் போவதைக் காட்டும்.

15. ஒரு நாற்காலி அல்லது ஏதாவது ஓர் இருக்கையைக் கனவில் காண்பது, வீட்டில் ஒரு நபர் அதிகமாகப் போவதை அறிவிக்கும்.

16. புகைக்கூண்டு அதிர்ஷ்டந்தரும் ஒரு கனவுக் காட்சி தான். எவ்வளவு உயரமாகத் தோன்றுகின்றதோ, அந்த அளவுக்கு வாழ்வில் உயர்வைக் காணலாம்.

17. செப்புக் காசுகளைக் கனவில் காண்பது, ஓர் அதிர்ஷ்டம் விரைவில் வரப்போவதை அறிவிக்கும்.

18. வெள்ளிக் காசுகள், மனக் கவலைகளை எதிர்பார்க்க வேண்டும் என்று எச்சரிக்கும்.

19. தங்கக் காசுகள், வியாபாரம் அல்லது தொழில்களில் சில தொல்லைகளை எதிர்பார்க்கவேண்டும் என்று எச்சரிக்கும்.

20. கத்தியைக் கனவிற் கண்டால், ஒரு நண்பன் மூலம் ஏதாவது நன்மை ஏற்படலாம் என்று உணர்த்தும்.

21. படகுத்துறை, கப்பல் துறைகளைக் கனவிற் கண்டால் வெளி நாடுகளிலிருந்து ஒரு நல்ல தகவலை எதிர்பார்க்கலாம்.

22. எதிரொலியைக் கனவில் கேட்பது, நீங்களோ, உங்கள் உறவினருள் ஒருவரோ நோய்வாய்ப்படப் போவதைத் தெரிவிக்கும்.

23. பச்சைக் கல்லைக் கனவில் பார்த்தால், ஒரு நல்ல முன்னேற்றமான அதிர்ஷ்டமும், அதனால் மகிழ்ச்சியும் விரைவில் வாய்க்கக் கூடும்.

24. காலியான ஏதாவது பொருளைக் கனவிற் கண்டால் ஏதாவது தொல்லைகள்தான் ஏற்படும்; இழப்புகளையும் எதிர்பார்க்கலாம்.

25. விசிறிகளைக் கனவிற் கண்டால்; வரப்போகும் சண்டை சச்சரவுகளைத் தெரிவிக்கும்.

26. பனிமூட்டம் கனவில் தோன்றினால், செய்யும் வியாபாரத்தில் ஏதாவது நஷ்டத்தை எதிர்பார்க்க வேண்டும்.

27. முட்கரண்டி ஏதாவது கனவில் தோன்றினால், விரைவில் ஒரு அபாயத்தைச் சந்திக்க நேரலாம்.

28. நீரூற்றுப் பொங்கி எழுவதைக் கனவிற் காண்பது, பொங்கி வரும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தெரிவிப்பதாகும்.

29. கடும் பனி மூட்டத்தைக் கனவில் காண்பது, நண்பர்கள் மற்றும் வேண்டியவர்களின் உதவிகளால், முயற்சிகளில் வெற்றியடையும் வாய்ப்பை அறிவிப்பதாகும்.

30. ஈமச் சடங்கைக் கனவில் காண்பது, பெருஞ் செல்வத்தோடு வரும் திருமண உறவையோ, அல்லது உயில்வழிச் சொத்துக்களின் வரவையோ, அல்லது பரம்பரைச் சொத்தின் வரவையோ காட்டும்.

31. மாவுப் பொருளைக் கனவிற் கண்டால், உறவினர் ஒருவர் இறந்துவிடுவதால், அவரின் சொத்துக்கள் உங்களுக்கு உரிமையாக வரப்போவதைக் காட்டும்.

32. வானத்தில் இறக்கையின்றிப் பறந்து போவது போலக் கனவு காண்பது, தொழில் அல்லது காதலில் விரைவில் வெற்றி பெறப் போவதை அறிவிக்கும்.

33. வானிற் பறக்கும்போது கீழே விழுந்து விடுவதாகக் கனவு காண்பது, எண்ணியதை அடைய முடியாமற் போவதை அறிவிப்பதாகும்.

34. இறக்கையோடு பறப்பதாகக் கனவு காண்பது, கெடுதலான கனவாகும்; நோக்கங்கள் சிதறிப் போவதையே காட்டும்.

35. வாயுக்கள் ஆகாயத்தை நோக்கி மேலெழுவதைக் கனவிற் காண்பது வரப்போகும் வசதிக் குறைவுகளையும் மனக் கலவரங்களையும் காட்டும்.

36. மூடியுள்ள தெருக்கதவு, வாசல் கதவுகளைக் கனவிற் கண்டால், வெற்றி வாய்ப்புத் திடீரென்று தடைப்பட்டுப் போவதைத் தெரிவிக்கும்.

37. இரத்தினக் கற்களைக் கனவிற் காண்பது, அதிர்ஷ்டக் கேட்டை ஏற்படுத்தும் ஒரு கெட்ட நிமித்தமாகும்.

38. ஏதாவது பரிசுகள் வாங்குவது போலக் கனவு காண்பது, வரப் போகும் நன்மைகளையும் பெருமைகளையும் அறிவிப்ப தாகும்.

39. கண்ணாடிப் பொருட்களைக் கனவிற் காண்பது விரும்பிய பெண்ணைச் சந்திக்க நேர்வதைக் குறிக்கும்.

40. கண்ணாடிக் குவளையில் தண்ணீர் பெறுவது, குடும்பத்தில் குழந்தை பிறக்கப் போவதை உணர்த்தும்.

41. கையுறைகளைக் கனவிற் காண்பது துரதிர்ஷ்டத்தைக் காட்டும் அறிகுறியாகும். அவ்வுறைகளைக் கையில் அணிந்திருப்பதாகக் கண்டால் பாதுபாப்பும் பெருமையும் வந்தடையும். கையுறைகள் நழுவி விழுவதாகவோ தொலைந்து போனதாகவோ காண்பது தொழிலில் ஏற்படும் நஷ்டங்களை அறிவிக்கும்.

42. தங்கத்தைக் கனவில் காண்பது, விரைவில் பொருள்கள் திருட்டுப் போவதை அறிவிப்பதாகும்.

43. தங்கத்தைப் பிறருக்குத் தருவதாகக் காண்பது புதிய நண்பர்கள் ஏற்படப் போவதை அறிவிக்கும் காட்சியாகும்.

44. கோயில்களிலுள்ள பலிபீடத்தைக் கனவிற் காண்பது மன அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவதாகும். அதை அலங்கரிப்பதாகக் காண்பது, திருமண யோகத்தையும், குடும்ப நல்வாழ்வையும் குறிப்பதாகும்.

45. சாம்பலைக் கனவிற் கண்டால், பெரிய துரதிர்ஷ்டம் ஒன்று விரைவில் நேரக் கூடும்.

46. மாட்டிறைச்சியைக் கனவிற் காண்பது ஏமாற்றத்தையும் திடீர்ச் சாவையும் தெரிவிப்பதாகும்.

47. பித்தளைப் பொருள்களைக் கனவிற் காண்பது, மிகவும் நேசமானவர்கள் என்று கருதியவர்கள் ஏமாற்றும் மோசக்காரப் போலிகள் ஆவதைக் காட்டும்.

48. ஏழைகள் வெள்ளை ரொட்டியைத் தின்பதாகக் கனவு காண்பது கெடுதல் தருவதாகும். செல்வர்கள் 'பிரௌன்' ரொட்டியைத் தின்பதாகக் காண்பது, அவர்கள் முயற்சிகளில் சரிவை அறிவிக்கும்.

49. பல ரொட்டித் துண்டுகளைக் கனவிற் காண்பது வெற்றியின் அறிகுறிதான்.

50. நல்ல ரொட்டியைத் தின்பதாகக் காண்பது, நண்பர்களின் நெருக்கத்தையும் காட்டும்.

51. மூங்கிற் காட்டுக்குள்ளே போவதாகக் கனவிற் கண்டால், எதிரிகளால் துன்பம் வரக்கூடும். முட்களால் கீறப்பெற்று ரத்தம் வடித்தால் இருக்கின்ற வசதிகள் குறையும். காயமின்றித் தப்பிவந்ததாகக் கண்டால், எதிரிகளின் முயற்சிகள் பயனற்றுப் போகும்.

52. உடைந்த பாலத்தின் மீது நடந்து செல்வது போலக் கனவுகண்டால், பயத்தால் அவதிப்பட நேரும்; பாலத்தின்மீது விழுந்ததுபோலக் கண்டால், தொழில்கள் பாதிக்கப்படக் கூடும்.

53. அணைந்துவிட்ட மெழுகுவத்தியைக் கனவிற் காண்பது, துக்கத்தையும், நோயையும், வறுமையையும் அறிவிப்பதாகும்.

54. ஒளியோடு எரியும் மெழுகுவத்தியைக் கனவில் காண்பது, நோயாளிகளுக்கு விரைவில் நோய் குணமாகப் போவதைக் காட்டும்.

55. திருமணமாகாதவர்களுக்கு விரைவில் சிறப்பாகத் திருமணயோகம் ஏற்படும் என்று அது அறிவிக்கும்.

56. மற்றவர்களுக்கு வாழ்வில் வெற்றியும், முயற்சிகளில் நல்ல பலன்களும் வாய்க்கும்.

57. நீங்களே மெழுகுவத்தியை ஏற்றுவது போலக் காண்பது உற்சாகம் வரப்போவதைக் காட்டும்.

58. மெழுகுவத்தியை வெளியே எடுத்துப் போவதாகக் காண்பது மிகவும் நெருக்கமான ஒருவர் ஆபத்துக்கு உள்ளா வதையும், உங்களுக்கு ஏதாவது இழப்பு வருவதையும் காட்டும்.

59. எரியும் மெழுகுவத்தியை உள்ளே கொண்டு வருவதாகக் காண்பதும், அது தொடர்ந்து எரிவதும், தகராறுகளும் சிரமங்களும் தீர்ந்து மகிழ்ச்சி வருவதைக் காட்டும்.

60. மெழுகுவத்தியை யாராவது கொளுத்துவதாகக் கனவிற்காண்பது, ஏதோ ஒரு பரிசு கிடைக்கப் போவதை அறிவிப்பதாகும்.

61. இந்தப் பலன்கள் எல்லா வகையான விளக்குகளுக்கும் பொருந்தும். ஒளி நன்மையையும் இருள் தீமையையும் அறிவிக்கும்.

62. சீட்டு விளையாடுவது போலக் கனவு காண்பது மிகவும் அதிர்ஷ்டம் தரக்கூடிய ஒரு கனவுதான். பலருடைய அன்பும் ஒத்துழைப்பும் பெருகும். வசதிகளும் வருமானமும் பெருகும்.

63. வண்டியில் உங்களைப் பூட்டி அதை நீங்கள் இழுத்துப் போகச் செய்வதுபோலக் கனவிற் கண்டால், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பவர்களானாலும், வறுமையும் அடிமைத் தனமும் ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கும் கெட்ட அறிகுறி யாகும்.

64. உங்களை வண்டியில் வைத்து, மனிதர்கள் இழுத்தும் போவதாகக் கனவிற் கண்டால், அதிகாரப் பெருக்கமும் தலைவராகும் மேன்மையும், செல்வம் மிகுதியாகும் வாய்ப்பும் ஏற்படக் கூடும்.

65. உங்களுக்கு உதவக்கூடிய சிறந்த பிள்ளைகளை அடைவதையும் இது உணர்த்தும்.

66. பயணம் போகும்போது இந்தக் காட்சியானது ஏற்பட்டால், நிதானமாகச் சென்று, போகவேண்டிய இடத்தைச் சேர்வதை அறிவிப்பதாகும்.

67. வெண்மேகங்களைக் கனவிற் காண்பது செல்வப் பெருக்கம் விரைவில் வரப்போவதைக் காட்டும்.

68. மிக உயரத்தில் அம் மேகங்கள் காணப்பட்டால், வெளி நாட்டுப் பயணம் விரைவில் வாய்க்கும். வெளிநாடு வெளியூர்களில் நெடுங்காலமாகச் சென்றிருப்பவர்கள் விரைவில் திரும்பிவருவார்கள். மூடி மறைக்க நினைத்த இரகசியங்கள் வெளிப்பட்டுவிடும்.

69. செம்மேகம் காணப்படுவது, விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்படப் போவதை அறிவிக்கும்.

70. இருண்ட, சிதறிய, இளங்கருப்பான மேகக் காட்சிகள் கெட்ட நேரத்தையும், கோபத்தையும் தெரிவிக்கும்.

71. சாரட்டு (குதிரை) வண்டியிற் போவதாகக் காண்பது, சோம்பலையும், போலிப் பெருமையையும் நேசிக்கின்றவர் என்பதையும், இறுதியில் வறுமையில் வாடிச் சாவை அடைய நேரிடும் என்றும் காட்டி எச்சரிப்பதாகும்.

72. சாரட்டு வண்டியிலிருந்து இறங்குவதாகக் காண்பது பெரிய மதிப்பான நிலையிலிருந்து, இறக்கம் ஏற்படப் போவதையும், குற்றச்சாட்டுக்கு உட்பட்டு, அவமானப்பட நேர்வதையும் அறிவிப்பதாகும். இது வேறு வண்டிகளுக்கும் பொருந்தும்.

73. செம்பு உலோகத்தைக் கனவு கண்டால், உங்களால் நேசிக்கப்படுகின்றவர்கள் உங்களை ஏமாற்றி விடுவார்கள்.

74. வெட்டுப்படுவதும் காயப்படுவதுமாகக் கனவு காண்பது கெடுதலானதே.

75. கையில் கத்தியோடு இருப்பதாகக் கனவிற் கண்டால், உங்கள் ஆசையான நம்பிக்கைகள் விரைவில் நிறை வேறப்போகும் நல்ல அறிகுறியாகும்.

76. குடிபோதையிலிருப்பதாகக் கனவிற் காண்பது தொண்டு செய்யும் ஒரு நல்ல நண்பனைக் காணப்போவதைக் குறிக்கும். தொழில் முயற்சிகளில் நஷ்டத்தையும், காதல் முயற்சிகளில் வெற்றியையும் காட்டும்.

77. நீரில் மூழ்கினாற் போலக் கனவு கண்டால் அதிர்ஷ்டம் ஏற்படக் கூடும்.

78. இன்னொருவர் நீரில் மூழ்கியதாகக் கனவு கண்டால், உங்கள் மனவருத்தங்கள் முடிவுக்கு வந்துவிடும்.

79. காதலர்களானால், காதலித்தவர் நல்ல பண்போடு விளங்குவதை அறிவிக்கும்.

80. நல்ல வளமான பசுமையான பூமி தனக்கு உரிமையாயிருப்பதாகக் கனவிற் காண்பவன், சிறந்த மனைவியைப் பெற்று இன்பமாக வாழ்வான்.

81. நிலம் வறண்டதாகவோ கறுப்பாகவோ தோன்றினால், மனவருத்தமும் சங்கடங்களும் மனத் தளர்ச்சியும் ஏற்படக் கூடும்.

82. நிலநடுக்கத்தைக் கனவிற் காண்பது எதிர்பாராத ஒரு மாற்றத்துக்கு ஆளாகப் போவதைத் தெரிவிப்பதாகும்.

83. கொலைக் களத்தையோ கொலை செய்யப்படுவதையோ கனவுகாண்பது தொல்லைகள் தீரப்போவதைக் காட்டும்.

84. மரத்திலிருந்து தவறி விழுந்ததுபோலக் கனவு காண்பது, வேலையோ தொழிலோ உங்களைவிட்டுப் போய்விடுவதைக் குறிக்கும். விழுந்து காயம் படாதபடி இருப்பதாகக் கனவு கண்டால், முயன்று மீண்டும் அவற்றைப் பெற்றுவிடலாம்.

85. விழாக்களிலும் சந்தைகளிலும் கலந்து கொள்வதாகக் கனவிற் கண்டால், பையிலுள்ள பணத்தைப் பறிகொடுக்க நேரும் என்று அறிந்து, மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

86. விருந்திற் கலந்து கொள்வதாகக் கனவிற் காண்பது, மிகுதியான மனத்திருப்தி வரப்போவதை உணர்த்தும்.

87. நெருப்பைக் கனவிற் கண்டால் கோபமும் ஆத்திரமும் ஏற்படக் கூடும்.

88. நெருப்புச் சுட்டதாகக் கண்டால் கடுமையான காய்ச்சலுக்கு உட்படலாம்.

89. படுக்கை தீயில் எரிந்து தானும் கருகிப்போவது போலக் கனவு கண்டால் நோய்களுக்கும் அழிவுகளுக்கும், சில சமயங்களில் சாவுக்கும் உட்பட நேரும்.

90. துணிக் கொடியைக் கனவிற் பார்ப்பது தீ விபத்தால் நஷ்டப்படப் போவதைக் காட்டும்.

91. புல்லாங்குழல் நாதத்தைக் கனவில் கேட்டால், ஆசைகள் நிறைவேறி மகிழ்ச்சி அளிக்கும். தானே ஊதி மகிழ்வதாகக் கனவுகண்டால் ஆனந்தமிகுந்த செழிப்பான வாழ்க்கை அமையும்.

92. திடீரென்று வரும் செல்வப் பெருக்கத்தைக் கனவு காண்பது கெடுதலான ஒரு குறிப்பாகும்.

93. எவரோ பெரும் பணம் தருவதாகக் கண்டால், உறவினரிடமிருந்து உரிமையாகச் சொத்துக்கள் வரக்கூடும்.

94. துள்ளிக் குதித்து ஆடுவதாகக் காண்பது, மகிழ்ச்சியான வருங்காலத்தைக் காட்டும்.

95. நாடு சமயம் மொழி மற்றும் பொது நன்மைக்காக உயிரைத் தியாகம் செய்வதுபோலக் கனவிற் காண்பது, மேலான புகழும் செல்வாக்கும் பெறப் போவதைக் காட்டுவதாகும்.

96. கவிழப்போகும் ஒரு படகிலோ கப்பலிலோ செல்வதாகக் காண்பது, அபாயம் ஏற்படுவதை அறிவிப்பதாகும். ஆனால் கனவு கண்டவர் ஒரு சிறைக்கைதியாக இருந்தால் அவர் தம் விடுதலையை விரைவில் எதிர்பார்க்கலாம்.

97. இப்படிப்பட்ட கப்பலிலிருந்து தண்ணீரில் விழுந்து விட்டதாகக்கனவுகண்டால்,கப்பல்போகும்போதுவிழித்துக் கொண்டதாகவும் பார்த்தால், அவர் கட்டுப் பாடில்லாத ஒரு வாழ்க்கையையும், முறை பிறண்ட முயற்சிகளையும் மேற்கொள்ளத் தொடங்கலாம்.

98. ஏதாவது இசைக்கருவிகளின் இனிய முழக்கைக் கனவில் கேட்பது மகிழ்ச்சி பொங்குவதை அறிவிப்பதாகும்.

99. கடிதம் எழுதுவது போலவோ, எதையாவது படிப்பதைப் போலவோ கனவு காண்பது,மிக அதிர்ஷ்டமான காட்சியாகும். விரும்பிய மனைவியை அல்லது கணவனை அடைந்து நல்ல ஆனந்தமான குடும்ப வாழ்வைப் பெறுவார்கள்.

100. பேப்பரைக் கிழிப்பதாகவோ, கறைப்படுத்துவதாகவோ கனவிற் காண்பது அதிர்ஷ்டக் குறைவானதாகும். பொறுப்பற்ற தூய்மையில்லாத ஒரு துணையாக அமைந்து குடும்பவாழ்வு கசப்புடையதாகிவிடும் என்பதையே இது காட்டும்.

101. நேரானதும் தூய்மையானதும் பெரியதுமான நல்ல சாலையில் நடந்து போவதாகக் கனவு கண்டால், உடல் நலம் செழுமையாக விளங்குகிறதைக் காட்டும்.

102. குறுகலானதும் வளைந்து வளைந்து செல்வதும் கரடுமுரடானதுமான பாதையில் நடந்து போவதாகக் கண்டால், உடல்நலக் கேட்டுக்கு உள்ளாவதை உணர்த்தும்.

103. அழகான உருவப் படங்களைக் கனவிற் கண்டால் ஆனந்தமான வாழ்க்கை அநுபவங்களை எதிர்பார்க்கலாம். அழகான நல்ல குணமுள்ள அழகிய பிள்ளைகளையும் அடைந்து மகிழலாம்.

104. இன்பியல் நாடகத்தில் திறமையாக நடிப்பது போலக் கனவு காண்பது வியாபாரத்திலோ தொழிலிலோ வெற்றியை அறிவிப்பதாகும்.

105. துன்பியல் நாடகத்தில் நடிப்பதாகக் கண்டால் கடினமான உழைப்பைச் செய்தும் சொத்துக்கள் இழக்கப்பட நேர்வதையும், வருத்தங்களும் தொல்லைகளும் ஏற்படுவதையும் காட்டும்.

106. நாடகத்தில் இசைக்கருவி வாசிக்கக் கண்டால், கணவன் மனைவி, அல்லது முதலாளி வேலையாள் போன்றவர்களுக்

கிடையே நல்ல செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு கடிதம் வரக்கூடும்.

107. காற்றிசைக் கருவிகள் இசைப்பதைக் கண்டால் ஆபத்தின் வரவைக் காட்டும். சட்டத்தின் துணையோடு நீங்கள் கீழிறக்கப்பட்டும் அவமானப்படலாம்.

108. இதைத் தவிர வேறு விதமான பல இசைத் தொடர்புகளும் நன்மையையும் புகழையும் தருவனவே.

109. ஒருவன் எவரோடாவது சண்டையிடுவதாகக் கனவிற் காண்பானானால், அவன் அறிந்திராத சில பெண்களைப் பற்றிய செய்திகளைக் கேட்க நேரலாம். அல்லது அவன் நினைத்திராத சில மகிழ்ச்சிகளிற் கலந்து மகிழக் கூடும்.

110. மனமகிழ்ச்சி தரும் நூல்களைப் படிப்பதாகக் கனவு காண்பது, மகிழ்ச்சியையும் வசதிப்பெருக்கத்தையும் தெரிவிப்பதாகும்.

111. கடுமையான நூல்களையும் தத்துவ நூல்களை படிப்பது அறிவு வளர்ச்சி ஏற்படுவதை அறிவிக்கும்.

112. திரைச் சீலை அல்லது மேசை விரிப்பு அல்லது சமுக்காளம் போன்றவைகளைக் காண்பது ஏமாற்றத்துக்கும் துரோகத்துக்கும் உட்பட நேர்வதை அறிவிக்கும்.

113. பாடுவதுபோலக் கனவு கண்டால் விரைவில் ஒரு துயரச் செய்தியைக் கேட்க நேரிடும்.

114. நீந்துவதுபோலக் கனவு காண்பது நல்லதுதான். தலை நீருக்கு மேலாக இருந்தால் எல்லாம் எளிதாக வெற்றியடையும். தலை நீருக்குள் இருந்தால் தடைகளைக் கடந்து வெற்றியை அடையலாம்.

115. துணிகட்குக் கஞ்சிபோடுவதாகக் கனவு காண்பது ஒரு ஊக்கமான கணவனை அடைந்து செல்வப் பெருக்கத்தோடு இன்பமாக வாழப்போவதைக் காட்டும்.

116. மகிழ்ச்சிகரமான தகவல்கள் வரப் போவதையும் இது காட்டும்.

117. போர்வை திரைத் துணிகளை நெய்வதாகக் கனவிற் காண்பது மகிழ்ச்சியான ஒரு வாழ்வை அறிவிக்கும்.

★★★

3. சந்திரனைக் கனவிற் கண்டால்

118. சந்திரனைக் கனவில் காண்பது, எதிர்பாராத மகிழ்ச்சியும் காதலில் வெற்றியும் ஏற்படுவதைக் காட்டும்.

119. நிலவுபொழியும் சந்திரனைக் கனவிற் கண்டால், மனைவியின் நேசத்தை மிகுதியாகப் பெறலாம்.

120. வெள்ளி உலோகம் நிரம்பக் கிடைப்பதையும் சந்திரனைக் காண்பது தெரிவிக்கும்.

121. இப்படியே சூரியனைக் கனவிற் கண்டால், நிறையப் பொன்னைப் பெறுகின்ற யோகம் உண்டாகம்.

122. சந்திரன் மேகமூட்டத்தால் இருள்பட்டுத் தோன்றினால் துரதிர்ஷ்டங்கள் உருவாகும்.

123. சந்திரன் மேகமூட்டத்திலிருந்து ஒளியுடன் வெளிப்படக் கண்டால் துரதிர்ஷ்டங்கள் நீங்கி நன்மைகள் ஏற்படும்.

124. இந்தக் கனவை ஒரு பெண் கண்டால், அவளுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஆடை அணிகள் கிடைக்கும். துன்பம் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.

125. பூரணச் சந்திரனை ஒரு கன்னிப்பெண் கனவிற் கண்டால், விரைவில் அவளுக்குத் திருமணம் சிறப்பாக நடைபெறும்.

126. திருமணமானவளாக இருந்தால், அவளுக்கு அழகான ஒரு மகள் பிறப்பாள்.

127. ஒரு கணவன் முழுநிலவைக் கண்டால் அவனுக்கு ஒரு மகனை அவன் மனைவி பெற்றுத் தருவாள்.

128. ஒளிந்து திரியும் கள்வர் கொள்ளையர் கொலைகாரர் போன்றவர்கள், கனவில் முழுநிலவைக் காண்பது நல்லதல்ல. அவர்கள் விரைவில் கண்டு பிடிக்கப்படுவதையே இது காட்டும்.

129. படுக்கையில் நிலா வெளிச்சம் விழுவதாகக் கனவு கண்டால், ஒரு பெண்ணின் நெருக்கமான உறவு ஏற்படும்.

130. முழுநிலவைக் காண்பது வியாபாரிகளுக்கு நல்ல வியாபார விருத்தியைத் தரும்.

131. சந்திரன் தேய்வதாகக் காண்பது எவரோ ஒரு பெரிய மனிதரின் சாவை அறிவிப்பதாகும்.

132. சந்திரன் மங்கலான ஒளியோடு தோன்றுவதும் குறைவான இலாபம் தருவதுதான்.

133. சந்திர கிரகணம் கனவில் தோன்றினால் வியாபாரத்தில் இலாபம் வரும். தாயாருக்கு உடல் நலிவோ, ஆபத்தோ ஏற்படலாம். சூரிய கிரகணத்தைக் கனவிற் கண்டால் தந்தைக்கு ஆபத்தோ நோயோ ஏற்படக்கூடும்.

134. இரண்டு சந்திரனைக் கனவிற் காண்பது வரப்போகும் மனவருத்தத்தின் அறிகுறியாகும்.

4. பணத்தைக் கனவிற் கண்டால்

135. பணத்தை இழந்ததாகக் கனவிற் கண்டால், வியாபாரத்திலும் தொழிலிலும் நஷ்டத்தை எதிர்பார்க்க வேண்டும்.

136. பணத்தைத் தங்கமாகவோ பெருந்தொகைக்கான காசோலையாகவோ, கரன்சி நோட்டுகளாகவோ கனவிற் கண்டால், முயற்சிகளில் எல்லாம் நிறைய வருமானம் ஏற்பட்டுப் பணம் குவியும்.

137. பணத்தை உருக்குவதுபோலவும் நோட்டுகள் சிதைவுற்றது போலவும் தோன்றினால் நேசிக்கும் தொழில் முயற்சிகளில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

138. பணத்தைவீசிஎறிவதாகக்கனவிற்காண்பதுபணமுடையைக் காட்டும்.

139. பணத்தை சில்லரை மாற்றுவதாகக் கனவு காண்பது நேசத்துக்குரியவர் நிலையில்லாத மனமுள்ளவராக இருப்பதைக் காட்டும்.

140. உங்களுக்குப் பணம் தருவதுபோலக் காண்பது காதலில் வெற்றியையும், குடும்பவாழ்வில் மகிழ்ச்சியையும் கிடைக்கச் செய்வதாம்.

141. கள்ள நாணயத்தைக் கனவில் காண்பது தீய கனவாகும். இது சச்சரவுகளையும், நோய்களையும். இரகசிய எதிரிகளையும், குடும்பவாழ்வில் உற்சாகமில்லாமற் போவதையும் தெரிவிக்கும்.

142. பைகளில் அல்லது பெட்டிகளில் இருக்கும் பணத்தைக் கனவிற் கண்டால் ஏதாவது துரதிர்ஷ்டம் ஏற்படலாம். கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

5. கனவிற் காணும் நிகழ்ச்சிகளும் அவற்றின் பலன்களும்

143. வெளியூர்ப் பயணம் போவது போலவோ, அல்லது ஏதாவது ஒரு வெளியூரில் போயிருப்பதைப் போலவோ கனவில் கண்டீர்களானால், விரைவில் வெளியூர்ப் பயணம் போக வேண்டியது வரும்.

144. ஏதாவது விபத்திலே சிக்கிக் கொண்டதைப் போலத் தோன்றினால், உங்களது வேலை அல்லது தொழிலில் நீங்கள் எதிர்பாராத சிக்கல்களைச் சந்திக்க நேரிடலாம். அல்லது, நீங்கள் ஏதாவது ஆபத்தைச் சந்திக்கவும் கூடும்.

145. நண்பர் அல்லது உறவினர் ஒருவர் விபத்திற் சிக்கியது போலக் கண்டால், அவரிடமிருந்து கடிதமோ அல்லது தகவலோ ஒரு நல்ல செய்தியுடன் உங்களுக்கு வந்து சேரும்.

146. யாருடனாவது கடுமையாகக் கோபித்துக் கொண்டது போலக் கண்டீர்களானால், அவர் உங்களுக்கு மிகவும் நெருக்கமான வேண்டிய நண்பராக விளங்குவார் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

147. குளிப்பதைப் போலவோ, குளியலறையில் இருப்பதைப் போலவோ கனவு காண்பது, உடல் நலத்தையும் நீண்ட ஆயுளையும் குறிப்பதாகும். இந்தக் காட்சி ஓர் இளம் பெண்ணுக்குத் தோன்றினால், அவளுக்கு விரைவிலேயே திருமண யோகம் வாய்க்கும்.

148. போர்க் காட்சியைக் கனவிற் காண்பது விரைவில் காதல் மயக்கத்தில் சிக்குவதைக் குறிக்கும்.

149. ஒரு போர் வீரரோ காவல்துறையைச் சேர்ந்தவரோ போராட்டக் காட்சியைக் கண்டால், விரைவிலே ஏற்படப் போகும் பதவி உயர்வை உணர்த்தும்.

150. குழியிலிட்டுப் புதைப்பது போலக் கனவு காண்பது செல்வப் பெருக்கம் ஏற்படப்போவதைக் காட்டும், உடல்மேல் குவித்த மண்ணின் அளவுக்கு மிகுந்த செல்வம் கிடைக்கலாம் என்றும் காட்டும்.

151. ஏதாவது பொருளை வாங்குவதாகக் காண்பது மகிழ்ச்சியையும் திருப்தியையும் எதிர்பார்க்கலாம் என்று காட்டும். உரிமையாகச் சில சொத்துக்களின் வரவையும் எதிர்பார்க்கலாம்.

152. வீடுகள் போன்றவை தீப்பட்டு எரிவதுபோலக் கனவிற் கண்டால், செல்வப் பெருக்கம் வந்து சேர்வதை எதிர் பார்க்கலாம்.

153. குழந்தைக்குப் பெயரிடுவது போன்ற விழாவைக் காண்பது நல்ல செய்திகளின் வரவையும், அதிர்ஷ்ட வரவையும், ஆனந்த வரவையும் அறிவிக்கும்.

154. செத்துப்போவது போலக் கனவு காண்பது ஒரு நல்ல காட்சிதான். தீர்க்காயுளையும் முயற்சிகளில் வெற்றியையும் எதிர்பார்க்கலாம்.

155. தானோ வேறு ஒருவரோ தண்ணீரில் மூழ்கிப் போவது போலக் காண்பது வெற்றியையும், மகிழ்ச்சியையும், வளமைப் பெருக்கத்தையும் அறிவிப்பதாகும்.

156. ஏதாவது தின்பது போலக் கண்டால் அது துரதிர்ஷ்டத் தின் வரவைக் குறிப்பிடும். வேறு ஒருவர் உண்பதைக் கனவிற் கண்டால் நல்ல அதிர்ஷ்டம் வாய்த்து மகிழ்ச்சி ஏற்படும்.

157. தன்னை ஒருவன் கடத்திப் போவதாக ஒரு கன்னிப் பெண் கனவு கண்டால், விரைவில் அவளுக்குத் திருமண யோகம் கைகூடும்.

158. அழகான ஒருவரோடு திருமணம் நிச்சயமாவதாகக் கண்டால் மிகுந்த ஆனந்தம் வரப்போவதைக் காட்டும்.

159. இந்தத் திருமண உறுதியானது, சாதாரணமானவரோடு நடப்பதாகக் கண்டால் மனக் கவலையும் துன்பமும் ஏற்படக் கூடும்.

160. மண்ணைத் தோண்டுவது நிரந்தரமான வசதிப் பெருக்கம் ஏற்படப் போவதைக் காட்டும்.

161. நீரில் மிதப்பது போலக் காண்பது நல்ல கனவுதான். அதிர்ஷ்டத்தைத் தருவது ஆகும்.

162. வெள்ளப் பெருக்கைக் காண்பது தொல்லைகளைக் கடந்து வெற்றியைச் சந்திப்பதன் அறிகுறியாகும்.

163. வெளிநாட்டிற்குப் போயிருப்பது போலக் காண்பது, வீட்டில், தொழிலில் வெற்றியையும் அதிர்ஷ்டத்தையும் தரக் கூடும்.

164. ஒரு குவளையிலிருந்து நீர் பருகுவது போலக் காண்பது, உடல்நலத்தையும் நிறைவான மகிழ்ச்சியையும் அறிவிப்பதாகும்.

165. பசியோடிருப்பதாகக் கனவு காண்பது அதிர்ஷ்டமானதாகும். இப்படிக் கனவு காண்பவர் தம்முடைய முயற்சியால் பெரும் பணக்காரராகி வளர்ச்சி பெறுவார்.

166. வேட்டையாடிக் கிடைத்த வேட்டையுடன் திரும்பி வருவதுபோலக் காண்பது அதிர்ஷ்டமான கனவாகும்.

167. வேட்டைக்குப் போவது போலக் கனவுகாண்பது ஏமாற்றங்களையும் நம்பிக்கைகள் சிதறிப் போவதையும் அறிவிப்பதாகும்.

168. மந்திரங்களைத் தான் உச்சரிப்பது போலக் காண்பது சுகவீனம் ஏற்படப் போவதைக் குறிக்கும்.

169. வேறொருவர் மந்திரங்களை உச்சரிப்பதைக் கேட்பது தொல்லைகள், துயரங்கள் தீரப்போவதை அறிவிக்கும்.

170. உற்சாகமாக ஆடிப்பாடுவது போல இளைஞர்கள் கனவிற் காண்பது திருமண யோகத்தையும் நன்மையையும் அறிவிப்பதாகும்,ஏழைகள் இப்படிக்காண்பது அவர்களுக்கு நலம் கிடைப்பதைக் காட்டும். பணக்காரர்கள் இவ்வாறு காண்பது பொருள் நட்டத்தையும் தொல்லைகளையும் தெரிவிப் பதாகும்.

171. பயணம் போவது போலக் கனவு காண்பது குடும்ப வாழ்வில் அமைதியையும் மனத்திருப்தியையும் தெரிவிப்பதாகும்.

172. ஒருவனைக் கொல்வது போலக் கனவிற் காண்பது மகிழ்ச்சியான வாழ்வை உறுதிப்படுத்துவதாகும்.

173. கொல்லப்படுவது போலக் காண்பது இழப்பையும் கஷ்டத்தையும் தெரிவிப்பதாகும்.

174. முத்தமிடப்படுவதாகக் காண்பது வஞ்சத்தையும் துரோகத்தையும் சந்திக்க நேர்வதைத் தெரிவிக்கும்.

175. ஒருவருடைய கையைத் தான் முத்தமிடுவது போலக் காண்பது நட்பையும் நல்ல அதிர்ஷ்டத்தையும் பெருகச் செய்யும்.

176. அயலார் ஒருவர் கையை முத்தமிடுவது அயல் நாட்டுப் பயணம் வரப்போவதன் அறிகுறியாகும்.

177. உடலில் தினவு எடுப்பது போலக் காண்பது அதிர்ஷ்டத்தின் அறிகுறியாகும்.

178. குதித்துத் தாண்டுவது போலக் கனவு காண்பது ஆசைகள் நிறைவேறாமல் தடைகளால் குறுக்கீடு ஏற்படக் கூடும் என்பதை அறிவிப்பதாகும்.

179. சிரித்து மகிழ்வதாகக் கனவு கண்டால் கடுமையான சூழ்நிலைகள் எதிர்ப்படுவதைக் காட்டும்.

180. திருமணம் செய்துகொள்வது போலக் கனவு காண்பது கெடுதலான ஒரு அறிகுறியாகும்.

181. துயரப்படுவதாகக் கனவு காண்பது அதிர்ஷ்டத்தையும் மகிழ்ச்சியையும் அறிவிப்பதாகும்.

182. கிழிந்த துணிகளைத் தைப்பது, பொருள்களைப் பழுதுபார்ப்பது போன்ற காட்சிகள் பிறருக்கு அடிமைப்பட நேர்வதையும், மகிழ்ச்சிக் குறைவையும் காட்டுவனவாகும்.

183. மதுவுண்டு களித்து மகிழ்வதாகக் காண்பது மனக் கவலைக்கும் துக்கத்துக்கும் அறிகுறியாகும்.

184. உரத்த சத்தங்களைக் கேட்பதும், மறுப்புக் குரல்களைக் கேட்பதும் கெடுதலான அறிகுறியாகும்.

185. வேர்த்து உடல் முழுதும் நனைந்தது போல் கனவு காண்பது, ஏதோ ஒரு முதன்மையான வேலையைச் சிரமப்பட்டு முடித்துப் பலன் காண்பீர்கள் என்பதை அறிவிப்பதாகும்.

186. பயானோ (அல்லது ஆர்மோனியம்) போன்ற இசைக் கருவியை வாசிப்பதாகக் கனவு காண்பதும், பிறர் வாசிப்பதைக் கேட்பதுபோலக் காண்பதும் உறவினரின் சாவையோ அல்லது ஈமச் சடங்குகளில் கலந்துகொள்ள நேர்வதையோ காட்டும்.

187. வண்ண ஓவியம் தீட்டுவது போலக் காண்பது வருமானமில்லாத ஒரு முயற்சியில் ஈடுபடப் போவதைத் தெரிவிப்பதாகும்.

188. குழியில் தவறி விழுவது போலக் காண்பது எதிர்பாராத ஏமாற்றங்களையும், திடீர் நஷ்டங்களையும், ஆபத்துக்களையும் அறிவிப்பதாகும்.

189. குழிக்குள்ளிருந்து வெளியே ஏறிவருவதாகக் காண்பது சிரமங்களிலிருந்து தப்பி விடுபடப் போவதைத் தெரிவிக்கும்.

190. குதிரைப் பந்தயத்தில் வெற்றிபெற்றதாகக் காண்பது நல்ல கனவுதான். நோயாளிகளுக்கு மட்டும் இது நல்லதாகாது.

191. கந்தைகளை உடுத்திருப்பது போல் காண்பது, கடுமையான முயற்சிகளைச் செய்தே நினைத்ததை அடைய முடியும் என்று காட்டும்.

192. வயலில் விதை விதைப்பதைக் காண்பது, சந்தேகமான ஒரு முயற்சியில் ஈடுபட நேர்வதைக் குறிக்கும்.

193. மண்வெட்டியைப் பயன்படுத்தி வேலை செய்வது போலக் காண்பது தவறான முடிவுகளைச் செய்து, அதை மறைக்க முயல்வதைக் காட்டுவதாகும்.

194. நூற்பதாகக் காண்பது கவலையையும் தொல்லை யையும் குறிப்பிடும். இவை அயலார் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும்.

195. கறையை அகற்ற அகற்ற மீண்டும் தோன்றினால் செய்த பாவத்துக்குத் தண்டனையும் மனவருத்தமும் அடையப் போவதைக் காட்டும்.

196. மேசையில் அமர்ந்திருக்கக் காண்பது வசதியையும் வளர்ச்சியையும் காட்டும். திருமணயோகம் விரைவில் ஏற்படுவதையும் கூறலாம்.

197. தேநீர் பருகுவதாகக் கனவில் காண்பது, ஏற்படும் சிக்கல் உடல்நலத்தையும், தூக்கத்தையும் கெடுப்பதை உணர்த்தும்.

198. படித்துக் கொண்டிருக்கும் ஒரு செய்தித்தாளைக் கிழிப்பது, தொழில் தகராறுகள் சுமுகமாகத் தீர்க்கப்படுவதைக் குறிக்கும்.

199. கண்ணீர் வடிப்பது, மிகுதியான மகிழ்ச்சியும் களியாட்டமும் வரப்போவதைத் தெரிவிக்கும்.

200. தனியாகவும் மெதுவாகவும் நடந்துபோவதாகக் கனவு கண்டால், அது வறுமைத் துயரத்தையும் துக்கத்தையும் குறிப்ப தாகும்.

201. விரைவாக நடப்பதாகக் கனவு கண்டால், விரும்பிய காரியத்தில் வெற்றியை விரைவாகக் காணலாம்.

202. நெருப்பினூடே நடப்பதாகக் கனவு காண்பது, வரப்போகும் ஆபத்தைக் குறிக்கும்.

203. நீர்மேல் நடப்பது துரதிர்ஷ்டம் வரப்போவதைக் குறிப்பிடும் அறிகுறியாகும்.

204. இன்னொருவரோடு சேர்ந்து நடப்பதாகக் கனவு காண்பது, ஏற்படப் போகும் துணையையும், வசதியையும் தெரிவிக்கும்.

205. ஒரு பெண், தன் காதலனுடன் சேர்ந்து நடப்பதாகக் கனவு கண்டால், திருமண யோகம் அவளுக்கு விரைவில் வாய்க்கும்.

206. உடலைக் கழுவுவது, அல்லது குளிப்பதான கனவு மனச் சங்கடங்களிலிருந்து விடுபடப் போவதன் அறிகுறியாகும்.

207. துணிதுவைப்பது மற்றவர்களுக்காகக் கடுமையாக வேலை செய்ய வேண்டியதாக நேர்வதைக் குறிக்கும்.

208. முட்செடிகளால் கீறப்படுவது போலக் கனவு காண்பது, துணிவோடு போராடினால் எடுத்த காரியத்தைச் சாதிக்கலாம் என்று காட்டுவதாகும்.

209. இளைஞர்கள் இப்படிக் கனவு கண்டால், காதல் வெறியில் மயங்கித் தொல்லைகளைத் தேடிக்கொள்ள நேரிடக் கூடும் என்பதாகும்.

210. நீரைக் கொட்டாமல் கொண்டு போவது போலக் காண்பது ஏமாற்றத்தையும் இழப்பையும் சந்திக்கவேண்டும் என்று காட்டும்.

211. தெளிவான நீரைப் பருகுவது மன நிறைவையும் வசதிப் பெருக்கத்தையும் அறிவிக்கும்.

212. ஒருவரோடு எதற்காகவோ சண்டையிடுவதாகக் கனவு கண்டால், அவரிடமிருந்து பிரிந்து போக நேரிடும். கனவு காண்பவர் நோயாளியாயிருந்தால் அவர் இறந்துவிடக் கூடும்.

213. குடும்பஸ்தர் இப்படிக் கண்டால், குடும்பத்தில் மனைவியுடனோ அல்லது காதலியுடனோ தகராறுகள் ஏற்படக் கூடும்.

214. செய்யும் செயல் முயற்சிகளில் பெரிதான இழப்பைச் சந்திக்கவும் நேரலாம் என இந்தக் கனவு காட்டும்.

215. ஒருநண்பனோடு பொதுவிடத்தில் உற்சாகமாக இருப்ப தாகக் கனவு கண்டால், விரைவில் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ வரும் அழைப்பை எதிர்பார்க்கலாம்.

216. வந்து யாசிப்பவர்களுக்கு ஏதும் தராமல் மறுப்பது போலக் கனவு கண்டால், வறுமையும் பற்றாக் குறையும் சூழ்ந்து வருத்தக் கூடும்.

217. யாசிப்பவர்களுக்குத் தாராளமாகக் கொடுப்பது போலக் கனவிற் கண்டால், வளமையும், மகிழ்ச்சியும், நீண்ட ஆயுளும் வாய்க்கும்.

218. கோபத்தால் துடிப்பதுபோலக் கனவில் தோன்றினால், பகைவர்கள் மிகுதி என்று பொருள்.

219. தூக்கத்திலிருந்து விழித்து எழுவது போலக் கனவு காண்பது, விரும்புகிறவர்களிடம் மிகுதியான அன்பு காட்டு வீர்கள் என்று தெரிவிப்பதாகும்.

220. இன்னொருவரைத் தூக்கத்திலிருந்து எழுப்புவது போலக் காண்பது, எல்லாச் சிரமங்களுக்கும் ஒரு நல்ல மகிழ்ச்சியான முடிவைக் காண்பீர்கள் என்று காட்டும்.

221. மிகுந்த அதிகாரத்தோடு விளங்குவதாக ஒரு பணக்கார ரோ அதிகாரியோ கனவு காண்பது, அவருடைய செல்வாக்கும் பதவியும் உயர்வதைக் காட்டுவதாகும்.

222. நடன நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வதாகக் கனவு காண்பது, செழுமையும் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் வரப் போவதை உணர்த்தும்.

223. சமைப்பது ரொட்டி சுடுவது போலக் கனவு காண்பது அதிர்ஷ்டம் தருவதாகும்.

224. குளியலறையைக் காண்பது துயரத்தையும் நோய்கள் தொத்துவதையும் குறிக்கும்.

225. குளியலறையுள் மிகச் சூடான வெந்நீரில் குளிப்பதாகக் கனவு கண்டால், தொல்லைகளையும், குடும்பத்தார் மூலம் இடையூறுகளையும், வேதனைகளையும் எதிர்பார்க்க வேண்டும்.

226. உடைகளைக் களைந்தும் குளிக்காமல் குளியலறையில் நிற்பதாகக் காண்பது, சில தொல்லைகள் வந்து நீங்குவதைக் குறிக்கும்.

227. மிகக் குளிரான நீரில் குளிப்பதாகக் காண்பதும் தொல்லைகளையும் துயரங்களையும் அறிவிப்பது தான்.

228. வெதுவெதுப்பான சுகமான குளியலாக இருந்தால் உடல் நலமும் மகிழ்ச்சியும் செல்வசெல்வாக்கும் மிகுதியாக ஏற்படும்.

229. மொச்சைகளைத் தின்பதாகக் கனவு காண்பது தொல்லைகளையும் விவாதங்களையும் அறிவிக்கும்.

230. தாடி வைத்திருப்பதாகக் கனவிற் காண்பது காதலில் சிறந்த அதிர்ஷ்டத்தைப் பெறுவதைக் காட்டும்.

231. ஒரு பெண்ணின் படுக்கையருகே இருப்பது போலவும், இருந்து அவளுடன் பேசுவது போலவும் கனவிற் காண்பது, அவளுடன் திருமணம் நிகழப் போவதைக் காட்டும்.

232. தலை வேறு உடல் வேறாக வெட்டப்பட்டது போலக் கனவிற் காண்பது கைதிகளுக்கு விரைவில் விடுதலை வரப் போவதையும், நோயாளிகளுக்கு நோய் குணமாவதையும், வாடி வருந்துபவர்களுக்கு மன அமைதி கிடைக்கப் போவதையும் காட்டும். கடன் கொடுத்தவர்கள் இவ்வாறு கனவு கண்டால் கடன்கள் விரைவில் வசூலாகிவிடும்.

233. பெற்றோர்கள் மேற்கண்டபடி கனவு கண்டால் அவர்களுடைய கவலைகளும் அச்சங்களும் நீங்கிக் குடும்பத்தில் சுபிட்சமும் களிப்பும் பெருகும். அவர்கள் பிள்ளைகளுக்கும் தன்னம்பிக்கையும் உற்சாகமும் உண்டாகும்.

234. தெரிந்தவர் ஒருவர் தன் தலையை வெட்டி விட்டதாகக் கனவு கண்டால், அவரோடு அன்பையும் ஆனந்தத்தையும் மேன்மைகளையும் அடையலாம்.

235. ஒரு சிறுவயதுள்ள ஆணோ பெண்ணோ தன் தலையை வெட்டிப்போட்டதாகக் கனவு கண்டால், கனவு கண்டவரின் நோய் குணமாகி நீண்ட ஆயுளை அவர் பெறுவார். கனவு கண்டவர் நோயற்றவராக இருந்தால் அவர் கௌரவம் உயரும்.

236. மணிச் சத்தத்தைக் கனவில் கேட்பது சிலருக்கு நல்ல செய்திகளைக் கொண்டு வரலாம். கனவு காண்பவர் குடும்பஸ்த ராக இருந்தால், குடும்பத்தில் தகராறும் குழப்பமுமே ஏற்பட நேரும்.

237. கடிபட்டதாகக் கனவு கண்டால், பொறாமையாளர் களின் அவச் சொற்களால் வருத்தம் உண்டாகும்.

238. கண் குருடானதாகக் கனவு காண்பது, தவறுகளை உணர்ந்து திருந்தத் தூண்டுவதாகும். தவறுகளைப் பின்னர்க் கைவிடச் செய்வது மாகும்.

239. இந்தக் கனவு சிலரைக் கடுமையான வறுமையால் வாடிச் சோர்வதற்கும் வகை செய்துவிடும்.

240. கேடு செய்யக்கூடிய ஒருவரிடம் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத்து வருந்த நேர்வதையும் இந்தக் கனவு அறிவிக்கும்.

241. துருத்தியை ஊதி நெருப்பை எரியவிடுவதாகப் பணக்காரர்கள் கனவு கண்டால், பணத்தை யிழந்து சிரமப் படுவார்கள்; ஏழைகள் கண்டால் வருமானத்தைப் பெற்று மகிழ்வார்கள் முன்னேற்றமும் உண்டாகும்.

242. நெருப்பைத் தூண்டி எரிய விடுவது கோபத்தையும் பழைய தகராறுகளையும் தூண்டிவிடுவது ஆகும். நெடுங்காலம் ஒடுங்கிக் கிடந்த தகராறுகள் சீறி எழுவதையும் காட்டும்.

243. ஒருவரை அடித்தாகக் கனவு காண்பது, நீதி மன்ற வழக்குகள் ஏற்படப் போவதைக் காட்டும்.

244. ஒருவரிடம் அடிபட்டதாகக் காண்பது பகைகள் நீங்கிச் சமாதானம் ஏற்படுவதைத் தெரிவிக்கும்.

245. படகில் ஏறி நீரிற் போவதாகக் கனவுகாண்பது மகிழ்ச்சியையும், செழிப்பையும், முயற்சிகளில் வெற்றியையும் காட்டும்.

246. இப்படிப் படகில் போகும்போது, அலைகள் மிகுதியாகியும், கடல் கொந்தளித்தும் சிரமப்படுவதாகக் காண்பது எதிரான பலன்களைக் காட்டும்.

247. மலர்ச் செண்டை எடுத்துப்போவதாகக் கனவு காண்பது திருமண யோகத்தைத் தரும். சிதைப்பதுபோலக் காண்பது பிரிவைத் தரும். வீசி எறிவதாகக் காண்பது மனப்பிளவை அறிவிக்கும்.

248. எதையாவது கொதிக்க வைப்பதாகக் கனவு காண்பது ஒரு வீட்டுத் தலைவிக்குக் கெடுதலான நிமித்தமாகும்.

249. ஒருவரைக் குழியில் போட்டுப் புதைப்பதுபோலக் கனவிற் கண்டால், உறவினருள் ஒருவரோ, நெருங்கிய நண்பருள் ஒருவரோ இறந்துவிடுவதை எதிர்பார்க்க வேண்டும்.

250. தான் உயிரோடு புதைக்கப்படுவதாகக் கனவிற் கண்டால், வாழ்க்கையில் வேதனையையும், வருத்தத்தையும், வறுமையையும் சந்திக்க நேரலாம்.

251. ஒரு புதைகுழியைக் காண்பது அதிர்ஷ்டம் வருவதன் அறிகுறியாகும்.

252. ஒரு வியாபாரத்தை நிர்வகிப்பது போலக் கனவிற் கண்டால், ஏதாவது தடைகள் ஏற்படுவதை எதிர்பார்க்கலாம்.

253. பச்சையான கறிகாய்களைக் கடையில் வாங்குவதாகக் கனவுகண்டால், நண்பர்களிடமிருந்து, அல்லது அவர்கள் மூலமாக, ஏதாவது இலாபங்கள் வரக்கூடும்.

254. அவை சமைத்ததாக இருந்தால் உங்களுக்கு ஏதாவது வாரிசு உரிமைச் சொத்தோ பணமோ கிடைக்கும்.

255. அரம் போன்ற கருவிகளை வாங்குவதாகக் கனவுகண்டால், முன்னால் மிகவும் தொடர்புள்ள ஒருவருடன் மனவேறுபாடு ஏற்படக்கூடும்.

256. துணிகள் புதிதாகக் கடையில் வாங்குவதாகக் கனவுகண்டால் எதிர்பாராத வகையிலிருந்து ஒரு வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

257. செஸ், சொக்கட்டான் போன்ற விளையாட்டுக்களை விளையாடுவதாகக் கனவிற் கண்டால், நண்பர்களுடன் மனவேற்றுமைகளை எதிர்பார்க்க வேண்டும். வேற்றுமைகள் சச்சரவுகளாகவும் மாறக்கூடும்.

258. காப்பி குடிப்பதாகக் கனவு கண்டால், நாணயமற்ற மோசமான நண்பர்கள் எதிராகச் சதிவேலை செய்கின்றனர் என்று தெரிவிக்கும்.

259. மற்றவர்கள் காப்பி குடிப்பதாகக் காண்பது, குடும்பத்தில் சண்டை சச்சரவுகளைத் தெரிவிக்கும்.

260. நிர்க்கோவை வந்துள்ளதாகக் காண்பது, வரப்போகும் உற்சாகத்தின் முன் அறிகுறியாகும்.

261. சாக்லேட் போன்றவைகளைத் தின்பதாகக் காண்பது ஆனந்தத்தையும் அதிர்ஷ்டத்தையும் உணர்த்தும்.

262. வீட்டில் சமையற்காரியைக் காண்பது, திருமண யோகத்தை அறிவிக்கும்.

263. ஏழைகளானால் உணவுக்குத் தட்டுப்பாடில்லாத நிலைமை வரப்போவதை அறிவிக்கும்.

264. நோயாளிகளானால் நோய் முற்றித் தொல்லை மிகுதியாவதைக் காட்டும்.

265. நடனமாடுவது போலவும், நாடகமாடுவது போலவும் கனவிற்காண்பது, நெடுநாள் பிரிந்து வாழும் ஒரு நெருக்கமான நண்பரிடமிருந்தோ, உறவினரிடமிருந்தோ நல்ல தகவல் வருவதைக் காட்டுவதாகும்.

266. சிலருக்கு வாரிசு உரிமைச் செல்வங்களின், சொத்துக் களின் வருகையும் ஏற்படும்.

267. தான் மட்டும் தனியாக நடனமாடுவதாகக் காண்பதோ, அல்லது தன் குடும்பத்தாரின் முன்னிலையில் தான் ஆடுவதாகக் காண்பதோ நல்ல பலன் தருவது தான். தன் மனைவியோ, பிள்ளைகளோ, குடும்பத்தாரோ ஆடுவதாகப் பார்ப்பதும் மகிழ்ச்சி வருவதன் அறிகுறிதான்.

268. ஆனால், இந்தக் கனவு நோயாளிகளுக்கு ஆபத்தான ஒரு எச்சரிக்கைக் குறி ஆகும்.

269. இருட்டில் இருப்பதாகக் கனவிற் காண்பதும், அந்த இருட்டறையிலிருந்து வெளியேற முடியாமல் தவிப்பதாகக் கனவு காண்பதும், போகும்போது சரியான வழியைத் தெரியாமல் தடுமாறுவதாகக் காண்பதும், மிகவும் உயரமான ஒரு மேட்டிலோ படிக்கட்டிலோ ஏறுவதற்கு முடியாமல் சிரமப் படுவதாகக் காண்பதும் நன்மை ஆகாது. ஏதாவது குருட்டுத்தன மான ஆசைவெறியில் செயல்பட்டுத் தொல்லைகளைத் தேடிக் கொள்ளக்கூடும் என்பதைத் தெரிவிக்கும்.

270. கும்மிருட்டுக்கனவில்தோன்றுவது இழப்பையும்நோயையும் குறிப்பதுதான். அதிலிருந்து வெளியேறுவதாகக் காண்பது எளிய நிலையிலிருந்து எதிர்பாராத உயர்ந்த ஒரு நிலையை அடையப்போவதை அறிவிப்பதாகும்.

271. இந்தக் காட்சியைக் காணும் சிறைக் கைதிகள் சிறையிலிருந்து தப்பிவிடுவார்கள். குற்றவாளிகள் குற்றம் நிரூபண மாகாமல் விடுதலையாகி மகிழ்வார்கள்.

272. இறந்து கிடக்கும் ஒரு தெரிந்த மனிதரைக் கனவிற் காண்பது, அவருடைய அபிலாஷைகளோ அல்லது தொழில் மற்றும் சொத்துக்களோ வரக்கூடும் என்பதைக் காட்டுவதாகும்.

273. செத்தவரிடம் பேசுவது போலக் கனவுகாண்பது சிறந்த நலமான கனவாகும். மிகுதியான துணிவும் தெளிவான அறிவும் இதனால் ஏற்படும்.

274. உயிரோடிருக்கும் ஒருமனிதரைச் செத்துவிட்டதாகக் கனவிற் காண்பது, பெருத்த தொல்லைகளை அறிவிப்பதாகும். சட்டபூர்வமாகக் கீழே தள்ளப்பட நேர்வதையும் இது தெரிவிக்கும்.

275. சாவும் திருமணமும் ஒன்றையொன்று பிரதிபலிப்ப தாகும். சாவைக் கனவிற் கண்டால், திருமணம் விரைவில் கைகூடும்.

276. நோயாளிகள் தாங்கள் திருமணம் செய்து கொள்வது போலக் கனவு கண்டால் விரைவில் சாவை அடைவார்கள்.

277. குடும்பத்தினர்கள் மனவேறுபாடுகள் ஏற்பட்டுத் தமக்குள் விலகிப்போக நேரிடும்.

278. நண்பர்கள் பெற்றோர்கள் உறவினர்களை விட்டும் விலகிச் செல்ல வேண்டியதும் வரும். செத்தவர் உயிரோடு உள்ளவரோடு உறவாடுவதில்லை என்பதை மறக்கக்கூடாது.

279. கடன்படுவதாகக் கனவிற் காண்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். கடன் தருபவர் வாங்குபவர் இருவரின் வாழ்வுப் போக்கைப் பிரதிபலிப்பதாக அறியவேண்டும்.

280. நோயாயிருப்பவர்கள் கடன் கொடுத்தவர் வந்து கடனைக் கேட்டு வேதனைப்படுத்துவதாகக் கனவுகண்டால், ஆபத்தான கட்டத்தையோ சாவையோ சந்திக்க நேரிடும். கடன் வாங்குவதாகக் காண்பது சாவு வரப்போவதைக் குறிக்கும்.

281. சூதாடு காயைக் கனவிற் கண்டால், நோயையும் வறுமையையும் காட்டும் ஓர் எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

282. மண்ணை வெட்டித் தோண்டுவதுபோலக் கனவிற்காண்பது நன்மையானது. ஆனால், மண்வெட்டி தொலைந்து போனதாகக் காண்பது மட்டும் கூடாது. இப்படிக் கனவிற் கண்டால், வேலையிழப்பையும், பயிர்கள் அழிவதையும், அறுவடைக்குச் சாதகமற்ற பருவ நிலையையும் அது தெரிவிக்கும்.

283. வெட்டுக் கோடாரியைக் கனவிற் கண்டால் இருக்கும் தொல்லைகளிலிருந்து விரைவில் விடுபடுவதற்கான வாய்ப்பு உண்டாகும்.

284. குதிரை லாடத்தைக் கனவில் பார்ப்பது, விரைவில் வரப்போகும் தொலைதூரப் பயணத்தை அறிவிக்கும்.

285. குதிரை லாடத்தைக் கண்டெடுத்துக் கொள்வதாகக் காண்பது வரப்போகும் பெரியதொரு அதிர்ஷ்டத்தின் அறிகுறி யாகும்.

286. ஆஸ்பத்திரி அல்லது மருத்துவக் கூடத்தைக் கனவிற் காண்பது, வறுமை, காயம்படல், நோய்ப்படல் போன்றவைகளின் முன்னறிவிப்பாகும்.

287. வீடு கட்டுவதைப் போலக் கனவு காண்பது அதிர்ஷ்ட மற்ற கனவு ஆகும். பணக் கஷ்டத்தையும், பொருளிழப்பையும், உடல்நலப் பாதிப்பையும் அடையக் கூடும்.

288. கட்டிய புதுவீட்டைக் கனவில் பார்ப்பது அதிர்ஷ்டம் தருவதாகும்.

289. ஓர் இரும்புப் பொருளைக் கண்டால், இலாபகரமான ஒரு பேரத்தின் முடிவை அது அறிவிப்பதாகும்.

290. சிவக்கக் காய்ச்சிய இரும்பைக் கண்டால் துக்கங்கள் சம்பவிக்கக் கூடும்.

291. காய்ச்சிய இரும்பால் சுடப்பட்டதாகக் காண்பது, விரைவில் காயம்பட்டு வருந்தக்கூடும் என்பதன் முன் அறிவிப்பாகும்.

292. ஒரு பெண், ஒரு தீவுப் பிரதேசத்தைக் கனவில் காண்பது நல்லதல்ல. கணவனாலும் உறவினராலும் கைவிடப்பட்டு அவள் வேதனைகளைச் சந்திக்கக்கூடும்.

293. யானைத் தந்தத்தையோ, தந்தத்தில் செய்த ஏதாவது ஒரு பொருளையோ கனவிற் கண்டால் ஏமாற்றங்களுக்கும் வஞ்சனைகளுக்கும் உள்ளாக நேரிட்டுவிடும்.

294. குதிரையின்மேல் அதைச் செலுத்துகிறவனைக் கனவிற் காண்பது, போட்டிகளிலும் மற்றும் எதிர்பார்ப்புக்களிலும் வெற்றி காணப் போவதைத் தெரிவிக்கும்.

295. கறுப்பான ஒரு சட்டியைக் கனவிற் காண்பது சாவை எதிர்நோக்கவேண்டும் என்று காட்டும் கெட்டகனவாகும்.

296. அதுவே செம்பாகவோ அல்லது வேறு நிறமுள்ள தாகவோ இருந்தால் நன்மைகளைக் குறிக்கும்.

297. ஒரு சாவியைக் கனவிற் காண்பது பண வரவைக் குறிக்கும்.

298. இளம் பருவத்தினர் ஒரு சாவியைக் கனவிற் காண்பது, அழகான வாழ்க்கைத் துணை விரைவில் அமையப் போவதை அறிவிக்கும்.

299. சாவியைக் கையில் வைத்திருப்பதாகக் கனவு காண்பது சிக்கல்கள் எல்லாம் தீர்ந்துபோவதை அறிவிக்கும்.

300. சாவி தொலைந்ததாகக் காண்பது, தேவை, வருத்தம், கோபம் போன்றவை ஏற்படுவதைத் தெரிவிக்கும்.

301. சமையலறையைக் கனவில் காண்பது, வாழ்க்கையில் முன்னேற்றத்தையும், வெற்றியையும் தெரிவிப்பதாகும்.

302. எரியும் எந்தவொரு விளக்கையும் காண்பது அதிர்ஷ்டம் வருவதைக் காட்டும்.

303. விளக்கு அணைந்து போவதாகக் காண்பது, நோய்களையும், வறுமையையும், துயரங்களையும் முன்னறிவிக்கும்.

304. தோட்டத்திலுள்ள மலர்ப்பாதையைக் கனவிற் காண்பது நன்மை தருவதாகும்.

305. அந்தப் பாதையில் ஓடுவது போலக் காண்பது அதிர்ச்சிகளையும் கவலைகளையும் அறிவிப்பதாகும்.

306. ஈயத்தைக் கனவில் பார்ப்பது, நெருங்கிய நண்பரின் மூலம் வரக்கூடிய பெரிய உதவியைக் காட்டும்.

307. வயலுக்கிடும் உரத்தைக் கண்டால், நல்ல பயிர் விளைவையும், பொருளாதார முன்னேற்றத்தையும் எதிர் பார்க்கலாம்.

308. ஒரு தேசப்படத்தைக் கனவில் பார்ப்பது வெளி நாட்டிலிருக்கும் நண்பர் ஒருவரின் வருகையை உணர்த்தும்.

309. பளிங்குக் கற்கள் கனவிலே தென்படுவது, வாரீசுரிமைச் சொத்துக்களின் வரவைக் குறிக்கும்.

310. உயர்ந்த கொடிக் கம்பங்கள் கனவில் தோன்றுவது பொருளாதார உயர்வையும், மதிப்பு உயர்வதையும் காட்டும்.

311. தீக்குச்சிகள், செல்வப் பெருக்கத்தையும் அறிவிக்கும்.

312. மணமானவர்கள் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைக் கண்டால் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்க்கலாம்.

313. இளம்பருவத்தினர் கண்ணாடியைக் கண்டால் காதலர்களை எதிர்பார்க்கலாம்.

314. கண்ணாடியில் முகம் பார்ப்பது போலக் காண்பது, விரும்பிச் செய்யும் ஒரு முயற்சியில் தோல்வி ஏற்படுவதைக் காட்டுவதாகும்.

315. அடர்த்தியான இருளைக் கனவில் காண்பது, துயரத்தையும் மனக்குழப்பத்தையும் அறிவிக்கும்.

316. செய்தித் தாளைப் படிப்பதாகக் கனவு காண்பது, வெளியூரிலிருக்கும் ஒருவரிடமிருந்து தகவல் வருவதைத் தெரிவிக்கும்.

317. ஒன்பது பொருள்களையோ மனிதர்களையோ கனவிற் காண்பது, எண்ணிய முயற்சிகளில் தீவிரமாகச் செயற்பட்டு உயர்ச்சிகாணப் போவதைக் காட்டுவதாகும்.

318. முத்துக்களைக் கனவிற் காண்பது அழுகையும் கண்ணீரும் கவலையும் கவிந்த கடின காலத்தை அறிவிக்கும், துரோகங்களுக்கும் உட்பட நேரலாம் என்றும் எச்சரிக்கும்.

319. கூழாங் கற்களைக் கனவிற் காண்பது துக்கத்தையும் தொல்லைகளையும் தெரிவிக்கும் அறிகுறியாகும்.

320. இளம் பெண்கள் கூழாங்கற்களைக் கனவிற் கண்டால், தங்களுக்கு எதிரான அழகான பெண்களின் காரணமாக வருத்தங்களை அடையக் கூடும்.

321. ஓர் ஊசியைக் கனவில் பார்ப்பது குடும்பச் சண்டைகள் ஏற்படக்கூடும் என்பதனை அறிவிப்பதாகும்.

322. ஊசித் துவாரத்தில் நூலை நுழைக்க இயலாமற் போவது, ஆதாரமற்ற சந்தேகங்களால் வளரும் மனக்கசப் புக்களைத் தெரிவிக்கும்.

323. எழுதும் பேனாவைக் கனவிற் காண்பது, வேண்டியவராக மதித்துள்ள ஒரு நண்பரால் ஏற்படும் சிக்கலை அறிவிக்கும்.

324. நறுமணப் பொருள்களைக் காண்பது, வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறியாகும்.

325. குண்டூசிகளைக் கனவிற் காண்பது, குடும்பத்திலுள்ளவர்களுடன் கருத்து வேறுபாடுகளும் சண்டைகளும் வருவதை அறிவிக்கும்.

326. ரயிலைப்பார்ப்பது விரைவில் தூரப்பயணத்தைஎதிர்பார்க்க வேண்டும் என்று தெரிவிப்பதாகும்.

327. ரயில் விபத்தைப் பார்த்தால், நெருங்கிய நண்பர் ஒருவரின் நட்பை முறித்துக்கொள்ள நேரிடும்.

328. வானவில்லைக் கனவிற் கண்டால், இருப்பிடத்திலோ வாழ்க்கை முறையிலோ மாறுதல்களைக் கூறலாம்.

329. வலது பக்கம் பார்த்தால், மாறுதலால் நன்மை கிடைக்கும். இடது பக்கம் வானவில் தோன்றக் கண்டால், மாறுதலால் கெடுதல் ஏற்படும்.

330. சவரக்கத்தியைக் கனவில் பார்ப்பது, வேதனைக்கு அறிகுறியாகும். தம்பதிகளுக்குள் சண்டை சச்சரவை எதிர் பார்க்கலாம்.

331. சோப்பைக் கனவிற் காண்பது, சிக்கல் தீர வழி பிறப்பதை அறிவிப்பதாகும்.

332. மூக்குக் கண்ணாடியைக் கனவில் பார்ப்பது, ஏமாற்றுக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று காட்டும்.

333. ஒளிவீச்சுக்களைக் காண்பது துரதிர்ஷ்டத்தை அறிவிப்பதாகும்.

334. மாட்டுத் தொழுவங்கள் கனவில் தோன்றினால், ஓர் உண்மையான நண்பரை விரைவில் எதிர்பார்க்கலாம்.

335. நூலிழை சிக்கல்களைக் குறிப்பிடும்.

336. நூலிழை அறுந்துபோவதாகக் கண்டால், வறுமையை எதிர்பார்க்க வேண்டும்.

337. நூலிழை தொங்கக் காண்பது தொல்லைகளைக் குறிப்பதுதான்.

338. ஒரு சுவரைக் கனவில் காண்பது எதிர்காலத் திட்டத்தில் குறுக்கிடும் தடைகளைக் காட்டும்.

339. சுவரில் ஏறிக் கடப்பதாகவோ சுவரை இடிப்பதாகவோ காண்பது தடைகளைக் கடந்து முன்னேற்றம் அடைவதைக் காட்டும்.

340. சுவரைத் தாண்டிக் குதிப்பதாகக் காண்பது வரப்போகும் உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் அறிவிக்கும்.

341. கைக்கடிகாரம்கனவில்தோன்றினால்,பணவருமானத்தையும் செழிப்பையும் எதிர்பார்க்கலாம்.

342. சுத்தமான குடி தண்ணீர் வசதியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும்.

343. அழுக்கான அசுத்தத் தண்ணீர் வருத்தத்தையும் தொல்லைகளையும் குறிப்பிடும்.

344. தேங்கிக் கிடக்கும் கெட்டுக்கிடை நீர் சாவிலே முடியும் கடுமையான நோயை அறிவிக்கும்.

345. மிகக் குளிர்ந்த நீர் பகைவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கும்.

346. கீழேயிருந்து கசிந்து வரும் நீர் எதிர்பாராத பகைவர்களால் தொல்லை வருவது பற்றிய முன் எச்சரிக்கை யாகும்.

347. அதிசயமான ஒரு பொருளையோ அல்லது மனிதரையோ கனவிற் கண்டால் ஏமாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும்.

348. அலங்காரமான பொருள்களைக் கனவில் காண்பது நல்லதுதான். ஆனால் அவற்றில் ஏதும் ஊனம் இருக்கக் கூடாது; பழுதோ ஊனமோ இருந்தால், மதிப்புக் குறைவு ஏற்படக்கூடும்.

349. அரண்மனை போன்ற ஒரு பெரிய கட்டிடத்தைக் கனவிற் காண்பதால் பொருள் வசதிகள் மிகுதியாகும். அதற்குள் செல்வது போலக் கண்டால் உறவினர்கள் நண்பர்கள் மூலம் பெருத்த யோகங்களை அடையலாம்.

350. ஆபரணங்களைக் கனவிற் காண்பது, பொருள் வரவையும் மதிப்பு உயர்வதையும் குறிக்கும்.

351. ஆபரணங்கள் களவுபோனதாகக் கனவிற் கண்டால், பொருள் இழப்பும், தொழில் நஷ்டமும் ஏற்படக் கூடும்.

352. புதிய ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பதாகக் கனவு கண்டால் பொருள் வரவும் ஆடையாபரணச் சேர்க்கையும், மேன்மையும் ஏற்படும். திருமணமாகாதவர் களுக்குத் திருமண யோகமும் உண்டாகும்.

353. அழுக்கான நைந்த பழைய உடைகளை அணிந் திருப்பதாகக் கனவு கண்டால் வறுமைத் துயரத்தையும் இடையூறுகளையும் சந்திக்க நேரிடும்.

354. வெள்ளைப் பட்டாடை உடுத்திருப்பதாகக் கனவு கண்டால், பொருள் வரவுகளும், இன்பவாழ்வும் கைகூடும்.

355. பச்சை நிற ஆடைகள் உடுத்ததாகக் கனவு கண்டால், வெளியூர்ப் பயணம் ஏதாவது ஏற்படும். வசதிகளும் பெருகும்.

356. சிவப்பு நிற ஆடைகள் உடுத்திருப்பதாகக் கனவு கண்டால், ஆபத்துக்களையும் குழப்பங்களையும் எதிர்பார்க்க வேண்டும்.

357. கருப்பு நிற உடை துக்கத்தையும் சோகத்தையும் காட்டும். வேண்டியவரோ கனவு கண்டவரோ துன்பங்களையோ சாவையோ சந்திக்க நேரலாம்.

358. நீல நிற ஆடை செல்வ வசதிகளைப் பெருகச் செய்யும்.

359. சந்திரனைக் கனவிற் காண்பது செல்வ செல்வாக்குகள் உயர்வதற்கு அறிகுறியாகும்.

360. சூரியனைக் கனவிற் கண்டால் நோய்கள் விலகும்; பகைகள் விலகும்; மதிப்பும் உயரும்; அறிவும்; வளரும் மற்றும் உயர்பதவிகளும் கிடைக்கக் கூடும்.

361. நட்சத்திரக் காட்சிகள் தொழில் விருத்தியையும் உயர்வையும் தரும்.

362. விண் வீழ் கொள்ளிகளைக் கனவிற் கண்டால் தாழ்ச்சியும் நட்டமும் ஏற்படக் கூடும்.

363. நிர்மலமான வானக்காட்சிகளானால், எல்லாம் நன்மைகளாக அமையும். வராத கடன்கள் வந்து சேரும். எதிர்பாராத வருமானங்களும் ஏற்படக் கூடும்.

364. கனவில் மாலைச் செவ்வானத்தைக் காண்பது, நோய்களையும் தாழ்ச்சியையும் தரக்கூடும்.

365. மீண்டும் வானம் தெளிவுபெற்றதாகக் கனவு கண்டால் நோய்களும் தாழ்ச்சியும் விரைவில் நீங்கிவிடக் கூடும்.

366. ஒரு மாதாகோயிலைப் பார்ப்பதாகக் கனவிற் காண்பது ஆபத்து வரப்போவதை அறிவிக்கும் நிமித்தமாகும்.

367. காற்று வீசுவதைத் தெளிவாகக் கனவிற் கண்டால் அனைவராலும் நேசித்துப் போற்றப்படுவீர்கள். உங்களைப் பகைத்தவர்களும் வெறுத்தவர்களும் உங்களிடம் நட்பாகி வந்து மனம் விட்டுப் பழகுவார்கள்.

368. களவுபோன பொருள்கள் திரும்பக் கிடைத்துவிடும் என்பதையும் தொலைந்துபோன பொருள்கள் அகப்பட்டு விடும் என்பதையும் காற்றைக் காண்பது அறிவிக்கும்.

369. வழக்குகளில் ஈடுபட்டிருந்தால் எதிரிகளை வென்று விடவும் இக்காற்றுக் காட்சி துணையாகும்.

370. வெளியூர்ப் பயணங்களுக்குத் திட்டமிட்டால், அது சிறப்பாக வாய்க்கப் பெற்று மகிழ்ச்சி தரும்.

371. எல்லா வகையான நன்மைகளும் தூய்மையான காற்றைக் கனவிற் காண்பதால் வாய்க்கும்.

372. காற்று புழுதிக் காற்றாகவோ இருண்டதாகவோ நிலையற்றதாகவோ கனவில் தோன்றினால் அது கெடுதலைக் குறிப்பதாகும். மனவருத்தங்கள், சுகவீனங்கள், குழப்பங்கள், பொருள்களின் இழப்புக்கள், முயற்சிகளில் தோல்விகள் போன்றவைகளை எதிர்பார்க்க வேண்டும். பொதுவாக எல்லாம் எதிராக நடக்கும்.

373. அமைதியாகவும், கடுமையில்லாமலும், சுழிக் காற்றாக இல்லாமலும் காற்று வீசுவதாகக் கனவு கண்டால், வாழ்விலும் அமைதியும் செழுமையும் பெருகும். பயணங்கள் சுகமாகவும் இலாபகரமாகவும் அமையும். எண்ணிய காரியங்கள் எண்ணப்படி சித்தியாகியும் மகிழ்ச்சி தரும்.

6. கனவிற் காணும் மனிதர்கள் தெய்வங்கள்

374. நண்பர்கள் அல்லது தோழிகளோடு ஆடிப்பாடி மகிழ்வதுபோலக்கனவுகாண்பதுதிருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் வாய்க்கும் என்பதை உணர்த்தும். திருமணமானவர்களுக்கு உற்சாகமான தாம்பத்திய வாழ்வு வாய்ப்பதைக் காட்டும்.

375. குருடன் ஒருவனைக் கண்டால் ஏதோ ஒரு ஆபத்து வரப்போகின்றது என்று பொருள்.

376. நீங்களே குருடாயிருப்பது போலக் கண்டால் அது அதிர்ஷ்டம் தருவதாகும்.

377. பிச்சைக்காரர்களைக் கண்டால் காதலர்கள் காதலில் வெற்றி காண்பார்கள். வியாபாரங்களிலும் தொழில்களிலும் உள்ளவர்கள் அதிர்ஷ்டத்தைக் காண்பார்கள்.

378. இறந்து போன சகோதர சகோதரிகளைக் கனவில் கண்டால் நீடித்த ஆயுள்பலம் உண்டாகும்.

379. குழந்தைகளைக் கனவிற் காண்பது நல்ல செய்திகள் வருவதை அறிவிக்கும். ஆனந்தமும் உற்சாகமும் பெருகுவதையும் தெரிவிக்கும்.

380. ஒரு நண்பன் இறந்ததுபோலக் காண்பது நல்ல செய்திகளின் வரவை அறிவிக்கும்.

381. தேவதைகளைக் கனவில் காண்பது வெற்றியையும் அதிர்ஷ்டத்தையும் அறிவிக்கும்.

382. சிரித்த முகத்தைக் கனவிற் காண்பது நண்பர்களுடன் மகிழ்ச்சியாக இருக்கப் போவதைக் காட்டும்.

383. வெளிரிய முகத்தையும் கலக்கமான முகத்தையும் காண்பது தொல்லைகளையும் வறுமையையும் தெரிவிக்கும்.

384. மாறுகின்ற முகத்தைக் காண்பது இடமாற்றம் தொழில் மாற்றங்களை அறிவிக்கும்.

385. தன் முகத்தைக் கழுவுவது பாவத்துக்கு வருந்திப் பரிகாரம் தேடுவதை அறிவிக்கும்.

386. சொந்த முகத்தைக் கண்ணாடியில் காண்பது, உங்கள் ரகசியத் திட்டங்கள் வீழ்ச்சியடையும் என்பதை அறிவிக்கும்.

387. நண்பர்கள் இல்லாமல் இருப்பதுபோற் கண்டால், நண்பர்கள் விரைவில் திரும்பி வருவார்கள். நண்பர் ஒருவரின் சாவைக் காண்பது நல்ல செய்திகளின் வரவைத் தெரிவிக்கும். நண்பரின் சுகவீனம் கெடுதலான செய்திகளின் வரவை அறிவிக்கும்.

388. இராட்சசனைப் போலப் பெரிய உருவத்தைக் கனவிற் கண்டால் நல்ல அதிர்ஷ்டங்களின் வரவையும், தொழில் முயற்சிகளில் அல்லது காதல் விவகாரங்களில் வெற்றியையும் எதிர்பார்க்கலாம்.

389. பேய் பிசாசுகளைக் கனவில் காண்பது வரப் போகின்ற துரதிர்ஷ்டங்களுக்கு முன் அறிகுறிதான்.

390. நாடோடிக் கூட்டத்தினரை (ஜிப்சீஸ் போன்றோர்) கனவில் காண்பது பல புதிய நாடுகளில் வீணாகச் சுற்றியலைய வேண்டிய பயணங்களுக்குக் காரணமாகும்.

391. வழிபடும் கடவுகளைக் கனவிற் காண்பது நல்ல உடல் நலத்துக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறியாகும்.

392. ஒரு கூன் விழுந்தவனைக் கண்டால் வாழ்வில் பல ஏற்றத்தாழ்வுகளைச் சந்திக்கும்படி நேரலாம்.

393. ஒரு பெண் தன் கணவனைக் கனவிற் காண்பது நல்ல நிமித்தமாகாது. மனவேறுபாடோ அல்லது ஏமாற்றமோ தொடரலாம். மணமாகாத ஒரு பெண் தன் கணவனுடன் இருப்பதாகக் காண்பதும் கெடுதலான காட்சிதான்.

394. ஒரு நீதிபதியைக் கனவில் காண்பது ஒரு கெட்ட சகுனமாகும். அவதூறுகளும் குற்றச்சாட்டுக்களும் மிகுதியாகக் கூடும். வழக்குகளைச் சந்திக்கவும் நேரலாம்.

395. அரசனைப்போலத் தன்னைக் காண்பது ஏமாற்றுக் காரர்களின் பேச்சில் மயங்கி ஏமாறக்கூடும் என்பதன் அறிகுறியாகும்.

396. ஒரு வக்கீலைக் கனவிற் கண்டால் தகராறுகள், செலவுகள், இழப்புக்கள் போன்றவை ஏற்படக்கூடும்.

397. நகர்மன்றத் தலைவரைக் காண்பது, மதிப்பும் மரியாதையும் உயரப் போவதைத்தெரிவிக்கும்.

398. வழிபாட்டுக் கூட்டங்களைக் காண்பது உடல் நலத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவிப்பதாகும்.

399. கடற்கன்னியைக் கனவில் காண்பது துரதிர்ஷ்டத் தையும் தொல்லையையும் தெரிவிப்பதாகும்.

400. ஆயா ஒருத்தியைக் கனவிற் காண்பது, ஒரு குழந்தை பிறக்கப் போவதைத் தெரிவிக்கும்.

401. கறுப்பான ஒருவரைக் கனவிற் காண்பது தொல்லைகள் வரப் போவதன் அறிகுறியாகும்.

402. திருடர்களைக் கனவிற் காண்பது அவதூறுகள் பேசுபவர்களால் வரும் தொல்லைக்கு எச்சரிக்கையாகும்.

403. தெருவில் ஏதாவது விற்பவரைக் கனவில் காண்பது பொய்யான நண்பர்களால் தொல்லை வருவதைக் காட்டும்.

404. பேய்களையும் பூதங்களையும் கனவிற் காண்பது, ஏமாற்றத்தையும் பாவச் செயல்களில் ஈடுபட நேர்வதையும் குறிப்பதாகும்.

405. தேவதூதனைக் கனவிற் காண்பது நெருங்கிய ஒருவரது மரணத்தின் முன் அறிவிப்பாகும்.

406. பிச்சைக்காரனைக் கனவிற் காண்பது உங்களை நேசிப் பவர்கள் உங்களைச் சுற்றி வருவார்கள் என்று காட்டும்.

407. சகோதரர்களோடு வாதாடுவதாகக் கனவு காண்பது மனக்கஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையுமே தருவதாகும்.

408. கனவில் இரண்டு மூன்று குழந்தைகளோடு மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவதாகக் காண்பது அதிர்ஷ்டமான கனவாகும். மகிழ்ச்சியான வாழ்க்கையையும் செய்யும் தொழில்களிலே மிகுதியான வெற்றிவாய்ப்பையும் விரைவில் எதிர்பார்க்கலாம்.

409. குழந்தைகள் சுற்றிச் சுற்றி ஓடுவதைப் போலவும், அவர்களைத் தன்னருகே வரும்படி செய்ய முயன்றும் முடியாமற் போவதுபோலவும் கனவிற் கண்டால், செய்துவரும் முயற்சிகளில் சில இடையூறுகளையும் சிக்கல்களையும் எதிர்பார்க்க வேண்டும்.

410. சிறு குழந்தைகளோடு இருப்பதாகக் காணும் கனவிலும் ஆண் குழந்தைகளாக இருந்தால் நன்மையென்று கூறலாம். குழந்தைகளின் வயதுக்குப் பொருத்தமில்லாத செயல்களை அவர்களிடம் காண்பதும் நல்லதல்ல.

411. தேவாலயங்கள் திறந்திருப்பதையும், சென்று வழிபட்டு வருவதையும் கனவிற் காண்பது, வளமையை மிகுதியாகத் தருவதைச் செய்யும் கனவாகும்.

412. மூடிக்கிடக்கும் ஆலயங்களைக் கனவிற் காண்பது வரப்போகும் பெரியதொரு தடையினை அறிவிப்பதாகும்.

413. பிசாசங்கள் துன்புறுத்துவதாகக் காண்பது சட்டத்தி னால் வரக்கூடிய தண்டனைகளையும் சிரமங்களையும் வெளிப் படுத்தும்.

414. தீய ஆவிகளைக் கனவிற் காண்பது ஒரு கொடியவனால் துன்பப்பட நேர்வதைக் காட்டும். அவை உங்களை விரும்புவது போலக் கண்டால் அமானுஷ்ய சக்திகள் உங்களுக்குக் கிடைக்கக் கூடும்.

415. எதிரியோடு சண்டை போடுவதாகக் கனவு கண்டால் ஒரு சண்டையையோ, கோட்டு வழக்கையோ எதிர்பார்க்க வேண்டும்.

416. எதிரியைக் கண்டு நடுங்கியதாகக் கண்டால், போராட்டத்தில் வெற்றி எதிரிக்குக் கிடைத்து விடும்.

417. எதிரி பயந்து ஓடியதாகக் கனவிற் காண்பது வெற்றி உங்களுக்கே எனக் காட்டும்.

418. புருவங்களைக் கனவிற் காண்பது ஒரு பெண்ணுக்கு அதிர்ஷ்டம் தருவதாகும்.

419. அது மயிரற்ற புருவமாயிருந்தால் திருமணத்தை வெறுப்பவளாக விளங்குவாள்.

420. நீண்டு மயிரடர்ந்து தோன்றினால் திருமணவாழ்வில் ஆனந்தத்தைக் காண்பாள்.

421. கண்ணிழந்ததுபோலக் கனவிற் காண்பவன் வாக்குறுதிகளைப் பறக்கவிட்டு விடுவான். அல்லது அவனோ அவன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரோ சாவைச் சந்திக்க நேரும் ஆபத்துக்கும் உள்ளாகலாம். அல்லது நெருக்கமானவர்களை மீண்டும் சந்திக்க முடியாதபடி பிரிந்து விட நேரலாம். காதல் வாழ்வில் ஏமாற்றமும் காணக்கூடும்.

422. ஒரு விவசாயியைக் கனவிற் காண்பது, ஆனந்தமான நிம்மதியான வாழ்க்கை அமைவதைக் காட்டும் அறிகுறியாகும்.

423. மாமனார் (மனைவியின் தகப்பனார்) கனவில் உயிரோடு தோன்றுவதும் இறந்தாற்போலத் தோன்றுவதும் நன்மையானதல்ல; அவர் கனவில் பயமுறுத்தலையும் பலவந்தங்களையும் காட்டினால் தொல்லைகளே ஏற்படும். அன்பாக வரவேற்றுப் பேசி உபசரித்தால் பலனற்ற நம்பிக்கையும் ஏமாற்றமும் ஏற்படும்.

424. பாதம் வெட்டப்பட்டது போலக் கனவிற் கண்டால் அழிபாடுகள் ஏற்படக் கூடும்.

425. மரத்தினாலான கால் இருப்பதுபோலப் பார்த்தால் நிலைமைகள் தலைகீழாக மாறிவிடும். தாழ்ச்சியிலிருந்து உயர்ச்சியோ, உயர்ச்சியிலிருந்து தாழ்ச்சியோ ஏற்படும்.

426. விரல்களைத் தானோ பிறரோ வெட்டியதாகக் காண்பது கெடுதல்தான்.

427. ஒன்றிரண்டு விரல்களை இழந்ததாகக் கனவு கண்டால் உதவியாளர்களை இழக்க நேரிடும்.

428. வக்கீல்களானால் அவர்கள் வேலை தேடும் நிலைமை ஏற்படும்.

429. கடன்பட்டவர்கள் அளவை மீறிக் கடனுக்காகப் பணம் செலுத்த நேரலாம். கடன் தந்தவர்கள் வரவேண்டிய வட்டியில் பெரும்பகுதியை இழக்க நேரிடும்.

430. உடலின் சதைப்பிடிப்பு மிகுதியானதாகக் கனவு கண்டால் பணவருவாய் மிகுதியாகும்.

431. உடல் மெலிவதாகக் கண்டால் பணத்தை இழந்து ஏழையாக நேரிடும்.

432. உடலில் கறுப்புக்களோ, கறும்புள்ளிகளோடு தடிப்புக்களோ தோன்றினால் பிறரை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட நேரும்.

433. அளவுக்கு மீறிப் பருத்த அல்லது நீண்ட தலை உள்ளதாகக் கண்டால் உயர்ச்சியும் மதிப்பும் ஏற்படும்.

434. திருடர்களோ கொலைஞர்களோ தலையைவெட்டி விட்டதுபோலக் கண்டால், குழந்தைகள் உறவினர்களில் ஒருவர் இறந்துவிட நேரலாம். மனைவி அல்லது சொத்து பறிபோகலாம். பெண்ணானால் கணவனை இழந்து வருந்த நேரலாம்.

435. ஒரு விடுதிக் காவலரைக் கனவில் காண்பது நோயையும் உயிரிழப்பையும் அறிவிப்பதாகும்.

436. தாயாரைக் கனவில் வரக் காண்பது மிகவும் நல்லதாகும். தொலைவிலுள்ள நண்பர் அல்லது உறவினரிட மிருந்து நல்ல தகவல்களும் வரும்.

437. மாமியாரை உயிருடனோ பிணமாகவோ கனவில் காண்பது கெடுதலையே தரும். அவள் பயமுறுத்தல்களையோ முரட்டுப் போக்கையோ காட்டினால் மிகவும் தொல்லைதான்.

438. அன்பாகவும் அமைதியாகவும் மாமியார் பேசினால், வீண் நம்பிக்கைகளுக்கும் ஏமாற்றங்களுக்கும் உள்ளாக நேரும்.

439. வயதான மூதாட்டி நேசிப்பதாகக் கனவிற் கண்டால், அவளை மணந்து கொண்டதாகவும் கண்டால், உங்கள் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் குவியும். ஆனால், உலகத்தின்

பழிப்புக்கும் உட்பட நேரும், அஃதாவது முறையற்ற வழிகளின் மூலம் செல்வம் பெருகும்.

440. இறந்துபோன பாட்டனார் பாட்டியார் மற்றும் முன்னோர்களைக் கனவிற் கண்டால், பாதுகாப்பும் நன்மையும் உண்டாகும்.

441. இப்படியேஇறந்துபோனஉறவினர்கள்நண்பர்களைக்கனவிற் காண்பது, சொந்தக் காரியங்களைக் கவனித்துக்கொண்டு நெறியோடு வாழும்படி அறிவுறுத்துவதாகும்.

442. போர் வீரர்களைக் கனவிற் கண்டால், தொல்லைகளையோ, வம்பு வழக்குகளையோ, கைது செய்யப்பட்டுத் துன்புறு தலையோ அடையக்கூடும்.

443. கன்னிப் பெண்களைக் கனவிற் கண்டு உரையாடுவதுபோலப் பார்ப்பது, ஆனந்தத்தை அறிவிப்பதாகும்.

444. கடுமையான உழைப்பாளிகளைக் கனவிற் கண்டால், மிகுந்த முயற்சியோடு முன்னேற்றத்தை அடையப் போவதைக் காட்டும்.

445. டாக்டர்களைக் கனவிற் கண்டால் நோய்க்கு உள்ளாக நேரும்.

446. ஆடிப் பாடும் ஒருவரைக் கனவிற் கண்டால், மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும்.

447. ஒரு நோயாளியைக் கனவிற் கண்டால், நெருக்கமான வர் யாராவது நோய்ப்படக் கூடும்.

448. மனைவியோடிருக்கும் போது மனைவியைக் கனவிற் காண்பது இருவருக்குமிடையே பிரிவு ஏற்படுவதை அறிவிப்பதாகும்.

449. இப்படியே மனைவி கண்டாலும் பலன் இதுதான்.

450. தெய்வீகமான மனிதர்களைக் காண்பது, தெய்வக் கருணையால் பெரியோர்களின் உதவிகள் கிடைப்பதைக் காட்டும்.

451. முடவர்களைக் கனவிற் காண்பது செய்யும் முயற்சிகளில் ஏதாவது பாதகம் வரப் போவதை அறிவிக்கும்.

452. பாம்பாட்டியைக் கனவிற் காண்பது கொடிய எதிரிகளை வெற்றிபெறும் வாய்ப்பை அறிவிப்பதாகும்.

453. வெளியூரிலிருக்கும் உறவினரைக் கனவிற் காண்பது, அவருக்கு ஏதோ துயரம் நேரிட்டிருப்பதைத் தெரிவிக்கும்.

454. மங்கல மகளிரைக் காண்பது வீட்டில் மங்கலங்கள் பெருகுவதை உணர்த்தும்.

455. காவலர்களைக் கனவிற் காண்பது, ஏதாவது வம்புகளில் சிக்கிக்கொள்ள நேரும் என்பதை அறிவித்து எச்சரிக்கும்.

456. சிவப்பு ஆடை அணிந்தவர்களைக் கனவிற் காண்பது ஆபத்துக்களைத் தெரிவிக்கும்.

457. முக்காடிட்டவர்களைக் காண்பது அவதூறுகளுக்கு உட்பட நேர்வதைக் காட்டும்.

458. ஓடிப்போகிறவர்களைக் காண்பது திருடுபோவதையோ அல்லது ஏமாற்றங்களுக்கு உள்ளாவதையோ காட்டும்.

459. தானே ஓடிப் போவதாகக் காண்பது செயல் முயற்சிகளில் வீழ்ச்சியையோ, எதிரிகளின் கடுமையான தாக்குதலையோ அறிவிக்கும்.

7. கனவிற் காணும் உடைகள் நகைகள்

460. உடுத்துள்ள உடையானது காலத்துக்குப் பொருத்தமானதாகவும் முறையானதாகவும் கனவில் தோன்றினால், உங்களுக்கு ஆனந்தமும் வளமும் வருவதைக் காட்டும்.

461. மெல்லிய கம்பளி, அல்லது லினன் ஆடைகள் கோடை காலத்தில் அணிந்திருப்பதாகக் காண்பது மிக நல்லது.

462. குளிர் காலத்தில் கனமான உடைகளாகக் காண்பது சிறப்பு.

463. வெள்ளாடை அணிந்ததாகக் காண்பது தொல்லைகளைக் குறிப்பிடுவதாகும்.

464. மெக்கானிக்குகளுக்கு, அது தொழிலில் முட்டுப்பாட்டைக் குறிப்பதாகும்.

465. நோயாளிகளுக்கு அது சாவு நெருங்குவதை உணர்த்தும்.

466. நோயாளிகள் கறுப்பு உடையணிந்ததாகக் கனவு கண்டால் நோய் நீங்கி விரைவில் நலம் பெறுவார்கள்.

467. கருஞ்சிவப்பு நிற உடைகள் அணிந்ததாகக் காண்பது குருமார்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் மேன்மையைத் தெரிவிப்பதாகும்.

468. மற்றவர்கள் இந்த உடையினைக் கனவு கண்டால் ஆபத்தையும் தொல்லைகளையும் அவதூறுகளையுமே எதிர்பார்க்க வேண்டும். மறைவான ரகசியங்கள் வெளிப்பட்டும் பேர் கெடக் கூடும்.

469. கறுஞ் சிவப்பு உடைகளைக் கனவு காண்பது நோயாளிகளுக்கு நல்லதல்ல; நோய்கள் மீண்டும் வலுக்கலாம்.

470. வேலையாட்கள் பணியாட்கள் இவ்வாறு கனவு கண்டால் அவர்களுக்கு உயர்வும் மதிப்பும் பெருகும்.

471. ஆனால் இந்தக் கருஞ்சிவப்பு உடைக் கனவானது முற்றிய நோயினர்க்குச் சாவையும், ஏழைகளுக்கு வறுமைத் துயரம் மிகுவதையும், சிலருக்குச் சிறைப்பட நேரிடுவதையும் காட்டுவதுதான்.

472. பெண்கள் இந்தச் செந்நிற ஆடையில் தோன்றக் கணவர்கள் கண்டால், மனைவியரை இழந்துவிட நேரிடும், அல்லது கடுமையான நோய்க்கு மனைவியர் உள்ளாகலாம்.

473. வேற்று நாட்டுச் சிறப்பான உடைகளையோ, அல்லது விலையுயர்ந்த அழகான உடைகளையோ அணிந்ததாகக் காண்பது அனைவருக்கும் அதிர்ஷ்டம் தருவதாகும். இதனால் வசதியும் மகிழ்ச்சியும் பெருகும்.

474. கிழிந்து நைந்துபோன உடைகளை அணிந்துள்ளதாகக் கனவு காண்பது பாதிப்பையும் தடைகளையும் அறிவிப்பதுதான். பிறர் அணிந்திருப்பதாகக் காண்பதும் யோகமான தல்ல.

475. பழைய உடைகள் தொலைந்ததாகக் கண்டால் புதிய உடைகள் கிடைக்கும் யோகம் ஏற்படும். தொலைந்தது கிடைத்து விடுவதாகக் கண்டால் எந்த யோகமும் வராது.

476. விலைக்கு வாங்கிய புதிய ஆடைகள் உடுத்திருப்பது மதிப்பு உயரப்போவதை அறிவிக்கும்.

477. துணிகள் எரிவது போலக் காண்பது கெடுதல்களுக்கும் இழப்புக்களுக்கும் அறிகுறியாகும்.

478. கறுப்பான உடைகளிலிருப்பதாகக் காண்பது, வாழ்வில் மகிழ்ச்சி வருமென்று காட்டும்.

479. பொருந்தாத துணிகளை உடுத்திருப்பதாகக் காண்பது தொல்லைகளையும் துக்கங்களையும் தரக்கூடும்.

480. கந்தலான அழுக்காடைகள் அவமானத்தையும் வறுமையையும் அறிவிக்கும்.

481. பொன்னிழைகளால் அழகுபடுத்தியதும், பூ வேலைகளால் அழகு செய்ததுமான உயர்ந்த உடைகளில் தன்னைக் காண்பது, வரப்போகும் பெருமதிப்பையும் உயர்வையும் அறிவிப்பதாகும்.

482. ஆடையை மட்டும் கனவு காண்பது அதிருப்திக்கு உள்ளாயிருப்பதைக் காட்டுவதாகும்.

483. வேற்று நாட்டு உடைகளை அணிந்திருப்பதாகக் காண்பது வெளிநாட்டுப் பயணத்தை அறிவிக்கும்.

484. மஞ்சள் நிற ஆடைகளைக் கனவிற் காண்பது, மங்கல நிகழ்ச்சிகளைக் குறிக்கும்.

485. வேறொருவரின் ஆடைகளை அணிந்திருப்பதாகக் காண்பது அவருடைய உதவியை நாடப்போவதைக் காட்டும்.

486. பொருத்தமற்ற உடைகளிலிருப்பதாகக் கனவிற் காண்பது வாழ்க்கையில் குறுக்கிடப் போகும் நலிவுகளைக் காட்டும்.

8. கனவிற் காணும் பழங்கள் தாவரங்கள் வேளாண்மை போன்றவை

487. ஆப்பிள் பழத்தைக் கனவில் காண்பதும், ஆப்பிள் பழத்தைத் தின்பதும், நீண்ட ஆயுளையும் ஆனந்தத்தையும் காட்டுவது ஆகும்.

488. நோயாளிகள் ஆப்பிளைக் கண்டாலும் விரைவில் நோய் நீங்கி நலம் பெற்று நெடுநாள் வாழ்வார்கள்.

489. புளிப்பு ஆப்பிளானால், மனவேதனையைத் தரும்.

490. பெண்கள் ஆப்பிளைக் கனவில் காண்பது அவர் களுக்கு வாய்க்கப் போகும் குழந்தைப் பேற்றைக் காட்டுவதாகும்.

491. வாழைப் பழத்தைக் காண்பதும் தின்பதும் விரைவில் வரப்போகும் ஓர் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். ஆர்வத்துடன் அந்த அதிர்ஷ்ட வரவை எதிர்பார்க்கலாம்.

492. ஒரு பூங்கொத்தை எவராவது தருவது போலக் காண்பது, நிறைய ஆனந்தம் அல்லது உயர்வு கிடைக்கப் போவதைக் காட்டும்.

493. இன்னொருவருக்குப் பூங்கொத்தைத் தந்து மகிழ்விப்பது அவருடன் நெருக்கமான உறவு நீடிக்கும் என்று உணர்த்தும்.

494. விளை வயலைக் கனவிற் காண்பது நல்ல உடல் நலம், செல்வம், மகிழ்ச்சியான வருங்காலம் போன்றவைகளைக் காட்டும் முன் அறிவிப்பாகும். பசுமையான வயலைக் காண்பது வளமைப் பெருக்கத்தின் அறிகுறியாகும்.

495. அத்திப் பழங்களைக் கனவிற் காண்பது நல்ல கனவாகும். மகிழ்ச்சியும் செல்வப் பெருக்கமும் எதிர் பார்க்கலாம்.

496. இதே அத்திப்பழக் கனவு ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட தென்றால் மகிழ்ச்சியான திருமண யோகமும், அதன்பின் குழந்தைப்பேறும் ஏற்படும்.

497. பூக்களைக் காண்பது அதிர்ஷ்டம் பொங்கப் போவதன் அறிகுறியாகும்.

498. காட்டுப் பகுதியைக் கண்டால் தொல்லைகளையும், எதிரிகளால் ஏற்படுத்தப்படும் நஷ்டங்களையும் எதிர்பார்க்க வேண்டும்.

499. பழங்களைக் காண்பது என்பது அதிர்ஷ்டக் கனவுதான். அந்தப் பழங்களுக்குத் தகுந்தபடி யோகமும் ஏற்படும். பழத்தைத் தின்பது போலவோ தூர வீசுவது போலவோ காண்பது கெடுதலான கனவாகும்.

500. நெல்லிக் காயைக் காண்பது நேரத்தையும் பணத்தையும் மற்றவர்களின் நண்மைக்காகச் செலவிட நேர்வதைக் குறிப்ப தாகும்.

501. வயலில் அறுவடை செய்வதைக் காண்பது நம்பிக்கை கள் எண்ணியபடி பலன் தராமற் போவதை அறிவிப்பதாகும்.

502. வைக்கோலைக் காண்பது நல்ல அதிர்ஷ்டத்தைத் தரும் கனவாகும்.

503. பயிர்த்தாளை அரிவதுபோலக்காண்பதுதொல்லைகளையும் துன்பங்களையும் அறிவிப்பதாகும்.

504. மொச்சை, கடலைகளைச் சேகரிப்பதாகக் காண்பது அதிர்ஷ்டமான தொழில் முன்னேற்றத்தைக் காட்டும். வேகவைத்தவைகளைக் காண்பது விரைவான வெற்றிகளையும், ஏராளமான வருமானத்தையும் உணர்த்தும்.

505. நறுமணப் பூக்களைக் காண்பதும், மணத்தை முகர்வதும் நன்மை தரும் கனவுகளாகும்.

506. இலைகள் தன்னை மூடியிருப்பதாகக் காண்பது சூழ்ந் திருக்கும் தொல்லைகள் தற்காலிகமானவை என்று காட்டும்.

507. காய்ந்த இலைச் சருகுகளால் மூடப்பட்டிருப்பதாகக் காண்பது, நம்பிக்கைகள் ஏமாற்றங்களாகி விட்டதைத் தெரிவிக் கும்.

508. புல்வெளியைக் கண்டால், அதிர்ஷ்டமான பேரம் வாய்ப்பதையும், வசதிகளும் செழுமையும் மிகுவதையும் எதிர்பார்க்கலாம்.

509. பெரிய மரத்தைக் காண்பது தொடர்ந்த மகிழ்ச்சியை யும் நீண்ட ஆயுள் விருத்தியையும் காட்டும்.

510. கலப்பையைக் காண்பது, அதிர்ஷ்டமே. காதல், திருமணம், தொழில் போன்றவை மெள்ளச் சித்தியாகும்.

511. மழை பெய்யக் காண்பது மிகவும் அதிர்ஷ்டமானதாகும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கலாம். வளமை பெருகலாம். நல்ல பயிர் வளர்ச்சி ஏற்படும்.

512. பெருமழையும் காற்றுமாக ஏற்படுவதைக் கண்டால் தொல்லைகளும் சிக்கல்களும் ஏற்படக் கூடும்.

513. களத்து மேட்டைக் கனவில் காண்பது வளமைப் பெருக்கத்தை எதிர்பார்க்கலாம் என்று காட்டுவதாகும்.

514. தானியக் கிடங்கைக் காண்பது செல்வமிகுந்த ஒரு மனைவியோ கணவனோ கிடைப்பதைக் காட்டும். வழக்கில் வெற்றி பெறுவதை உணர்த்தும். நிலம் போன்றவை உரிமையாக வரும். வியாபாரத்தில் இலாபம் மிகுதியாகும்.

515. காலியான தானியக் கிடங்கைக் காண்பது ஏமாற்றங்களைச் சந்திக்கப் போவதைக் காட்டும்.

516. தானியக்கிடங்கு பற்றி எரிவதாகக் கனவு காண்பது ஒரு திடீர் அதிர்ஷ்டத்தை அறிவிக்கும்.

517. காரட்டுக் கிழங்கு சர்க்கரை வள்ளிக் கிழங்கு போன்றவைகளைக் கனவு காண்பது உரிமைச் சொத்துக்கள் கிடைப்பதையும் மற்றும் பல வருமானங்களையும் காட்டும் அறிகுறியாகும்.

518. இனிமையான பழங்களைத் தின்பது போலக் கனவிற் காண்பது நன்மைகள் வரப்போவதைக் காட்டும்; புளிப்பான பழங்களைத் தின்று முகஞ் சுளிப்பது வரப்போகும் வம்பு வழக்குகளைக் காட்டும்.

519. தானிய வகைகளைக் கனவிற் காண்பது விளைவு மிகுதியையும் வருமானப் பெருக்கத்தையும் காட்டும. மிகவும் கொஞ்சமாகத் தோன்றினால் பஞ்சத்தை உணர்த்தும்.

520. வெள்ளரி வகைகளைத் தின்பதுபோலக் கனவிற் கண்டால் நோய்கள் வரக்கூடும். பலனற்ற நம்பிக்கைகளில் காலம் வீணாகும். ஆனால், நோயாளிகள் சுகமாவதற்கான ஒரு நல்ல அறிகுறி இதுவாகும்.

521. விவசாய நிலத்தையோ தோட்டத்தையோ அடைந்தது போலக் கனவிற் காண்பது அதிர்ஷ்டமானதாகும். யாராவது தம் சொத்துக்களைத் தந்து நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உதவலாம்.

522. நிலத்திற்குப்போய் வேலைகளில் உதவுவதாகக் கனவு காண்பது சிறந்த உடல் நலத்தைக் காட்டும்.

523. நீங்கள் தனிமனிதரானால் உங்களுக்கு விரைவில் வாழ்க்கைத் துணை அமையும் என்று அறிவிக்கும்.

524. நிலத்தைப் பார்ப்பது உங்களுக்கு ஏராளமான கடமைப் பொறுப்புகள் ஏற்படப்போவதைத் தெரிவிப்பதாகும்.

525. உற்சாகமான இடங்கள் வயல் வெளிகள் போன்றவைகளைக் காண்பது அதிர்ஷ்டமான துணையைப் பெற்று ஆனந்தமான வாழ்க்கை அமைவதைக் குறிக்கும். அழகான நல்ல குழந்தைகள் அமைவதையும் குறிக்கும்.

526. ஒரு பெண் இப்படிக் கனவு கண்டால், நல்ல அன்பான கணவனையும் குழந்தைகளையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்வாள்.

527. இனிய கனிந்த பழங்களைத் தின்பதாகக் காண்பது மகிழ்ச்சியான வாழ்வைத்தரும். பழுக்காத கசப்பான பழங்களைத் தின்பதாகக் காண்பது நோயையும் தொல்லையையும் அறிவிக்கும்.

528. வாதுமையைத் தின்பதாகக் காண்பது ஏமாற்றங் களையும் தொல்லைகளையும் அறிவிக்கும்.

529. ஆப்பிள் நீடித்த ஆயுளையும், முயற்சிகளில் வெற்றிகளையும் குறிக்கும்.

530. கொய்யாப் பழம் செல்வப் பெருக்கத்தையும் அன்பின் நிறைவையும் காட்டும்.

531. எலுமிச்சை குடும்பத்தில் அதிருப்தியைக் குறிக்கும்.

532. கொட்டை வகைகள் பருப்புகள் செல்வத்தையும் ஆனந்தத்தையும் தெரிவிக்கும்.

533. தோட்டத்தில் புகுந்து பூப்பறிப்பது நல்ல எண்ணங் களையும் மகிழ்வான தாம்பத்திய வாழ்வையும் அளிப்பதாகும்.

534. பூண்டைத் தின்பதாகக் கனவு காண்பது ஒரு பெண்ணின் வஞ்சகத்தைச் சகிக்க நேரும்.

535. திராட்சைப்பழங்கள் உற்சாகத்தைத் தரும். இவற்றை உண்பதாகக் கண்டால் செல்வப் பெருக்கம் மிகுதியாவதை அறிவிக்கும். இவற்றை வீசி எறிவதாகக் காண்பது பொருள் இழப்பைக் காட்டும். மனவெறுப்பையும் காட்டும். காலிலிட்டு மிதிப்பது அளவு கடந்த நன்மையைக் காட்டும்.

536. மூலிகைச் செடிகளைக் கண்டால் செல்வம் பெருகும்.

537. நிலமும் அருகே நல்ல தோட்டமும் உரிமையாக இருப்பதைக் கனவு கண்டால், நல்ல குடும்பத்துணை வாய்க்கப் பெற்று அமோகமாகக் குழந்தைகளோடு வாழலாம்.

538. தரையில் விழுந்ததுபோலக் கண்டால், வீழ்ச்சியையும், அவதூறுகளையும், அவமானத்தையும் எதிர்பார்க்க வேண்டும்.

539. மந்திரம் செபிப்பதாகவும், பிரார்த்தனை செய்வதாகவும் கனவு காண்பது சிரமங்களை அறிவிப்பதுதான்.

540. தான் வெறிகொண்டாற் போலக் கண்டால், அவன் வரவுக்கு மீறிச் செலவு செய்தும், அளவுக்கு மீறி உலக விவகாரங்களில் ஈடுபட்டும் வாழ்ந்த குற்றவாளி ஆகின்றான். நெடுநாள் வாழ்ந்து அவன் சிறப்படைவான்.

541. அபினி அல்லது கஞ்சாவை மோந்தாற்போலக் கனவிற் காண்பது தொல்லைகளையும், வருத்தங்களையும், கடும் உழைப்பையும் அறிவிப்பதாகும்.

542. திருமணம் செய்து கொள்வது போலக் கனவு காண்பது ஆபத்தைத் தரும். ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்வில் இது இன்பந்தரும் சுகக்கனவு அல்ல. ஆனால் சாவைக் கனவில் காண்பது சுபயோகத்தையும், திருமணத்தைக் காண்பது அசுப யோகத்தையும் தரும்.

543. சேற்று நிலம் கனவில் தோன்றுவது விவசாயிகளுக்கு யோகத்தைத் தரும் கனவாகும். வியாபாரம் மற்றும் செயல் முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்குச் சிக்கலையும் தடையை யும் தருவதாகும்.

544. முலாம் பழங்களைத் தின்பதாகக் கனவிற் காண்பது நோயாளிகளுக்கு நல்லது. 'நோய் தீர்ந்து நலம் பெறுவார்கள்'.

545. சுணைப் பூண்டை (செந்தட்டி பூனைக்காய்ந்தான் போல்வது) கனவில் காண்பதும் அதனால் தினவு எடுத்தாகப் பார்ப்பதும் முயற்சிகளில் மிகக் கடுமையாக உழைத்தே பயன்காண முடியும் என்று தெரிவிப்பதாகும்.

546. இவர்கள் இளம்பருவத்தினராயிருந்தால் அவர்கள் காதல் வாழ்விலே சிரமங்களைத் துணிந்து சந்திக்க முடிவு செய்து ஒன்று படுவதைக் காட்டும்.

547. கொட்டைகள் பருப்பு வகைகளைக் கனவிற் கண்டால் செல்வம் வரும். கலைஞர்கள் மகிழ்ச்சியான திருமண யோகத்தைப் பெறுவார்கள்.

548. வேங்கை மரம், தேக்குமரம் போன்ற வலுவான பெருமரங்களைக் காண்பது செல்வ செல்வாக்கு உயர்வதை முன்னதாகத் தெரிவிக்கும்.

549. எண்ணெய் தேய்த்துக் கொள்வதாகக் காண்பது பெண்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் தருவதாகும். ஆண்களுக்குச் சுகவீனத்தையோ, அவமானத்துக்கு உள்ளாவதையோ தெரிவிப்பதாகும்.

550. வெங்காயத்தைக் கனவிற் காண்பது நல்லதும் கெட்டதுமாக அதிர்ஷ்டம் மாறி வருவதைக் காட்டும். வெங்காயத்தைத்

தின்பதாகக் கனவிற் கண்டால் நல்ல வாழ்க்கைத் துணை வாய்க்கும்; ஆனால் அவர்கள் பதட்டகுணம் உள்ளவராக இருக்கலாம்.

551. ஆரஞ்சுப் பழங்களைக் காண்பதாகவும் தின்பதாகவும் கனவிற் காண்பது புண்களைப் பெறுவதையும், துயரத்தை அடைவதையும், விரக்தியடைவதையும் அறிவிப்பதாகும்.

552. அவித்த பட்டாணி வேர்க்கடலை போன்றவைகளைத் தின்பதாகக் காண்பது பெரிய வெற்றியையும் உல்லாசப் பயணத்தையும் தரக்கூடும்.

553. உடலிலிருந்து ஏதாவது ஒரு செடி முளைப்பது போலக் காண்பது சாவு விரைவில் ஏற்படப்போவதைக் காட்டும்.

554. விரைவில் வளரும் செடிகொடிகளைக் கனவிற் காண்பது நன்மையோ தீமையோ விரைவாக ஏற்படப் போவதைக் காட்டும்.

555. சாறுகளைப் பருகுவதாகக் காண்பது நன்மை தரும் கனவாகும்.

556. உருக்குத் துண்டை ஒடிப்பது போலக் கனவிற் காண்பது எதிரிகளை வெற்றி கொள்வீர்கள் என்று அறிவிப்பதாகும்.

557. உருக்கைத் தொடுவதாக மட்டும் கண்டால் உங்கள் வாழ்க்கை நிலைமை பாதுகாப்பாயிருப்பதை உணர்த்தும்.

558. ஒடிக்க முயன்று உங்களால் வளைக்கவும் இயலாமல் திணறினால் கடுமையான ஒரு விபத்தைச் சந்திக்க நேரலாம்.

559. ஒளி மிகுந்த சூரியனின் கனவுக்காட்சி, இரகசியங் களைக் கண்டுபிடிக்கப் போவதைக் காட்டும்.

560. ஒளிமேகத்தால் மறைக்கப்பட்டுத்தோன்றினால் கெடுதலான தகவல்களைக் கேட்க நேரும்.

561. மறையும் கதிரவனைக் கண்டால் நஷ்டங்கள் ஏற்படும்.

562. கிரகணம் பற்றிய சூரியனைக் கனவிற் கண்டால் ஒரு திடீர் இழப்புக்கு உட்பட நேரும்.

563. சூரியன் ஒளிவீசக் காண்பது செல்வப் பெருக்கமும் பதவியுயர்வும் பெருமையும் வரப்போவதை அறிவிப்பதாகும்.

564. புயல் காற்றைக் கண்டால் இழப்புக்கள் தொல்லைகள் அபாயங்கள் போன்றவை ஏற்படக் கூடும்.

565. ஏழை எளியவர்கள் கண்டால் புதிய முன்னேற்றங்களான மாறுதல்களை எதிர்பார்க்கலாம்.

566. முட்களைக் காண்பது ஏமாற்றத்தின் அறிகுறியாகும். முட்கள் குத்திப் புண்படுத்தியதாகக் காண்பது பண நட்டத்தையும் இழப்பையும் அறிவிக்கும்.

567. இடி மின்னல்களை வியாபாரிகளோ தொழில் செய்பவர்களோ கனவிற் கண்டால் முன்னேற்றமான வெற்றிகளை அடைவார்கள்.

568. இளம் பருவத்தினர் திருமணத்தை எதிர்பார்க்கலாம்.

569. இவற்றால் தாக்கப்பட்டதாகக் காண்பது மிகச் கெடுதலான கனவாகும். ஆபத்துக்களும் துயரங்களும் ஏற்படக் கூடும்.

570. பூமியினுள் புதைத்திருந்த புதையலைக் கண்டதாகக் கனவிற் காண்பது கெடுதலான கனவாகும். இதனால் ஆயுள் பலம் குன்றும்.

571. கொட்டுகளின் முழக்கைக் கனவில் கேட்பது தீய கனவு ஆகும். தொல்லைகளையும் துரதிர்ஷ்டங்களையும் எதிர்பார்க்க வேண்டும்.

572. வாந்தி எடுப்பதாக கனவு காண்பது ஏழைகளுக்கு முன்னேற்றத்தின் அறிகுறியாகும்.

573. பணவசதி மிக்கவர்களுக்குத் தொல்லைகளை அறிவிப்பதாகும்.

574. கழுவுவது, துணி தோய்ப்பது போன்றவைகளைக் காண்பது இடமாற்றம், தொழில் மாற்றங்களைக் காட்டும் அறிகுறியாகும்.

575. இரவில் உட்கார்ந்து காவல் காப்பது போலக் கனவு காண்பது பெரிய காரியங்களில் ஈடுபட நேர்வதை அறிவிக்கும்.

576. ஏழைகள் இப்படிக் கனவு காண்பது தீவிரமாக முயன்று முன்னேறத் துடிப்பதை அறிவிக்கும்.

577. போராட்டத்தைக் கனவிற் காண்பது ஆங்காரத்தையும், தொல்லையையும், அறிவீனத்தையும் அறிவிப்பதாகும்.

578. விரக்தியாக இருப்பது போலக் கனவு காண்பது ஊக்கத் தோடு செயல்பட போவதை அறிவிக்கும்.

579. திருமணம் செய்து கொள்வது போலக் கனவு காண்பது ஒரு நோயாளிக்குச் சாவு நெருங்குவதை அறிவிப்பதாகும்.

580. உடலில் ஊனமான ஒருத்தியை மணப்பது போலக் கனவு கண்டால் வாழ்வில் அதிருப்தியும் வேதனையும் மிகுதியாகும்.

581. அழகான பெண்ணை மணப்பதாகக் கனவு கண்டால் ஆனந்தமும் வருமானமும் பெருகும்.

582. அழுவது போலக் கனவு கண்டால் ஆனந்தமும், வளர்ச்சியும் வாய்க்கும்.

583. குஸ்தி போடுவதாகக் கண்டால் நோய் வழக்கு விவகாரம் மனப்போராட்டம் போன்றவை ஏற்படும்.

584. எழுதிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டால் காதாற் கேட்டவைகளை வெளியே சொல்லாதீர்கள் என்று எச்சரிப்பதாகும்.

585. கொட்டாவி விடுவதாகக் கனவு கண்டால் உங்கள் நண்பர்கள் உங்களை வெறுத்துவிட்டதாகப் பொருள்.

586. மெதுவாக வளரும் மரஞ் செடி கொடிகளைக் கனவிற் கண்டால் எதுவும் நெடுநாட் கழித்தே நேரும் என்பதைக் காட்டுவதாகும்.

587. நிலத்தில் உழுவதுபோலக் கனவு காண்பது திருமண உறவில் வெற்றியைக் குறிப்பிடுவதாகும்.

588. உழவு மாடுகள் சோர்ந்து விழுந்ததாகக் காண்பது தீயதாகும். உழைப்பு வீணாவதையும், பயிர் பட்டுப் போவதையும், அறுவடைக் காலத்தில் பலன் வராமையும் போன்ற சிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.

589. மாதுளைப் பழங்களைக் காண்பது ஒரு பெருஞ் செல்வரின் உதவி கிடைப்பதைக் காட்டும். ஆனால் மாதுளை நன்றாகப் பழுத்ததாக இல்லாவிட்டால் சுகவீனமும், கெட்டவர் களின் சகவாசமும் ஏற்படலாம்.

590. தெய்வங்களை நோக்கிப் பிரார்த்திப்பதாகக் கனவு காண்பது ஆனந்தத்தைத் தருவதாகும், இதனால் நன்மை மிகுதியாகும்.

591. பிச்சைக்காரர்கள் ஏழைகள் வருந்தி வாடுவோர் போன்றவர்கள் பிரார்த்திப்பதாகக் காண்பது கோபத்தையும் சிரமத்தையும் தோற்றுவிப்பனவாகும்.

592. புல்புதரோடு கூடிய சேற்றுப் பள்ளங்களில் விழுவது போலக் காண்பது முயற்சிகளில் தடைகளையும் தொல்லைகளையும் அறிவிப்பதாகும்.

593. முள்ளங்கியைத் தின்பது போலவோ, முள்ளங்கி மணத்தை அறிவது போலவோ கனவு கண்டால் மூடிமறைக்கப் பட்ட உண்மைகளைக் கண்டுபிடிக்கக்கூடும். குடும்பங்களில் இதனால் வீண் கலவரம் உண்டாவதும் கூடும்.

594. மழையைக் காண்பது நல்ல கனவு. எடுத்துள்ள முயற்சிகளில் வெற்றி காணலாம்.

595. அடை மழையையோ புயற்காற்றோடு கூடிய மழை யையோ கண்டால் தொல்லைகளைக் கடந்தே வெற்றி காண முடியும்.

596. இடி மின்னலோடு கூடிய மழையைக் கண்டாலும், செய்யும் முயற்சிகளில் பல எதிர்பாராத தடைகளை வென்றே வெற்றியை அடைய முடியும்.

597. அரிசியைத் தின்பது தடைகள் மிகுதியாவதை அறிவிக்கும்.

598. ஆற்றைக் கனவில் காண்பது வாழ்வில் நிலையான தொடர்ந்த வெற்றிப் போக்கைக் காட்டுவதாகும்.

599. ஆற்றின் கடுமையான வெள்ளப் பெருக்கில் நீந்திப் போவதாகக் காண்பது பிற்காலத்தில் வரவிருக்கும் ஆபத்துக் களை உணர்த்துவதாகும்.

600. மணமுள்ள வேர்களைக் (கிழங்குகளைக்) காண்பதும், உண்பதும் இரகசியங்களையும் கோபங்களையும் வெளிப்படுத்த நேர்வதைக் காட்டுவதாகும்.

601. உண்ணும் முன்பாக அரிந்தோ ஒடிந்தோ காணப் பட்டால் ஏதாவது சிறு காயம் ஏற்படும்.

602. ரோஜாப் பூக்களைக் காண்பதும் அணிவதும் நல்ல கனவுதான், நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம்.

603. ரோஜாப்பூக்களைப் பறிப்பதாகக் கனவிற் காண்பது செயல்கள் முடிவை நோக்கிச் செல்லச் சிரமப்படுவதை உணர்த்தும்.

604. கடல் மேல் நடப்பதாகக் காண்பது கடற்பயணம் போகிறவர்களுக்கு நன்மையான கனவாகும்.

605. இப்படியே வேலையாட்களுக்கும் முன்னேற்றம் அளிப்பதாகும்.

606. திருமணம் செய்துகொள்ளப் போகிறவர்களுக்கும் நலம் செய்வதுதான்.

607. பசுமையான மரங்களைக் காண்பது நம்பிக்கையை வளர்த்து நன்மை அளிக்கும்.

608. கடுங்காற்றால் சிதறிப்போன மரத்தைக் காண்பது குடும்பத்தில் சண்டை சச்சரவுகளை அறிவிக்கும்.

609. இலையுதிர்ந்த மரம் ஏமாற்றத்தைக் காட்டும்.

610. வாடிய மரம் துக்கத்தை அறிவிக்கும்.

611. பூ அரும்புகள் நிறைந்த மரம் வெற்றி வாய்ப்பை அறிவிக்கும்.

612. வெட்டுப்பட்ட மரம் பொருள்கள் திருட்டுக்கு உள்ளாவதை அறிவிக்கும்.

613. மரத்தில் ஏறுவதாகக் காண்பது தொழில் அல்லது பணிகளில் மாறுதல்களைக் குறிப்பிட்டுக் காட்டும்.

614. திராட்சைக் கொடியைக் காண்பது அளவுகடந்த செல்வ வரவையும் ஆனந்த வாழ்வையும் அறிவிக்கும்.

615. பூவும் காயுமாக விளங்கும் மரம் கனவில் தோன்றுவது குடும்ப வளர்ச்சியையும் தொழில் முன்னேற்றத்தையும் காட்டும்.

616. மரங்கள் புயல்காற்றில் ஆடுவது போலவும் சிதைவது போலவும் காண்பது துரதிர்ஷ்டத்தைக் காட்டும்.

617. மரத்தை எவரோ வெட்டுவதாகக் காண்பது வரப்போகும் ஆபத்தை முன்னறிவிக்கும்.

618. முட்செடிகளைக் காண்பது ஏற்படவிருக்கும் தொல்லைகளைக் காட்டும்.

619. துளசி வில்வம் போன்றவற்றைக் காண்பது தெய்வ சகாயத்தால் நன்மை வருவதைக் காட்டும்.

620. சிவப்புப் பூக்களைக் காண்பது போராட்டங்களை சந்திக்க நேர்வதைக் காட்டும்.

9. கனவிற் காணும் விலங்குகள் பறவைகளும் மற்றும் ஜீவராசிகளும்

621. வீட்டில் வளர்க்கும் ஆடுமாடுகள் போன்றவைகளைக் கனவிற் காண்பது நன்மையானதுதான். பிரிந்து வெளியூர் போயிருக்கும் நண்பரோ உறவினரோ விரைவில் திரும்பி வருவார்கள். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மன வேறுபாடுகள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும்.

622. கொடிய காட்டு மிருகங்களைக் காண்பது எதிரிகள் உங்களுக்குக் கேடு செய்யச் சூழ்ச்சி செய்கின்றார்கள் என்பதைக் காட்டும். எனவே, இவற்றைக் கண்டால் மிகவும் எச்சரிக்கை யோடு நடந்துகொள்ள வேண்டும்.

623. கரடி தன்னைத் துரத்துவதாகக் கண்டால், எதிராளிகள் உங்களை வெற்றி காணக்கூடும். கரடியை நீங்கள் துரத்துவதாகக் கண்டால், எதிராளிகளை நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

624. தேனீக்களைக் காண்பது செய்துவரும் முயற்சியில் படிப்படியாக முன்னேறி வெற்றி காண்பீர்கள் என்று காட்டும்.

625. பறவையோடுள்ள கூட்டைக் காண்பது திருமண அதிர்ஷ்டத்தைக் காட்டும்.

626. பறவை இல்லாத வெற்றுக் கூட்டைக் காண்பது நெருக்கமான நண்பர்களோ உறவினர்களோ பிரிந்து போவதைக் காட்டக் கூடும்.

627. பாடும் பறவைகளான கிளி, மைனா, கானரி போன்றவைகளைக் கண்டால் இளைஞர்களுக்கும்

கன்னியர்களுக்கும் திருமண யோகத்தைக் கூறலாம். அழகான வசதியான வீடு வாய்ப்பதையும் எதிர்பார்க்கலாம்.

628. சேவல் கூவுவதைக் கண்டால் பெரிதான அதிர்ஷ்டத்தை விரைவில் எதிர்பார்க்கலாம்.

629. பசுமாடுகளைக் காண்பதும் செல்வம் பெருகுவதைக் காட்டும்; முன்னேற்றத்தை விரைவில் எதிர்பார்க்கலாம்.

630. நாயைக் கனவில் காண்பது சாதகமான பலனைத் தருவதுதான்.

631. நாள்கள் குரைப்பது எவரோ உங்களுக்குத் தீங்கு செய்ய முயல்வதைக் காட்டும்.

632. இரண்டு நாய்கள் தமக்குள் சண்டையிடுவது, உங்கள் நெருங்கிய நண்பர்களில் இருவர் தமக்குள் மோதிக் கொள்ளப் போவதைக் காட்டுவதாகும்.

633. கழுதையைக் காண்பதும், கழுதை கத்துவதைக் கனவில் கேட்பதும் அதிர்ஷ்டத்தின் வரவைத் தெரிவிப்பது தான்.

634. புறாக்கள் காதலர்களுக்கு வெற்றியை அறிவிக்கும் தோற்றமாகும். தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை வாய்ப்பதை அறிவிப்பதும் ஆகும்.

635. கழுகு, ஒரு புதிய இடத்தில் நீங்கள் காணப்போகும் வெற்றியை அறிவிப்பதாகும்.

636. வாத்துக்கள் வளமை மிகுவதையும், மகிழ்ச்சி பெருகுவதையும் அறிவிக்கும்.

637. முட்டைகளைக் காண்பது அதிர்ஷ்டம், பணவரவு, முயற்சிகளில் வெற்றி போன்றவைகளை அறிவிக்கும்.

638. உடைந்த முட்டைகள் தோல்வியையும் நஷ்டத்தையும் தெரிவிக்கும்.

639. வெள்ளை இறகுகள் அதிர்ஷ்டவரவைக் காட்டும். கறுப்பு இறகுகள் தோல்வியையும் இழப்பையும் அறிவிக்கும்.

640. ஈக்கள் மொய்த்திருப்பதைக் காண்பது பொறாமைக் காரர்களும் எதிரிகளும் அவதூறுகளைப் பரப்பப் போவதைத் தெரிவிக்கும்.

641. நரிகளைக் காண்பது ரகசிய எதிரிகளால் வரும் தொல்லையைக் காட்டும். நரியைக் கொல்வது போலக் காண்பது அதிர்ஷ்டத்தின் வரவைக் காட்டும்.

642. தவளைகள் முகஸ்துதி பேசி ஏமாற்றுபவர்களிடமும், விதண்டாவாதம் பேசுபவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கும்.

643. குள்ளவாத்துக்கள் மகிழ்ச்சியையும் வெற்றியையும் உணர்த்தும். வாத்தின் இரைச்சலைக் கேட்பது வியாபார ஒப்பந்தங்கள் விரைவில் முடிந்து லாபம் தரப் போவதைத் தெரிவிக்கும்.

644. வெள்ளாடு துரதிர்ஷ்டத்தின் அறிகுறிதான். கடலோடிகள், டிரைவர்கள், விமானம் ஓட்டிகளுக்கு அபாய அறிவிப்புத்தான்.

645. வெள்ளையான ஆடு நல்ல அதிர்ஷ்டத்தை அறிவிக்கும். கூட்டமான ஆடுகள் பூர்வீகச் சொத்துக்கள் கிடைப்பதைத் தெரிவிக்கும்.

646. பாடும் பறவையைக் காண்பது பொருளாதார முன்னேற்றத்தை அறிவிப்பதாகும்.

647. பறவைக் கூட்டைக் காண்பது ஆனந்தமான குடும்ப வாழ்க்கை அமையப் போவதை அறிவிப்பதாகும்.

648. குயிலின் கூவுதலைக் கனவில் கேட்டது மகிழ்ச்சியையும், முன்னேற்றத்தையும், நல்ல விளைச்சலையும், மகிழ்ச்சியான திருமண யோகத்தையும் அறிவிப்பதாகும். பெண்கள் கேட்பது அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் நல்ல பாடகராவதைக் காட்டும்.

649. பாலைக் காண்பது குடும்ப வளர்ச்சியையும், அமைதியையும் தெரிவிக்கும். பால் கொட்டிப் போவதாகக் காண்பது தொழிலில் நஷ்டத்தைத் தெரிவிக்கும்.

650. பன்றியைப் பார்ப்பது நல்ல அதிர்ஷ்டம் ஆகும், எல்லா விவகாரங்களிலும் நியாயமான வெற்றியை எதிர்பார்க்கலாம்.

651. புறாவைக் காண்பது குடும்ப சுபிட்சத்தையும் வசதியையும் வெளிவிவகாரங்களில் வெற்றியையும் அறிவிக்கும்.

652. முயலைக் காண்பது வெற்றிக்கு அறிகுறி. கறுப்பு முயலைக் காண்பது கவலைக்கு அறிகுறியாகும்.

653. எலியைக் கனவில் பார்த்தால் வேலையாட்கள் அல்லது கீழே பணி செய்வோர்களின் துரோகத்தை எதிர்பார்க்க வேண்டும். வெள்ளை எலியைக் கண்டால் அதிர்ஷ்டம் ஏற்படும்.

654. பெருச்சாளியைக் கண்டால் வியாபாரிகளுக்குத் துரதிர்ஷ்டம் ஏற்படும். காதலர்களுக்கு ஏமாற்றம் ஏற்படும். தம்பதிகள் கண்டால் பிரிவு ஏற்படக்கூடும்.

655. பாம்பைக் கனவில் காண்பது நோய் ஆயுட் குறைவு போன்றவைகளைத் தரக்கூடும்.

656. சிட்டுக் குருவியைப் பார்ப்பதும் தொல்லைகளை அறிவிப்பதே. சிட்டுக் குருவிக் கூட்டத்தைக் கண்டால் விரைவில் பயணம் வாய்க்கக் கூடும். தப்பிக்கப் போராடும் குருவியைக் கண்டால் ஏதோ துன்பம் வருவதை எதிர்பார்க்க வேண்டும்.

657. சிலந்திப் பூச்சியைக் காண்பது நல்ல அதிர்ஷ்டம் தருவதாகும். திட்டங்களில் வெற்றி காணலாம். சிலந்திப் பூச்சியைக் கொல்வது போல் பார்த்தால் அது தீய கனவு ஆகும்.

658. குளவிகளைக் கனவிற் காண்பது பொறாமைக் காரர்களால் ஏற்படும் தொல்லைகளைக் குறிப்பிட்டு அறிவிப்பதாகும்.

659. முதலையையோ அல்லது வேறு ஏதாகிலும் ஒரு விஷ ஜந்துவையோ கனவிற் காண்பது, வேண்டியவர்களுடன் மனத் தாங்கல்களையும் சண்டைகளையும் ஏற்படுத்தும்.

660. எறும்புகளைக் கனவில் காண்பது எப்போதும் உலக சுகத்தைப் பற்றியே நினைத்திருப்பதையும், வஞ்சகமான மனத்துடன் வாழ்க்கை நடத்துவதையும் காட்டுவதாகும்.

661. அடிக்கடி எறும்புகளைக் கனவில் காண்பது, நெடுங்காலம் உயிர்வாழ மாட்டார் என அறிவிப்பதாகும்.

662. இறக்கையுள்ள எறும்பைப் பார்ப்பது ஆபத்தான பிரயாணத்தையோ அல்லது பிரயாணத்தில் ஏற்படும் விபத்தையோ அறிவிப்பதாகும்.

663. சாதாரண எறும்பைக் காண்பது விவசாயிகளுக்கு ஒரு சுபமான கனவாகும். நிறையத் தானியங்கள் விளைந்து அவர்கள் மகிழ்ச்சி காண்பார்கள்.

664. பொதுமக்களை நம்பி வாழ்பவர்களுக்கும், பலருடைய தொடர்பால் இலாபம் பெறுகின்றவர்களுக்கும் எறும்பைக் காண்பது அதிர்ஷ்டம் தருவதாகும்.

665. நோயாளிகள் எறும்பு தம்மருகே வந்ததாகக் கனவு காண்பது விரைவில் நோய் தீர்ந்து உடல்நலம் பெறப் போவதற்கான அறிகுறியாகும்.

666. ஆனால், எறும்புகள் தங்கள் உடலின் மேல் மொய்ப் பதாகக் கனவு கண்டால் இறப்பு உறுதி என்று கருதவேண்டும்.

667. நாய்கள் குரைப்பதாகக் கனவில் காண்பது, அழிவையும் அவமானத்தையும் அடையப் போவதைத் தெரிவிக்கும்.

668. வௌவாலைக் கனவில் காண்பது சாதகமற்ற ஒரு கனவு ஆகும்.

669. ஒரு கரடியைக் கனவில் காண்பது பணக்காரனான, கொடிய, தந்திரசாலியான, துணிந்த ஒரு பகைவன் ஏற்பட்டிருப் பதைக் காட்டுவதாகும்.

670. தேனீக்களைக் கனவில் காண்பது அதிர்ஷ்டம் தருவதாகும். வசதிகளும் வளமைகளும் வாழ்க்கையில் இனிமையும் பெருகும்.

671. தேனீக்கள் கொட்டுவதாகக் கனவு காண்பது கெடுதலான நிமித்தமாகும். பகைவர்களால் ஆபத்து ஏற்படக் கூடும்.

672. காதருகில் தேனீக்கள் ஒலிசெய்வது எதிரிகள் பலர் தொல்லை தரத் திட்டமிடுவதை அறிவிக்கும். கொட்டுதலுக்கு உட்படாமல் அவற்றை விரட்டிவிட்டால் எதிரிகளை வெற்றி பெற முடியும் என்றும் தெரிவிக்கும்.

673. தேனீக்களைக் கனவிற் காண்பது கிராமவாசிகளுக்கு வருமானத்தை மிகுதியாக்கும் சிறந்த நிமித்தமாகும்.

674. தேனீக்கள் வீடு அல்லது தோட்டப் பகுதிகளில் கூடு கட்டினதாகக் கண்டால் மேன்மையும், வியாபார முன்னேற்றமும், சிறப்பான யோகங்களும் ஏற்படும்.

675. தேனீக்கள் உழைப்பதைக் கனவில் காண்பது தொழிலில் சுறுசுறுப்பான வளர்ச்சியைக் காட்டும்.

676. தேனீக்கள் கொட்டினதாகக் கண்டால் முயற்சியில் தொல்லையோ நஷ்டமோ வரக்கூடும்.

677. தேன் எடுத்துச் சேர்ப்பதாகக் கனவு கண்டால் செல்வப் பெருக்கமும், இலாப விருத்தியும் ஏற்படும்.

678. பறவைகள் பறந்துபோவதாகக் கனவிற் கண்டால் நெடுந்தொலைவுக்குப் பயணம் போய்வர நேரிடும். அல்லது எதிர்பாராத ஒரு தகவல் வந்து சேரும். அவை பறக்கும் போது விளையாட்டுக் காட்டினால் மேற்கொள்ளும் பயணம் மகிழ்ச்சியானதாக முடியும்.

679. மிகுதியான பறவைகளைப் பார்ப்பது கூட்டங்களில் கலந்து கொள்ள நேர்வதையும், வழக்கு மன்றங்களில் போக நேர்வதையும் காட்டும்.

680. வலைவைத்துப் பறவைகளைப் பிடித்ததுபோலக் கனவு காண்பது எதிரிகளைத் தந்திரமாக வளைத்துப் போட்டுக் கொள்வதை அறிவிக்கும்.

681. பெரிய பறவைகளைக் கனவில் காண்பது பணக்காரர்களுக்கு நன்மையானது. சிறிய பறவைகளைக் கனவிற் காண்பது எளியவர்களுக்கு நன்மை தருவது.

682. சிறு பறவைகளின் இரைச்சலைக் கேட்பது நலம் விளைப்பதாகும்.

683. பெரிய பறவைகள் சண்டையிடுவதைக் காண்பது கெடுதலைக் குறிப்பதாகும்.

684. தலைக்கு மேல் பறவை பறப்பதாகக் காண்பது எதிரிகளின் மனப்பொருமலைக் காட்டும்.

685. கறுப்பான பறவைகளை இப்படிப் பார்ப்பது ஆபத்தைக் கொண்டு தரும்.

686. பறவைகளின் பாட்டைக் கேட்பது மகிழ்ச்சியைக் கொணர்வதாகும்.

687. பறவைக் கூட்டைக் கனவிற் காண்பது அதிர்ஷ்டம் தருவது. முட்டைகளோ குஞ்சுகளோ இல்லாத வெறுங் கூட்டைக் கனவிற் கண்டால் பெரிய ஏமாற்றத்துக்கு உட்பட நேரிடும்.

688. பறவையைப் பிடித்ததுபோற் காண்பது இலாபத்தை யும் மகிழ்ச்சியையும் கொண்டு வரும்.

689. காட்டுப் பன்றியைக் கனவிற் கண்டால் மனைவியின் கோபத்துக்கு உள்ளாக நேரிடும். மனைவி இப்படிக் கனவு கண்டால் கணவரின் கோபத்தால் சங்கடப்பட நேரும்.

690. உங்களிடம் ஒரு காளைமாடு இருப்பதாகக் கனவு காண்பது ஆதாயத்தைத் தருவதாக அமையும்.

691. ஒரு காளையை ஒருவர் கொல்வதைக் காண்பது தொல்லைகளையே ஏற்படுத்தும் கனவாகும்.

692. ஒரு காளைமாட்டை ஓட்டிச் செல்வதாகக் காண்பது உற்சாகத்தையும் நன்மையையும் பெறப்போவதன் அறிகுறியாகும்.

693. கறுப்புக்காளையைக் கண்டால் ஏமாற்றத்துக்கும் மனச் சோர்வுக்கும் உள்ளாகப் போவதை எதிர்பார்க்கலாம்.

694. ஓடுகின்ற காளையைக் காண்பது ரகசியங்கள் அம்பலமாகப் போவதைக் காட்டும்.

695. வேலையில் ஈடுபட்டிருக்கும் எருதைக் காண்பது பொருள் வரவையும் செழிப்பையும் காட்டும்.

696. நீரருந்தும் எருதைக் காண்பது பொருள்கள் திருடு போகப் போவதை அறிவிக்கும்.

697. கொம்பற்ற காளையைக் கனவில் கண்டால் சொத்துக்கள் ஏற்படும்.

698. தாயோடு சண்டையிடும் எருதைக் கண்டால் நண்பர் களிடம் பாசம் ஏற்படும்.

699. ஒரு வண்ணத்துப் பூச்சியைக் கனவில் கண்டால் நிலையாக நேசிக்கும் ஒருவரை அடைவீர்கள்.

700. ஒட்டகத்தைக் கனவில் காண்பது ஒரு பெரிய அதிர்ஷ்டம் வரப்போவதைக் காட்டுவதாகும். பல ஒட்டங்கள் ஒன்றாக வரிசையாக வருவதாகக் காண்பது சொத்துச் சுகங்கள் விரைவில் அழிந்துபோவதைக் குறித்து எச்சரிக்கும் அல்லது வனாந்திரப் பகுதிகளில் பிரயாணம் போக நேரிடலாம்.

701. அண்டங் காக்கை கத்துவதாகக் கனவு கண்டால் தொல்லைகளும் தேவனைகளும் வரக்கூடும்.

702. பூனையைக் கனவில் கண்டால், திருட்டுக்கோ கொள்ளைக்கோ ஆளாக நேர்ந்துவிடும்.

703. அன்பிலே விரிசலும் தொல்லையும் ஏற்படக் கூடும். மிகவும் நேசித்தவர்களின் துரோகத்தையும் எதிர் பார்க்கலாம்.

704. பூனை அழகாகவும் மென்மையாகவும் தோன்றினால் துரோகத்தை எவரோ செய்யப்போகின்றார்கள் என்று எதிர் பார்க்க வேண்டும்.

705. அழுக்காகவும் விகாரமாகவும் பூனை காணப்பட்டால் எப்போதும் உங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் கவனமாக இருக்கவேண்டும்.

706. பூனையைக் கொல்வதாகக் காண்பது வரும் ஆபத்திலிருந்து தப்பிடுவதைக் காட்டும்.

707. பூனை சீறுவதாகப் பார்த்தால், குடும்பத்திலே சண்டைகள் சச்சரவுகள் மிகுதியாக ஏற்படக் கூடும் எனலாம்.

708. பூனை குறுக்கிடுவது காரியத்தடை என்பது சகுனசாத்திரம்; கனவில் பூனை வந்தாலும் பெரும்பாலும் தொல்லைதான்.

709. பாலேடு வெண்ணெய் போன்றவைகளை உண்பதாகக் கனவு காண்பது செய்யும் தொழில்களில் இலாப மிகுதியையும், வருமானப் பெருக்கத்தையும் உணர்த்துவதாகும்.

710. பசுமாடு கனவில் தோன்றுவது செல்வப் பெருக்கம் உண்டாகப் போவதைக் காட்டும்.

711. நமக்குரிய நாய்களைக் கனவில் காண்பது துணிவையும் பாசத்தையும் நாணயமான நண்பர்களையும் தெரிவிக்கும்.

712. மற்றவர்களுக்குரிய நாய்களைக் காண்பது மோசமான பகையாளிகளைக் காட்டும்; அவர்களால் சிரமப்பட நேர்வதை யும் குறிக்கும்.

713. நாய் குரைத்தபடி மேலே விழுந்து துணிகளைக் கடித்துக் குதறினாற் போலக் காண்பது மோசமான எதிரிகளால் ஏற்படுத்தப்படும் அவதூறுகளையும் சிரமங்களையும் காட்டும்.

714. சில எதிரிகள் நம் வாழ்க்கை முயற்சிகளைச் சீர்குலைக்க முயல்வதையும் இது காட்டும்.

715. நாயுடன் விளையாடுவதுபோலக் காண்பது முன்னர் அளவின்றிச் செலவிட்டு மகிழ்ந்ததை நினைத்து வருந்த வேண்டியது வரும் என உணர்த்தும்.

716. நாயுடன் சென்று வேட்டையாடுவதாகக் கனவு காண்பது வாழ்வில் நம்பிக்கை வலுப்படப் போவதன் அறி குறியாகும். அதற்கான சந்தர்ப்பம் வாய்க்கும்.

717. ஓடுகிற நாயைக் காண்பது நீதிமன்ற வழக்குகளில் சிக்கக்கூடும் என்று தெரிவிக்கும்.

718. நாயைக் காணாமற் போனதாகக் காண்பது வரப்போகும் முயற்சியில் வெற்றிக்குச் சிரமப்படப் போவதைக் காட்டும்.

719. சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடுவதாகக் காண்பது ஒரு நண்பனைவிட்டுப் பிரியப் போவதன் அறிகுறியாகும்.

720. இரண்டு நாய்கள் சண்டையிடுவதாகக் காண்பது பொய்யான நண்பர்களைக் குறித்து எச்சரிப்பதாகும்.

721. உயரமான இடத்தில் ஒரு கழுகைக் காண்பது உங்கள் கடுமையான முயற்சியில் வெற்றி காண்பதைத் தெரிவிப்பதாகும். போர்வீரர்களுக்குப் பெரிய வெற்றியின் அறிகுறியாகும்.

722. கழுகு தலையில் தாக்குவதுபோலக் காண்பது, சாவு நெருங்குவதைக் குறிப்பிடும்.

723. கழுகு பறப்பதாகக் காண்பது அபிலாஷைகளைக் குறிக்கும்.

724. ஒரு கழுகைக் கொன்றதாகக் காண்பது எண்ணங்கள் நிறைவேறுவதைத் தெரிவிக்கும்.

725. ஒன்றைத் தின்பதுபோலக் காண்பது கடுமையான துக்கத்துக்கு ஆளாக நேரும் என்று காட்டும்.

726. செத்துக் கிடக்கும் கழுகைக் காண்பது பெரிய இழப்பு வருவதை முன்னறிவிப்பதாகும்.

727. மண்புழுவைக் காண்பது இரகசிய எதிரிகளின் சதிவேலைகள் நம்மையும் நம் தொழிலையும் அழிப்பதற்கு முற்படுவதைக் காட்டும்.

728. கனவிலே யானையைக் கண்டால் செல்வம் பெருகும்.

729. யானைமேல் பவனி வருவதாகக் கண்டால், பெரும் சொத்துக்களுக்கு அதிபதியாக ஆவான்.

730. யானைக்கு ஏதாவது தின்னக் கொடுப்பது போலக் கனவு கண்டால், யாரோ ஒரு பெரிய மனிதரின் உதவியை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்று அறிய வேண்டும்.

731. முட்டைகளைக் கனவிற்கண்டால், உங்களுடைய சகல வித முயற்சிகளும் வெற்றிபெற்றுப் பயன் தரும்.

732. பெரிய மீனைக் காண்பதாகவோ பிடிப்பதாகவோ கனவிற் கண்டால் எதிர்பாராத ஒரு பெரிய இலாபத்தை எதிர் பார்க்கலாம்.

733. வெவ்வேறு நிறமுள்ள மீன்களாகத் தோன்றினால் உடல் நலக் குறையானவர்க்கு விஷப் பாதிப்பு ஏற்படலாம். உடல் நலமுள்ளவர்களுக்கு துக்கம், காயம்படல், வருத்தம் போன்றவை ஏற்படக் கூடும்.

734. ஈயைக் கண்டால் உங்கள் அபிமானத் திட்டம் தோல்வியடையும். ஒரு ஈயை அடித்துக் கொல்வது போலக் கனவு கண்டால் எதிரிகளை வெற்றி காண்பீர்கள்.

735. நரியைக் கண்டால் ஒரு சதிக்கு இரையாகப் போவதைப் காட்டும். அதைக் கொன்றதாகக் கண்டால் பகையை வெற்றி காணலாம். அதை வளர்ப்பதாகக் கண்டால் நம்பிக்கைத் துரோகத்துக்கோ அல்லது மோசமான ஒரு முயற்சிக்கோ ஆட்பட்டு கேட்டை அடைய வேண்டும்.

736. வெட்டுக்கிளியைக் காண்பது விளைச்சலின் வளமை குறைவாகிப் போவதன் அறிகுறியாகும்.

737. பெட்டைக் கோழிகளின் குரலைக் கேட்பதாகவோ, அவற்றைச் சமைத்துத் தின்பதாகவோ கனவு காண்பது சொத்துப் பெருக்கத்தையும் தொழிற்பெருக்கத்தையும் காட்டுவதாகும்.

738. குஞ்சுகளோடு திரியும் பெட்டைக் கோழியைக் காண்பது இழப்பையும் பழுதையும் அறிவிக்கும்.

739. முட்டையிடும் கோழியைக் கனவிற் கண்டால் செல்வ வரவு மிகுதியாகும்.

740. குதிரையைக் காண்பதும், குதிரை மேல் போவதாகப் பார்ப்பதும் மகிழ்ச்சி தரும் கனவாகும்.

741. களைத்த குதிரைமேல் சவாரி செய்வது தீவிரமான காதல் மயக்கத்தைத் தெரிவிக்கும்.

742. குதிரையைக் கொன்றதாகக் காண்பது பிரிவையும் துக்கத்தையும் காட்டும்.

743. கறுப்புக் குதிரையானால் அரைவாசி வெற்றியை அடையலாம்.

744. வெள்ளைக்குதிரையானால் எதிர்பாராத பெரிய அதிர்ஷ்டம் வாய்க்கும்.

745. காயம்பட்ட குதிரையானால் முயற்சியில் தோல்வி ஏற்படும்.

746. குதிரை லாடம் அதிர்ஷ்டத்தைப் பெருக்கும்.

747. செத்த குதிரையைக் காண்பது துரதிர்ஷ்டமாகும்.

748. நரியை வேட்டையாடுவதாகக் கண்டால் போலி நண்பர்களால் தொல்லை ஏற்படும்.

749. முயலை வேட்டையாடுவதாகப் பார்த்தால் துரதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும்.

750. மானை உயிரோடு கைப்பற்றினால் நன்மையும் அதிர்ஷ்டமும் தொழில் வெற்றியும் விரைவில் ஏற்படும்.

751. பருந்தைக் காண்பது ஆபத்தை அறிவிக்கும்.

752. ஆட்டுக் குட்டிகள் கனவில் தோன்றுவது அமைதியான சிறந்த வாழ்வை அறிவிக்கும். அவற்றை வைத்திருப்பது இலாபத்தைத் தரும். ஒன்றைத் தூக்கிப்போவது வெற்றியைத் தரும். ஒன்றை வாங்குவது பெரிய அதிசய நன்மையைத் தரும். ஒன்றைக் கொல்வது மறைமுகமான துக்கத்தைத் தரும். ஒன்றை மட்டும் பார்ப்பது நீதிமன்ற வழக்கை அறிவிக்கும். ஒன்றைத் தின்பது கண்ணீரைவிடச் செய்யும்.

753. சிங்கத்தைக் கனவில் கண்டால் ஒரு பெரிய மனிதரால் துன்பத்தை அடையக் கூடும்.

754. சுண்டெலி கனவில் தென்பட்டால் வியாபார காரியங் களில் சிக்கல்கள் உருவாகும். இவை அபாயமான நண்பர்களின் செயல்களால் ஏற்படக்கூடும்.

755. குரங்குகள் கனவில் தோன்றுவது இரகசியமான கொடூர குணமுள்ள பகைகள் உங்களுக்கு எதிராக இருப்பதை அறிவிப்பதாகும்.

756. பாலைப் பருகுவது போலக் கனவு காண்பது அதிர்ஷ்ட மான கனவு ஆகும். வசதிப் பெருக்கங்கள் வந்து சேரும். மடியில் பால் நிரம்பியிருப்பதாகக் காண்பதும் இலாபப் பெருக்கத்தை அறிவிப்பதாகும்.

757. கோவேறு கழுதையைக் கனவில் கண்டால் அறி வீனமும் குரோத குணமும் தோன்றிப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

758. ஆந்தை கூகை போன்றவற்றையும், பாழடைந்த இடங்களையும் கனவில் காண்பது கெடுதலைத் தருவதாகும். துயரங்கள் சிறைவாசம் போன்றவை ஏற்படக்கூடும்.

759. மயிலைக் கனவில் கண்டால் அழகு மிகுந்த மனைவி வாய்ப்பாள். முயற்சிகள் சிறப்பாக வெற்றிகளைத் தரும். பெரும் செல்வந்தராக உயரலாம். நாட்டில் மதிப்பும் உயரும்.

760. ஒரு பெண் கனவில் மயிலைக் கண்டால் அழகும் நளினமும் அமைந்த கணவனைப் பெறுவாள். ஆனால் அவன் பூர்வீகம் தெரியாதவனாகவோ மதுப்பழக்கம் உள்ளவனாகவோ இருக்கலாம்.

761. பன்றியைக் கனவில் காண்பது உறுதியான லாபவரவைக் காட்டுவதாகும். செத்துக் கிடக்கும் பன்றியைக் கனவில் கண்டால் நல்ல செய்தியைத் தெரிவிக்கும் கடிதத்தை விரைவில் பெறக்கூடும்.

762. குழிமுயலைக் கனவில் கண்டால் நிறத்துக்குத் தகுந்த பலன் கிடைக்கும். கருப்பு முயலானால் தொல்லைகள் வரும். வெள்ளையானால் நட்பு செழிக்கும். முயல் பொந்துகளைக் கனவு கண்டால் மிகுந்த செலவுள்ள இன்பங்களில் ஈடுபட நேரிடும்.

763. எலிகள் மறைவான எதிரிகளையும், கூடியிருந்தே குழி பறிப்பவர்களையும் பற்றிக் கவனமாக இருக்கும்படி எச்சரிப்பதாகும்.

764. காகத்தைக் கனவில் காண்பது ஒரு குறும்புச் செயலைச் சந்திக்க நேர்வதை அறிவிக்கும். காதலர்களிடையே பொய்யான தகவலை எவராவது சொல்லிக் குறும்பை

விளைவிக்கலாம். தம்பதிகளிடையே ஒருவர் போக்கு திசை திருப்புவதாகக் கூறிச் சண்டையை ஏற்படுத்த முயலலாம்.

765. நச்சுப் பிராணிகளைக் காண்பது வேதனையோடு கூடிய துரதிர்ஷ்டங்களின் வரவை அறிவிக்கும்.

766. நாகப் பாம்பு வளைந்து வளைந்து போகக் காண்பது அபாய வரவின் அறிகுறியாகும், சிறைவாசம் போன்றவை ஏற்படக் கூடுமென்று எச்சரிப்பதும் ஆகும்.

767. நோய்ப் பீடிப்பும் பகைமை வெறுப்புக்களின் பீடிப்பும் அதிகமாவதையும் அறிவிப்பதாகும்.

768. பல நச்சுப் பாம்புகள் கனவில் வந்தால் சொந்த மனைவி யாலேயே ஏமாற்றத்துக்கு உள்ளாகலாம். அல்லது நெருங்கிய சொந்தக்காரர்களினாலே துன்புற நேரிடலாம்.

769. கனவில் பாம்பை அருகே பார்த்தால் ஒரு இரட்டை நாக்குப் பேர்வழியினால் தொல்லை வருவதைக் காட்டும்.

770. சிலந்திப் பூச்சியை இரவில் கனவில் கண்டால் பணவரவும் முயற்சிகளில் வெற்றியும் உண்டாகும்.

771. காலைப்போதில் சிலந்திப் பூச்சியைக் கனவில் கண்டால் வழக்கு மன்றத்திற்குப் போக நேரிடும்.

772. சிலந்திப் பூச்சியை நசுக்கியதாகக் கனவு கண்டால் உற்சாகமான ஒரு நிகழ்ச்சியை எதிர்பார்க்கலாம்.

773. அணில் கனவிற் காணப்பட்டால் எதிரிகள் தூற்றுவதற்கு முயல்கின்றார்கள் என்று காட்டுவதாகும்.

774. காதலிப்பவர்களுக்குக் கனவில் அணில் தோன்றினால், துணையாக வருபவர் கெட்ட குணம் உள்ளவர் என்று எச்சரிப்பதாகும்.

775. கலைமானைக் கனவிற் காண்பது, இலாப மிகுதியைக் காட்டும்.

776. கலைமானைக் கொல்வதாகக் காண்பது அக்கம் பக்கத்தாரின் பழிப்பேச்சுக்கு ஆளாக நேரிடுவதை அறிவிக்கும்.

777. கலைமானைத் துரத்திச் செல்வதாகக் கனவில் காண்பது தொழில் அல்லது வியாபாரத்தில் வரப்போகும் நஷ்டத்தை அறிவிக்கும்.

778. தூய அன்னப் பறவைகளைக் கனவில் காண்பது குடும்பவாழ்வில் குதூகலத்தையும், மக்கட் செல்வத்தை அடைவதையும் குறிப்பதாகும்.

779. ஆமைகளைக் கனவில் காண்பது முயற்சிகளில் நிலவும் மந்தப் போக்கை அறிவிக்கும்.

780. ஆமைக் கறியைத் தின்பதுபோலக் காண்பது வாழ்க்கையில் எல்லாவற்றையும் சரிக்கட்டிப்போக நேர்வதை உணர்த்தும்.

781. வண்டுகளைக் கனவில் காண்பது மனைவி அல்லது கணவனின் கெட்ட தன்மையை அறிவிக்கும்.

782. காட்டுக் குதிரைகளைக் கனவில் கண்டால் முரட்டுத் தனமும் போக்கிரித் தனமும் ஏற்படக் கூடும் என்று எச்சரிப்ப தாகும்.

783. ஓநாயைக் கண்டால் குரூரமும் வஞ்சகமும் ஏற்படுவதை அறிவித்து எச்சரிப்பதாகும்.

784. வரிக்குதிரையைக் கனவில் காண்பது ஒரு நிலையற்ற அளவான வாழ்வைக் குறிக்கும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கும்.

785. காட்டுப் பன்றியைக் கனவில் காண்பது ஒரு வலுவான எதிரியைச்சமாளிக்கவேண்டும்என்பதைத்தெரிவிப்பதாகும்.

786. கீரிப்பிள்ளையைக் கனவில் கண்டால் எண்ணிய காரியத்தை ஊக்கத்தோடு முடித்து வெற்றி காணலாம்.

787. எருமைக் கடாவைக் கனவில் காண்பது ஆபத்துக் களைக் குறிப்பதாகும்.

788. சிட்டுக் குருவிகளைக் கனவிற் காண்பது குழந்தைகளின் பெருக்கத்தைக் காட்டும்.

789. தேளைக் கனவில் காண்பது எதிரிகளின் தொல்லை களைக் காட்டி எச்சரிக்கும்.

790. வெட்டுக்கிளிகள், கம்பளிப்பூச்சிகள் போன்றவை களைக் காண்பது விவசாயிகளுக்குப் பயிர் அழிவைக் குறிக்கும். மற்றவர்களுக்கு வருமானக் கேட்டைத் தெரிவிக்கும்.

791. மீன்களைக் கனவிற் காண்பது மனச் சலனத்தையோ குழப்பத்தையோ காட்டும்.

792. மீன்பிடித்து வாழ்பவர்களுக்கு முன்னேற்றத்தைக் காட்டும்.

793. நண்டுகளைக் காண்பது அச்சப்படத்தக்க சில செய்திகளின் வரவையும், பிடிவாதத்தால் ஏற்படும் சிக்கல்களையும் தெரிவிக்கும்.

794. மாடுகள் பயிரை மேய்வதாகக் காண்பது செல்வத்தின் சிதைவை அறிவிக்கும். அது ஒருவரின் துரோகத்தால் வருவதையும் உணர்த்தும்.

795. பாம்பை அடித்துக் கொல்வதாகக் கனவு காண்பது எதிரிகளை வெற்றி கொள்வதைக் காட்டும்.

796. வலைவைத்துப் பறவைகளைப் பிடிப்பதாகக் கனவு காண்பது தந்திரத்தால் பலரையும் வசப்படுத்தி வெற்றி காண்பதைத் தெரிவிக்கும்.

10. கனவில் காணும் உடலின் உறுப்புக்கள்

797. பாதத்தைக் கனவிலே தோன்றக் காண்பது, நடத்தி வருகின்ற பேரத்தில் வெற்றி பெறப் போவதைத் தெரிவிப்பதாகும்.

798. இரத்தத்தைக் கனவிலே கண்டால், இரத்தத் தொடர்புடைய உறவினர் ஒருவரிடமிருந்து சொத்துக்களோ செல்வமோ கிடைக்கப் போவதைக் காட்டுவதாகும்.

799. கழுத்திலேசங்கிலியோ அல்லதுவேறு ஆபரணமோ அணிந்து கொள்வதைப் போலக் கனவில் கண்டால், விரைவில் பொன் பொருள்களை அடைகின்ற யோகம் ஏற்படும்.

800. கனவிலே காதைப் பார்ப்பதாகத் தோன்றினால், மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு தகவலை விரைவில் எதிர்பார்க்கலாம்.

801. அழகான கண்களைக் கனவிலே கண்டால், அதிர்ஷ்டம் பொங்கப் போகின்றது என்று பொருள்.

802. ஏதாவது குறைபாடுள்ள கண்களைக் கனவிற் கண்டால் ஏதாவது சில தொல்லைகளைச் சந்திக்க நேரலாம்.

803. தலைமயிரைக் கனவில் காண்பது செல்வப் பெருக்கமும் ஆடை ஆபரணங்களும் வந்து சேரப் போவதை அறிவிக்கும்.

804. தலைமயிர் முகத்தில் விழுவதுபோலக் காண்பது, வரப்போகும் ஒரு வேதனையான நிகழ்ச்சியைத் தெரிவிக்கும்.

805. தலைமுடியை வெட்டிக் கொள்வது போலக் காண்பது, முயற்சிகளில் ஏற்படப்போகும் தொல்லைகளைக் குறிக்கும்.

806. தலை வழுக்கையானது போலக் கண்டால், ஒரு ஆபத்தைச் சந்திக்க நேரும் என்று கருத வேண்டும்.

807. ஒரு தொப்பியைக் காண்பது மேன்மையடையப் போவதைக் காட்டும்.

808. தொப்பி சிதைந்து விட்டதாகவோ, தலையிலிருந்து விழுந்துவிட்டதாகவோ காண்பது வரப்போகும் அவமானங் களையும் நஷ்டங்களையும் அறிவிக்கும்.

809. தலையைக் கனவிலே காண்பது, உடல்நலமும் வாழ்க்கை வசதிகளும் மிகுதியாகப் போவதைக் காட்டும்.

810. நகைகளைக் கனவில் கண்டால் தொழிலில் இழப்பையும் தோல்வியையும் எதிர்பார்க்கவேண்டும்.

811. உடலில் வீக்கமோ கட்டியோ காணப்பட்டால், சில தொல்லைகள் வந்து விலகக் கூடும்.

812. பற்கள் விழுவதாகக் கனவு கண்டால் உறவினர்களுக்கு ஆபத்து ஏதாவது ஏற்படும். முன் பற்களானால் குழந்தைகள் சகோதரர்கள் சகோதரிகள் போன்றோருக்கு ஆபத்து ஏற்படலாம்.

813. கைகள் மெலிவாகக் கனவில் தோன்றினால் உடல் நலம் பாதிக்கப்படக் கூடும்.

814. கைகள் வலிமையாகக் காணப்பெற்றால் எதிர்பாராத வெற்றிகள் வாய்க்கும்.

815. தன் முதுகைக் கனவில் காண்பது ஏதாவது துரதிர்ஷ்டம் நேரப் போவதைக் குறிக்கும்.

816. முதுகுடன் பின்பக்கம் அனைத்தையும் கனவிற் காண்பது முதுமை விரைவில் ஏற்படுவதைக் காட்டும்.

817. முதுகு காயம்பட்டதாகவோ, சிதைவுற்றதாகவோ, வீங்கியதாகவோ கனவில் காண்பது, பகைவர்களால் ஏற்படும் பெரிய தொல்லைகளைக் காட்டும். அவற்றைச் சகிக்க முடியாமல் வருந்துவதையும் காட்டும்.

818. முதுகு எலும்பை மட்டும் கனவிற் காண்பது உடல் நலத்தையும், மகிழ்ச்சியையும், குடும்பத்தில் ஆனந்தத்தையும் குறிப்பதாகும்.

819. எளியவர்கள் இரத்த வாந்தி எடுப்பதாகக் கனவு கண்டால், விரைவில் அவர்களுக்கு மிகுதியான பணம் கிடைக்கக்கூடும்.

820. இரத்தமாக வாந்தி எடுக்கும் கனவைக் கண்டவர் களுக்கு குழந்தை இல்லையானால், விரைவில் குழந்தை பிறக்கும்.

821. தூரமான வேற்றுநாட்டில் இருக்கும் உறவினர்களைக் கொண்டவர்கள் இப்படிக் கனவு கண்டால், அவர்கள் திரும்பி வந்து சேரக் காணலாம்.

822. ஒளிந்திருக்க நினைப்பவர்கள் இரத்தத்தை எடுத்துச் செல்வதாகக் கனவு கண்டால், அகப்பட்டுக் கொண்டு வேதனைப்படுவார்கள்.

823. அசுத்தமான இரத்தமாக வாந்தி எடுத்ததாகக் காண்பது அனைவருக்கும் சுகவீனத்தைத் தரக்கூடியதாகும்.

824. துப்பும்போது சிறிது இரத்தம் வெளிவருவதாகக் காண்பவர்கள் எதிர்ப்புக்களைச் சந்திப்பார்கள்.

825. முழங்கால்கள் வலுவாகவும் பருத்தும் இருப்பதாகக் காண்பது உங்கள் வலிமையையும், உங்கள் முயற்சிகளில் சிறப்பாகச் செயலாற்றி வெற்றி காண்பதையும் காட்டுவதாகும்.

826. மெலிந்தும் சோர்ந்தும் காணப்பட்டால் பலன்கள் எதிரானவையாக அமைந்துவிடும்.

827. முழங்கால் வலுவால் வேகமாக ஓடுவது போலக் காண்பது எல்லாச் செயல்களிலும் மகிழ்ச்சியான முடிவைக் காட்டுவதாகும்.

828. இதே கனவு ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டால் அவள் கணவனுக்கு இசைவாக நடந்து தன் குடும்பவாழ்வை இன்பமாக்கிக் கொள்வாள்.

829. கால்கள் ஒடிந்ததாகவோ, காயமுற்றதாகவோ, கீறல் உற்றதாகவோ கனவு கண்டால், நிதானமிழந்த பொருந்தாத வாழ்க்கைத் துணைவனைப் பெற்றுத் துன்பத்தில் சிக்கி வாடுவதைக் குறிக்கும். ஒரு ஆண் இப்படிக் கனவு கண்டால்

மென்மையான பண்புள்ள மனைவியைப் பெற்று மகிழலாம். ஆனால் அவளால் குடும்பப் பொறுப்புகளைச் சரியாக நிர்வகிக்க முடியாமற் போகும்.

830. அம்மை சிற்றம்மை போன்றவை தனக்கு வந்ததாகக் கனவு கண்டால், மிகுந்த சிரமத்தோடு செல்வப் பெருக்கத்தைப் பெறுவார்கள்.

831. பருவை உடலில் தோன்றக் காண்பது வீண் பிரயாசை களில் நேரத்தையும் பணத்தையும் உழைப்பையும் வீணாக்க நேர்வதை அறிவிப்பதாகும்.

832. வாய் உடலினுள் உள்ளவைகட்கு எல்லாம் நுழை வாயிலாகும். எனவே ஒருவன் தன் வாயானது அளவைவிட விரிந்திருப்பதாகக் கனவு கண்டால், அவன் குடும்பம் செல்வத்தில் மிதக்கும். அவனும் முன்னைக் காட்டிலும் வசதியில் மிதப்பான்.

833. கனவில் வாயிலிருந்து துர்நாற்றம் வெளிவருவதாகக் கண்டால், அவனை எல்லாம் பழிசொல்லிக் குறை பேசுவார்கள்; அவன் வேலையாட்களும் அவனை மிகவும் வெறுப்பார்கள்.

834. கைநகங்கள் மிக நீண்டதாகக் கனவில் தோன்றினால் செல்வம் வந்து சேரும். செய்தொழில்களில் இலாபம் அதிகமாகும். காதலில் வெற்றி உண்டாகும். நகங்கள் குட்டையாகத் தோன்றினால் இவை குறைவாக ஏற்படும்.

835. நகங்கள் விழுவதாகக் கனவில் தோன்றினால் நஷ்டங் கள் ஏற்படும். அவமானம் உண்டாகும். உறவினர்களுடனும் நண்பர்களுடனும் விரோதம் வளரும்.

836. நீண்டதும் அழகானதுமான மூக்கைக் கனவிற் காண்பது நன்மையானதாகும். உணர்வுகளில் நிதானமும் உறுதியும் ஏற்படும். விவகாரங்களில் தெளிவும் இருக்கும். மிகப் பெரிய மனிதர்களின் உறவும் நேசமும் கிடைக்கும்.

837. மூக்கே இல்லாததைப்போலக் கனவிற் காண்பது எதிரான தீய பலன்களைத் தருவதாகும். நோயாளியானால் இறந்து விடுவான்.

838. சாதாரணமானதைவிடத் தன் மூக்கானது பெரிதாக இருக்கக் காண்பவன் அதிகாரத்திலும் செல்வத்திலும் உயர்நிலை காண்பான்.

839. அருவருப்பானவகையில் மூக்குத் தடித்தும் நீண்டும் தொங்கக் காண்பவன் நிளறயச் செல்வ வசதியை அடைவான். ஆனால், இவனுக்கு இவனை நேசிக்கும் மனைவி கிடைக்கமாட்டாள். உலக மக்களின் அன்பையும் இவனாற் பெறமுடியாது.

840. மூக்கு அடைபட்டதாகக் கனவிற் காண்பவன் அவன் நண்பர்களுள் ஒருவனால் ஆபத்துக்கு உள்ளாகக் கூடும்.

841. உடலிற் காயம்பட்டதாகக் கனவிற் கண்டால் வியாபார விருத்தி ஏற்படும், காதல் நிறைவேறும்.

11. கனவும் காட்சிகளும்

842. அழுக்கு சுகவீனத்தையும் அவமதிப்பையும் குறிப்பதாகும். அதனுள் வீழ்வது எவராலோ வரும் தொல்லையையும் யாரோ செய்யும் துரோகச் செயலையும் அறிவிப்பதாகும்.

843. பெரிய பள்ளங்களில் அல்லது அகழிகளில் விழுந்தது போலக் கனவிற் காண்பது ஆபத்து வரப்போவதைத் தெரிவிப்பதாகும். பொருள்கள் தீக்கிரையாவதையும் எதிர்பார்க்க வேண்டும்.

844. ஒரு சிறு பலகையைப் பற்றி மேலேற முயல்வது போலக் கனவிற் காண்பது வக்கீல்களால் ஏமாற்றத்துக்கு உள்ளாக நேர்வதைத் தெரிவிக்கும்.

845. ஓவியங்களைக் கனவிற் கண்டால், கலை முயற்சிகளில் உங்களுக்கு ஈடுபாடு உண்டாகலாம்.

846. சூரிய கிரகணத்தைக் கனவிற் கண்டால் தகப்பனாரை இழக்க நேரிடும்.

847. சந்திர கிரகணத்தைக் கண்டால் தாயாரை இழக்க நேரிடும்.

848. தாய் தந்தையர் இல்லாவிட்டால் மிகவும் நெருக்கமான உறவினருள் ஆண் (சூரிய கிரஹணம்), அல்லது பெண்ணை(சந்திர கிரஹனம்) இழக்க நேரிடும்.

849. போராடுவதாகக் கண்டால் எதிரிகள் ஏற்படுவதைக் காட்டும். போராட்டத்தில் காயம்பட்டதாகக் கண்டால் எதிரிகளால் இழப்பை அடையக்கூடும்; அல்லது மதிப்பிழந்து அவமானப்படவும் நேரலாம்.

850. அன்பானவர்கள் இடையே வெறுப்பும் பிரிவும் இந்தக் கனவால் ஏற்படும்.

851. மிகக் களிப்பாக இருக்கக் கண்டால் வருத்தமும் குழப்பமும் ஏற்படக்கூடும்.

852. பகைமை பொங்கக் காண்பது கெடுதலான கனவாகும்.

853. பனிக்கட்டியைக்காண்பது விவசாயிகளுக்குநல்லவிளைச்சல் கிடைப்பதை அறிவிப்பதாகும். வியாபாரிகளுக்கும் பிறருக்கும் பயணங்களிலோ ஒப்பந்தங்களிலோ சிக்கல்களைத் தெரிவிப்பதாகும்.

854. இரும்பைக் காண்பது சாவை அறிவிக்கும்.

855. பட்டம்பறப்பதாகக்கனவுகாண்பது கெடுதலான பலன்களை அறிவிப்பதாகும்.

856. ஏணியில் ஏறிப்போவதாகக் காண்பது நன்மை தரும் கனவாகும். ஏற்றமும் மகிழ்ச்சியும் வருவதை இது உணர்த்தும்.

857. ஈயத்தைக் கனவிற் கண்டால் நோயைக் காட்டும். ஈயக்குண்டால் அடிபட்டதாகக் காண்பது காதலில் வெற்றியை அறிவிக்கும்.

858. தபாலில் கடிதங்கள் வருவதாகக் கனவு காண்பது நல்ல கனவாகும். விரைவில் நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம். மிக அன்பானவர்களின் தொடர்பும் இதனால் வளப்படலாம்.

859. பேரொளியைக் கனவிற் காண்பது அருமையான ஒரு துணைவி அல்லது துணைவன் அமைவதைக் காட்டும். அந்த ஒளி தோன்றி மறைந்ததாகத் தோன்றினால், இந்த அன்பான நெருக்கம் மாறுபட்டுப் போகலாம்.

860. பயங்கரமான கனவைக் காண்பது எப்போதும் கெடுதல்தான் தரக்கூடும். அறிவீனர்களால் அதிகாரம் செலுத் தப்படும் வேதனையை இவர்கள் எதிர்பார்க்க வேண்டும். குடும்ப

வாழ்வில் கணவன் அல்லது மனைவியால் வேதனையும் தோன்றலாம்.

861. தூக்கத்தில் நடப்பதாகக் கனவில் காண்பது வரப் போகும் தொல்லைகளையும் துயரங்களையும் முன்னறி விப்பதாகும்.

862. பணப்பை தொலைந்ததாகக் கனவு கண்டாலும் பையிலுள்ள குறிப்புப் புத்தகம் தவறியதாகக் கண்டாலும் அது சுபமான கனவு ஆகும். புதிதாகவும் பணம் நிரம்பியதாகவும் ஒரு பையைப் பெறுவார்கள்.

863. மீண்டும் அவை கிடைத்தாற்போலக் கண்டால் பழைய நிலைமையே தொடரும் என்று கொள்ளவேண்டும்.

864. பணம் நிரம்பிய ஒரு பையைக் கண்டெடுப்பதாகக் கனவு காண்பது நல்ல அதிர்ஷ்டத்தைத் தருவதாகும்.

865. சில நேரங்களில் பணப்பை தொலைந்து போவது நெருக்கமான ஒரு நண்பனை இழக்க நேர்வதையும் காட்டுவதாகும்.

866. முகமயிரை மழிப்பதாகக் கனவுகாண்பது அன்பு விவகாரங்களில் துரோகத்துக்கு உள்ளாவதைக் காட்டும்.

867. கப்பல் கவிழ்வதாகக் காண்பது எப்போதும் வரப் போகும் இழப்பையும் அழிவையும் தெரிவிப்பதுதான். சிறையிலிருப்பவர்களுக்கும் வலிந்து அடக்கி வைத்திருக்கப் பட்டவர்களுக்கும் சுதந்திரமும் விடுதலையும் கிடைப்பதை அறிவிக்கும்.

868. புதிய மிதியடிகள் வாழ்வில் வெற்றியைக் காட்டும்.

869. பழைய மிதியடிகள் தோல்விகளை அறிவிக்கும்.

870. பட்டைக் கனவிற் காண்பது உற்சாகம், மதிப்பு, வலிமை போன்றவை ஏற்படுவதை அறிவிக்கும்.

871. வெள்ளிக் கரண்டிகள் அல்லது நாணயங்களைப் பரிசாக எவராவது தருவதாகக் கனவிற்கண்டால் விரைவில் திருமண நிகழ்ச்சி ஏற்படும்.

872. தானே முயன்று வாங்குவதாகக் கண்டால் பண முடைக்கு உட்பட நேரிடும்.

12. பலவகைக் கனவுகளின் பலன்கள்

873. காவியுடை உடுத்தியிருப்பவர்களைக் கனவில் காண்பது வாழ்வில் விரக்தியையும் வறுமையையும் தரக்கூடும்.

874. சிவந்த கண்களோடுள்ள ஒருவரைக் கனவில் பார்த்தால் ஒருவருடைய கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

875. தானே காவியுடுத்திருப்பதாகக் கண்டால் மனைவி பிரிந்து போய்விட நேரிடும்.

876. தன் கண்கள் சிவப்பேறியது போலக் கண்டால், ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் உள்ளாக நேரலாம்.

877. ஆடையில்லாத ஒருவரைக் கனவில் காண்பது கெடுதலான பலன்களையே தரும்.

878. உடையிலே நெருப்புப் பற்றுவது போலக் கனவில் காண்பது, சுகக்கேடு வரப் போவதைத் தெரிவிப்பதாகும்.

879. ஊரே பற்றி எரிவதாகக் கனவில் காண்பது கடுமையான வறட்சியையும் பஞ்சத்தையும் அறிவிப்பதாகும்.

880. ஆட்சியின் மேல்மட்டத்திலிருப்பவர்களோடு பேசிப் பழகுவதாகக் கனவிற் காண்பது சிறப்பான வாழ்வையும் மேன்மையையும் காட்டுவதாகும்.

881. கடன் தந்தவர்களைக் கனவில் காண்பது அவர்கள் கடனைத் திருப்பிக் கேட்டு வற்புறுத்தப் போவதை அறிவிக்கும்.

882. கடன் தரவேண்டியவர்களைக் கனவில் காண்பது கடன் வசூலாவதைக் காட்டும்.

883. தான் ஒரு இயந்திரத்தை இயக்குவதாகக் கனவில் காண்பது தொழில் முயற்சிகள் மூலம் மேலான வாழ்க்கையை அடையப் போவதைக் காட்டுவதாகும்.

884. பிறர் இயக்குவதாகக் காண்பது, தக்க துணையானது கிடைத்துப் பலன்கள் பெறப்போவதைக் காட்டும்.

885. இயந்திரங்கள் பழுதடைந்து ஓடாமற் போவதைக் காண்பது தொழில் முடக்கத்தையும், நட்டத்தையும் அறிவிக்கும்.

886. பந்தியில் பலரோடு அமர்ந்து விருந்துண்பதாகக் கனவு கண்டால், செல்வ செல்வாக்குகள் உயரும்; பலருடைய ஆதரவு களும் மிகுதியாகக் கிடைக்கும்.

887. தேனை அருந்துவது போலக் காண்பது வரப் போகும் நன்மைகளை அறிவிக்கும்.

888. எடுத்த முட்டையோ பழமோ அழுகிப் போயிருப் பதாகக் கனவிற் கண்டால் செய்துவரும் முயற்சிகளில் தோல்வியும் நட்டமும் ஏற்படும். வாழ்க்கை வசதிகளும் குறைந்து போகும். நோய் நொடிகளுக்கும் உள்ளாக நேரலாம்.

889. கனவில் உடலுக்கு ஆகாத காய்கறிகளைச் சாப்பிடுவ தாகக் காண்பது வரப்போகும் நோயின் அறிகுறியாகும். அந்தக் காய்களின் குணத்தோடு தொடர்புடைய நோய்கள் வரக்கூடும்.

890. கீரை வகைகளை உண்பதாகக் காண்பது உடல் நலம் நன்றாக விளங்கும் என்பதைக் காட்டும்.

891. விருந்தாளிகளையும் அதிதிகளையும் உபசரிப்பதாகக் கனவு காண்பது வரப்போகும் செல்வச் செழுமையை அறிவிப்ப தாகும்.

892. அடுப்பு அணைந்து கிடப்பதாகக் காண்பது வரப் போகும் உணவுப் பஞ்சத்தின் முன்னறிவிப்பாகும்.

893. பொருள்களைப் பூச்சிகள் அரிப்பதாகக் கனவிற் காண்பது பொருள் நஷ்டத்தையும் நோயையும் தருவதாகும்.

894. ஆலமரத்தைக் கனவிற் காண்பது, தான் உயர்ந்த நிலையை அடைந்து, பலருக்கும் உதவிப் புகழ் பெறப் போகும் சிறப்பைக் காட்டும்.

895. ஆருடம் கேட்பதாகவும் சோதிடபலன் கேட்பதாகவும் கனவிற் கண்டால், அப்போது கேட்கும் பலன்கள் எல்லாம் பலிக்கும்.

896. மற்றவர்கள் கட்டியணைப்பது போலக் கனவு கண்டால், அப்படி அணைப்பவர்களைப் பொறுத்து நல்ல பலன்களோ கெட்ட பலன்களோ ஏற்படும்.

897. பகைவர்கள் தழுவியது போலக் கனவு கண்டால் பகைதீர்ந்து சமாதானமும் உறவும் ஏற்படும்.

898. அடர்ந்த சோலையையோ காட்டுப் பகுதியையோ கனவிற் காண்பது மிகுதியான செழுமை கிடைப்பதையும், வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுவதையும் காட்டும்.

899. பெரிய செல்வவானைக் கணவிற் கண்டு பழகுவதாகக் காண்பது தானும் செல்வவரவை மிகுதியாகப் பெற்று உயர்ச்சி காணப்போவதை அறிவிப்பதாகும்.

900. வறுமையால் வாடியவர்களைக் கனவிற் காண்பது வரப்போகும் பணமுடையையும் பற்றாக் குறையையும் உணர்த்தும் எச்சரிக்கையாகும்.

901. கூட்டங்களைக் கணவிற் காண்பது வியாபாரப் பெருக்கத்தையும், செல்வாக்கு உயர்வதையும் காட்டுவதாகும்.

902. சந்தனத்தையோ சந்தன மரத்தையோ காண்பதும், சந்தனம் பூசிக்கொள்வதாகக் காண்பதும் மேன்மையையும் வளமையையும் மகிழ்ச்சியையும் தெரிவிப்பதாகும்.

903. சண்டைக் களம் அல்லது கலவரம் நடக்கும் இடத்தைக் காண்பது வீண் விவகாரங்கள் வரப் போவதைக் காட்டும்.

904. கட்டுச்சோற்றுடன் செல்வதாகக் கனவு காண்பது வெளியூர்ப் பயணத்தையும், அதன்மூலம் பெருகும் நன்மையையும் காட்டும்.

905. முரசு பேரிகை போன்றவைகளைக் கனவிற் காண்பது வழக்குகளில் வெற்றியையும், போராட்டங்களில் வெற்றியையும் காட்டும.

906. கலப்பையைக் கனவிற் கண்டால் புதிய பூமிச் சேர்க்கையை எதிர்பார்க்கலாம்.

907. நுகத்தடியை கனவிற் கண்டால் ஒரு நல்ல துணை விரைவில் கிடைக்கும்.

908. இஞ்சியைக் காண்பதோ, இஞ்சிச் சாற்றைப் பருகுவதோ நோய் வரப்போவதன் அறிகுறியாகும்.

909. இருட்டில் வெளியே செல்வதாகக் கனவிற் கண்டால், மறைவான செயல்களில் ஈடுபட நேரும் என்பதையும், அதனால் வரும் தொல்லைகளையும் காட்டும்.

910. பஞ்சைக் கனவிற் காண்பது சுபகாரிய வரவையும், உறவினர்களின் வருகையையும் காட்டும்.

911. பசையைக் கனவிற் காண்பது ஒருவரின் நெருக்கமான தொடர்பு வரப்போவதையும், அதனால் வரும் சிரமங்களையும் காட்டும்.

912. பாழடைந்த வீடு, இடிந்த வீடு போன்றவை கனவில் வந்தால் வாழ்விற் சரிவை எதிர்பார்க்க வேண்டும்.

913. உடும்பைக் கனவிற் கண்டால் மனவுறுதியுடன் முயன்று எண்ணிய காரியத்தில் வெற்றி பெறக் கூடும் என்பதைக் காட்டும்.

914. மலட்டுப் பசுவையோ மலட்டுப் பெண்களையோ கனவிற் காண்பது காரியத் தடங்கலையும் வளமைக் குறைவையும் கட்டுவதாகும்.

915. வீட்டுப் பொருள்கள், மரச்சாமான்கள் உடைந்து விடுவதாகவும் சிதைந்து விடுவதாகவும் கனவிற் காண்பது செய்யும் முயற்சிகளில் கேடு வரப்போவதையும், விபத்துக்கள் வரப் போவதையும் உணர்த்தும்.

916. பெண்கள், வளையல்கள் உடைந்ததாகவும், பொட்டுக் கலைந்ததாகவும் கனவிற் காண்பது, அவர்கள் கணவன்மாருக்கு ஆபத்தோ சுகக்கேடோ வரப்போவதை அறிவிக்கும்.

917. உப்பளத்தைக் கனவிற் காண்பது தொழில் விருத்தியையும் வருமானப் பெருக்கத்தையும் காட்டும்.

918. உப்பை வாங்குவதாகவோ கொடுப்பதாகவோ கனவிற் காண்பது வரப்போகும் ஏமாற்றங்களையும் சிரமங்களையும் காட்டுவதாகும்.

919. உழுந்தைக் கனவிற் காண்பதும் ஏமாற்றத்தையும் பொருள் அழிவையும் காட்டுவதுதான்.

920. திருவிழாக்களைக் கனவிற் காண்பது உறவினரின் பிரிவை அறிவிப்பதாகும்.

921. ஊமையைக் கனவிற் காண்பதும் பழகுவதும் செயல்களின் முட்டுப்பாட்டையும், வரவுகளின் தடங்கல் களையும் காட்டுவது ஆகும்.

922. ஊர்க் குருவியை கனவிற் கண்டால் பொருள் வரவையும், செய்யும் முயற்சிகளில் நன்மையையும், பலரின் ஆதரவையும் பெறக் கூடும்.

923. பிறர் ஏசுவதாகக் காண்பது வீணான அவதூறுகளுக்கு ஆளாவதை முன்னறிவிப்புச் செய்வதாகும்.

924. ஏரி நீர் நிரம்பி நிற்பதாகக் கனவிற் காண்பது நிறைவான செல்வ வசதியைக் குறிப்பதாகும். வாழ்க்கையில் சகல வசதிகளும் நிரம்பியிருப்பதைக் காட்டுவதும் ஆகும்.

925. ஏற்றத்தை கனவில் காண்பது செய்யும் பல முயற்சி களிலும் நிலவிய சங்கடங்கள் விலகி, ஏற்றமும் வரவும் உயர்வதைக் காட்டுவதாகும்.

926. கைகட்டி நிற்பதாகவோ, ஒடுங்கி நிற்பதாகவோ கனவில் காண்பது தோல்வியைக் குறிக்கும்.

927. பிறர் தம்முன் கைகட்டி ஒடுங்கி நிற்பதாகக் கனவிற் காண்பது எதிரிகளை வெற்றி காண்பதையும், செல்வ செல்வாக்குகளில் உயர்ச்சி வரப்போவதையும் காட்டும்.

928. ஒந்தியைக் கனவிற் காண்பது ஏமாற்றங்களையும் மோசங்களையும் எதிர்பார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கும்.

929. பாக்கு மரம், தென்னை மரம், பனை மரம், வாழை மரம் போன்றவைகளைக் கனவிற் காண்பது வளமைப் பெருக்கத் தையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும்.

930. கண் மயக்கம் ஏற்பட்டதாகக் கனவிற் கண்டால் ஏமாற்றுக்காரர்களால் வஞ்சிக்கப் படுவதை எதிர்பார்த்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

931. விபத்துக்களைக் கனவிற் காண்பது இடையூறுகளையும், ஆபத்துக்களையும் காட்டுவதாகும். தானே விபத்துக்கு உட்பட்டதாகக் காண்பது எதிர்பாராத ஒரு பெரிய ஆபத்தை அறிவிப்பதாகும்.

932. கட்டிலைக் கனவிற் காண்பதும், கட்டிலிற் படுத்திருப்பதாகக் கனவு காண்பதும் வரப்போகும் சுகவீனத்தை அறிவிப்பதாகும்.

933. கருடனைக் கனவிற் கண்டால் நோய்கள் பகைகள் விலகும். பணவரவும் பொருள் வரவும் ஏற்படும்.

934. கவிஞர்களைக் கனவிற் கண்டால் மேன்மையும் செல்வாக்கும் உயரும்.

935. மது விற்போரைக் கனவிற் காண்பது நம்பிக்கை மோசம் ஏற்படப் போவதைக் காட்டும்.

936. காக்கைகளைக் கனவிற் காண்பது வரப்போகும் விரயங்களையும் தொல்லைகளையும் காட்டும். இவை நெருக்கமான உறவினர், ஊரினர், நண்பர்கள் போன்றோரால் ஏற்படக் கூடும்.

937. காலிடறி வீழ்வதாகக் கனவிற் காண்பது செய்யும் தொழில்களில் வரப்போகும் தடுமாற்றத்தையும் நட்டத்தையும் காட்டுவதாகும்.

938. காளி கோயில், அம்மன் கோயில் போன்றவை கனவில் வந்தால் தெய்வகடாட்சம் ஏற்படுவதை அறிவிக்கும்.

939. காளான்களைக் கனவிற் கண்டால், நோய்கள் வரக்கூடும். போலி நண்பர்களால் செலவுகளும் நட்டங்களும் ஏற்படக் கூடும்.

940. கனவில் கிணற்றைக் கண்டால், சில நன்மைகள் ஏற்படவிருப்பதை அறிய வேண்டும். திருமணம் போன்ற சுபகாரியங்களும் ஏற்படலாம்.

941. கிணறு தோண்டுவதாகக் கனவு காண்பது புதிய முயற்சிகளால் அதிர்ஷ்டம் வரப்போவதை அறிவிக்கும்.

942. எதையும் விற்பதாகக் கனவு காண்பது வரப் போகும் கஷ்ட நிலையையே காட்டும். வியாபாரிகள் இப்படிக் கனவு கண்டால் வியாபார விருத்தி ஏற்படும்.

943. கிரீடங்கள் கனவில் தோன்றினால் வியாபாரம் தொழில் போன்றவற்றில் மிகுதியான விருத்தி ஏற்படும். புகழும் மேன்மையும் உயர்வும் சித்திக்கும்.

944. மலைக் குகைகளைக் கனவிற் காண்பது தீய பலன்களையே அறிவிக்கும்.

945. மலைக் குகைக்குள் போவதாகக் கனவு காண்பது சூழ்ச்சியில் சிக்கித் தவிக்க நேர்வதை அறிவிக்கும்.

946. குகைக்குள் இருப்பதாகக் கனவு கண்டால் திருமண யோகம் ஏற்படும்.

947. குங்குமம் கொடுப்பதாகவும் வாங்குவதாகவும் கனவிற் காண்பது லட்சுமி கடாட்சம் மிகுவதைக் காட்டுவதாகும்.

948. நீர் நிறைந்த குடத்தைக் கனவிற் காண்பது மங்கலமான சுபயோகங்களை அறிவிப்பதாகும்.

949. குடைகளைக் கனவிற் காண்பது அவற்றின் துணி நிறத்தைப் பொறுத்து யோகத்தைத் தருவதாகும். கறுப்புக் குடைகளைக் கண்டால் கெடுதலான பலன்கள் ஏற்படக் கூடும்.

950. தானியக் குதிரைக் கனவிற் காண்பது தனதானிய விருத்தியை அறிவிப்பதாகும்.

951. தன்னை ஒருவர் வணங்குவதைக் கண்டால் தன் நிலைமையில் உயர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்படும். தான் ஒருவரைக் கம்பிடுவதாகக் கண்டால் தாழ்ச்சியும் பண முடையும் ஏற்படக்கூடும்.

952. கனவில் மிகுதியான சிரிப்புக் குரல்களைக் கேட்டால் ஏளனத்துக்குரிய நிலைமை வரக்கூடும். மோசங்களுக்கும் இழப்புகளுக்கும் உட்பட நேரலாம்.

953. கனவில் அழுகைக் குரலைக் கேட்பது சந்தான விருத்தியையும், பொருள் வரவையும், குடும்ப சுபிட்சத்தையும் தருவதாகும்.

954. குன்றிமணிகளைச் சேர்த்துக் கூட்டி வைத்திருப்பதைக் காண்பது செல்வப் பெருக்கைக் காட்டும்; சிதறிக் கிடப்பதாகக் காண்பது தொழில்கள் சிதறிப்போக நேர்வதைக் குறிக்கும்.

955. கொன்றைப் பூக்களைக் கனவிற் கண்டால் விவகாரங்களில் வெற்றி ஏற்படும். உயர்வும் தனவிருத்தியும் உண்டாகும். புதிதான வளர்ச்சிகளையும் எதிர்பார்க்கலாம்.

956. கோபுரவாயிலைக் கனவிற் கண்டால் சிக்கல்கள் தீர்வதற்கு வழி பிறக்கும்.

957. கோபுர வாயிலுக்குள் நுழைந்து உள்ளே செல்வது போலக் கனவு கண்டால் சிக்கல்களும் சிரமங்களும் வரக் கூடும்.

958. உயரமான கோபுரத்தைக் கனவிற் கண்டால் செல்வ செல்வாக்குகளில் உயர்ச்சிகள் ஏற்படும்.

959. கோட்டை கொத்தளங்களைக் கனவிற் கண்டால் வழக்குகளில் ஈடுபட்டு நீதி மன்றங்களுக்குச் சென்று வருந்த நேரலாம்.

960. பாழடைந்த கோயில்களைக் கனவிற் காண்பது வரப்போகும் பல தாழ்ச்சிகளின் முன் அறிவிப்பாகும்.

961. சக்கரங்களைக் கனவிற் கண்டால் வாழ்க்கையும் தொழிலும் சிறப்பாக நடக்கும்.

962. சடைமுடியுள்ளவரைக் கனவிற் கண்டால் உலக விவகாரங்களிலும், ஆத்ம சிந்தனைகளிலும் முன்னேற்றம் காணலாம்.

963. சதங்கை ஒலியைக் கனவிற் கேட்டால் அம்பிகையின் அருளால் பலவகையான நன்மைகள் ஏற்படும்.

964. சத்திரம்,கோயில்மண்டபம்போன்றவற்றில்இருப்பதாகவோ படுத்திருப்பதாகவோ கனவிற் கண்டால் பலவகையிலும் முட்டுப்பாடுகள் ஏற்பட்டு வருந்த நேரிடும்.

965. சாணம் கனவில் வந்தால் நோய்கள் நீங்கும். தன தானிய விருத்திகள் ஏற்படும். சுபகாரிய முயற்சிகள் வெற்றியடையும். அமோக விளைச்சலும் ஏற்படும்.

966. சாந்துகள் கனவில் வந்தால் வெற்றியையும் செழுமையையும் அடையலாம், ஆனால் கறுப்புச் சாந்து சிக்கல்களையே அறிவிக்கும்.

967. எந்தப்பொருளும்சிந்திச்சிதறுவதுபோலக்கனவிற்காண்பது ஏற்படவிருக்கும் கஷ்டங்களையும், அழிவுகளையும் குறிப்பதேயாகும். உறவும் நட்பும் சிதறிப் போவதையும் இது உணர்த்தும்.

968. சுப காரியங்களிற் கலந்து கொள்வதாகக் கனவு கண்டால் துயரங்களையே எதிர்பார்க்க வேண்டும்.

969. முறத்தைக் கனவில் கண்டால் வெற்றியும் வளமையும் உண்டாகும். வெறும் முறமாகவோ அல்லது பழைய நைந்த மறமாகவோ இருந்தால் தொல்லைகளே ஏற்படக் கூடும்.

970. செக்கு (எண்ணெய் ஆட்டுவது) கனவில் வந்தால் சிக்கல் களால் துன்பப்பட்டு வருந்த நேரிடும்.

971. செங்கழுநீர்ப்பூவும் செந்தாமரைப்பூவும் லட்சுமி கடாட்சத்தைப் பெருகச் செய்யும்.

972. தம்பதிகளாக வருவோர் கனவில் தோன்றினால் குடும்ப விருத்தியும் தனதானியப் பெருக்கமும் ஏற்படக் கூடும்.

973. திருநீறு அணிவதாகவும் பெறுவதாகவும் காண்பது தெய்வக் கருணையால் இடர்கள் எல்லாம் விலகி நன்மைகள் பெருகப் போவதைக் காட்டுவதாகும்.

974. பலாப்பழத்தைக் கனவிற் காண்பது, கடினமான முயற்சிக்குப் பின்னர் அடையப்போகும் இனிமையான நன்மையைக் குறிக்கும்.

975. பலாச்சுளைகளைத் தின்பதாகக் காண்பது இனிய ஒரு சம்பவம் நிகழப்போவதை அறிவிப்பதாகும்.

976. கரும்பைக் கனவிற் காண்பது வேண்டியவர் உதவியால் ஏற்படும் நன்மையைக் குறிக்கும். சுபகாரியங்களையும் விரைவில் எதிர்பார்க்கலாம். இனிய தகவல்களும் வரக்கூடும்.

977. கரும்பைச் சாறு பிழிவதாகக் காண்பதும், கரும்புச் சாறை அருந்துவதாகக் காண்பதும் வரப்போகும் இனிய நல்ல பலன்களையே குறிப்பிடும்.

978. குலையோடுள்ள வாழை மரங்களைக் கனவிற் காண்பது சுபநிகழ்ச்சி விரைவில் நிகழப்போவதை உணர்த்தும்

நல்ல கனவாகும். குடும்பத்தில் புதிய குழந்தைப்பேறும் வாய்க்கலாம்.

979. இரயிலில், அல்லது விமானத்தில் செல்வது போலக் கண்டால், தொலை தூரப் பயணம் ஏதாவது விரைவில் ஏற்படும்.

980. பசுமையான புல்வெளியைக் காண்பது மிகவும் நல்ல கனவுதான். விரைவில் வீட்டிலே செல்வச் செழுமை ஏற்படும்; உடல் நலமும் சிறப்பாக அமையும்.

981. கட்டாந் தரையையோ, கரடுமரடான பாழ் நிலத்தையோ கனவிற் பார்ப்பது நல்ல கனவு ஆகாது, ஏதாவது இழப்போ நட்டமோ வரப்போவதைக் காட்டும். அதைப் பண்படுத்து வதாகக் கண்டால் எதிர்பாராத லாபம் கிடைக்கும்.

982. இளம் பெண்கள், பூச்சூடி அலங்கரிப்பதாகக் கனவிற் கண்டால் விரைவில் அவர்களுக்குத் திருமணம் வாய்க்கும்.

983. பூசாரிகளைக் கனவிற் காண்பது தெய்வ சோதனை ஏற்படும் என்று காட்டும். அவர்கள் சொல்லும் வாக்குகளுக்குத் தகுந்தபடி பலன்கள் ஏற்படக் கூடும்.

984. தெய்வ சந்நிதியில் அர்ச்சனைப் பிரசாதம் வாங்குவது போலக் கனவிற் காண்பது தெய்வங்களின் அருள் விரைவில் கிடைக்கப்போவதைக் காட்டும். இதனால் துன்பங்கள் விலகி நன்மைகள் ஏற்படும்.

985. வேப்ப மரத்தைச் சுற்றுவதாகக் காண்பது அம்மன் அருள் வரப்போவதைக் காட்டும். மணமான பெண்களானால் விரைவில் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கலாம்.

986. படம் எடுத்து ஆடும் ஒரு நல்ல பாம்பைக் கனவில் காண்பது தெய்வத்தின் நல்லருளைக் காட்டும். அதற்குப் பால் வார்ப்பதாகவும், அது அந்தப் பாலைக் குடிப்பதாகவும் கனவிற் காண்பது தெய்வம் உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கும் என்று உணர்த்துவதாகும்.

987. மகிழ்ச்சியான பெருங் கூட்டத்தைக் கனவிற் கண்டால், பேரும் புகழும் பெருகுவதைக் காட்டும். உறவினர் கூட்டமானால் சுபநிகழ்ச்சிகள் விரைவில் ஏற்படும்.

988. கூச்சலிட்டுக் கத்தும் ஆத்திரமடைந்த கூட்டத்தைக் கண்டாலும், அதிற் சிக்கித் தவிப்பதாகக் கண்டாலும், ஏதாவது தொல்லைகட்கு உள்ளாவதை அறிவிக்கும்.

989. சிறுவர்களையும் சிறுமிகளையும் கனவிற் காண்பது குழந்தைப் பேறில்லாதவர்களுக்குக் குழந்தைச் செல்வம் ஏற்படப் போவதைக் காட்டும்.

990. காகத்தைக் கனவிற் காண்பது விருந்தினர்களின் வரவைத் தெரிவிக்கும்.

991. திருடன் வருவது போலக் கனவிற் கண்டால், பொருள்களைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்த்துவதுதாகும்.

992. குரங்குகள் மேலே விழுந்து கடிப்பது போலக் காண்பது, தொழில் அல்லது பணியில் பகைவரால் துன்பம் ஏற்படப்போவதைக் காட்டும். இது ஆபத்துக்களையும் தெரிவிக்கும்.

993. சங்கின் முழக்கத்தைக் கேட்பது நோயாளிகளுக்கு நல்ல கனவல்ல. மற்றவர்களுக்கும் வேண்டியவர் ஒருவரின் பிரிவையே உணர்த்துவதாகும்.

994. தாரை தப்பட்டைகளின் ஒலியைக் கேட்பதும் நல்ல கனவாகாது. உறவினர் அல்லது நண்பருள் ஒருவர் விரைவில் மரணம் அடையப்போவதையே காட்டும்.

995. சுபமான மேளம் வாசிப்பது போலக் காண்பது சுப நிகழ்ச்சிகளின் முன் அறிவிப்பாகும்; நோயாளிகளுக்கு இது நல்லகனவல்ல.

996. மயானத்தைக் கனவிற் காண்பது அதிர்ஷ்டம் தரும் நல்ல கனவாகும். மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகளை எதிர் பார்க்கலாம்.

997. செந்தாமரைப் பூவைக் கண்டால் திருமகள் கடாட்சம் வாய்க்கும் செல்வப் பெருக்கத்தையும் எதிர் பார்க்கலாம். சுக வாழ்வும் அமையும்.

998. வெள்ளைத் தாமரைப் பூவைக் கனவிற் கண்டால் கல்வியில் வெற்றி வாய்ப்பை எதிர்பார்க்கலாம்.

999. மருந்துப் பாடில்களைக் கனவிற் காண்பது, நோய் ஏற்படப் போவதன் அறிவிப்பாகும். மருத்துவரையோ டாக்டரையோ கண்டாலும் உடல் நலம் கெடும் என்று தான் அறிய வேண்டும்.

1000. யானை துதிக்கையால் ஆசீர்வாதம் பண்ணியது போலக் காண்பது, எல்லாத்துன்பங்களும் விலகி, நன்மையும் செழுமையும் ஏற்படப் போவதை அறிவிப்பதாகும்.

1001. பிரகாசமான ஒளி வீசுவது போலக் கண்டால், உங்கள் வாழ்விலும் பிரகாசமான நல்ல காலம் தொடங்கப் போகின்றது என்று பகிழலாம்.

சுபம்

★★★

1. குடகு
2. தமிழகம்
3. சதுரகராதி
4. வள்ளுவம்
5. கோபுர தீபம்
6. நீதி நூல்கள்
7. மொழிவளம்
8. கல்வி நிலை
9. இசைத்தமிழ்
10. ஔவையார்
11. முத்தொள்ளாயிரம்
12. லெனின் வாழ்கிறார்
13. பழந்தமிழர் நாகரிகம்
14. புகழேந்தி நளன் கதை
15. இலக்கியக் கட்டுரைகள்
16. வெளிச்சத்தை நோக்கி...
17. பாரதியின் புதிய ஆத்திசூடி
18. தமிழர் திருமணத்தில் தாலி
19. சங்கப் புலவர் சன்மார்க்கம்
20. கனவுகளின் பலாபலன்கள்
21. பாரதிதாசனின் சிறு கதைகள்
22. சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
23. அண்ணா போற்றிய பெருமக்கள்
24. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு
25. புதுமைப்பித்தன் கதைகள் விமர்சனங்களும் விஷமதனங்களும்
26. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
27. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

T143

தமிழ் வளர்ச்சித் துறை 70.00